



கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI • 12.09.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்

தி.மு.க.வா...
அ.தி.மு.க.வா?



ஜினிக்கு
20 கோடி!

எந்திரன் ஸ்பெஷல்!


மதன் கார்க்கி ▢ சாபுசிரில் ▢ ரத்னவேலு

A Happy baby story begins...

Born Babies®

A CHAIN OF BABY STORES

Nobody care better than Mother and Born babies® too....



visit us and avail vip offer card* for pregnant women and born babies

*conditions apply

CHENNAI

NUNGAMBAKKAM
18, Lokesh Towers, Kodambakkam High Road,
Nungambakkam, Ch - 34. 044 - 2825 0067
Customer Care No : 97109 22230

ANNA NAGAR WEST
334/2, 2nd Avenue, Anna Nagar West,
Ch - 40, (Opp. To Nilgiris) 044 - 2616 2225
Customer Care No : 99419 11120

VELACHERY
1, 1st Main Road, Lakshmi Nagar, 100 Feet Bye-Pass,
Velachery, Chennai - 600 042. 044 - 22591222
Customer Care No : 95516 98098

COIMBATORE
69, T.V. Samy Rd East, R.S.Puram,
Coimbatore - 2. 0422 - 254 1626, 436 6455
Customer Care No : 98438 88811

COCHIN
Rubicon Building, South Over Bridge, Valanjambalam,
Cochin - 16. 0484 - 235 8818, 403 0220
Customer Care No : 98951 08686

HYDERABAD
LG-15, City Center Mall, Road No. 1, Banjara Hills,
Hyderabad - 500 034. 040 - 40033391
Customer Care No : 98488 33391

Born Babies For all Customer Who Can't Compromise on Quality www.bornbabies.in

Shvaa



கல்கி

12.09.2010

அடுத்த இதழ்...

ஸ்விம்மிங் ஸ்பெஷல்

ஸ்பெஷல் பக்கங்கள்



யுகம்

ஒளிப்பதிவாளர் பவன் இயக்கும் படம் 'யுகம்'. ''ஒரு யுகம் என்று பேச்சு வழக்கில் நாம் சொல்வோம். குடும்ப வாழ்வில் சந்தேகம் என்ற அடி விழுந்து விட்டால், ஒவ்வொரு நொடியும் ஒரு யுகம்தான். இதுதான் படத்தின் மையம்'' என்கிற பவன் பிரபல ஒளிப்பதிவாளர் ஜீவாவின் உதவியாளர். ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்பில் நிகழும் கதை என்பதால் பாடலுக்காக மட்டுமே ஊட்டிக்குப் பயணித்திருக்கிறார்கள். மற்றபடி ஃப்ளாட்டுலயே படம் முடிந்துடும் என்கிறார். தீப்தி, ராகுல்மாதவ் நடிக்கும் இப்படத்தை ஏஸி என்டர்டெயின்மெண்ட் தயாரிக்கிறது!



''கௌதமனைப் பார்க்கையில் எனக்குப் பொறாமையாக இருக்கிறது'' என்றார் கமல்ஹாசன். யார் இந்த கௌதமன்? ''மகிழ்ச்சி'' படத்தின் இயக்குநர் கதாநாயகன். கௌதமன் கதாநாயகன் ஆனதற்காக கமல் பொறாமைப்படவில்லை. அவர் நடிக்கும் கதைக்காகப் பொறாமைப்படுகிறேன் என்கிறார். சாகித்ய அகாதமி விருது பெற்ற நீல.பத்மநாபனின் 'தலை முறைகள்' நாவலைத்தான் மகிழ்ச்சி என்ற பெயரில் படமாக எடுத்து முடித்து இசை வெளியீட்டு விழாவையும் நடத்தியிருக்கிறார் கௌதமன். கௌதமனுக்கு ஜோடியாக 'அங்காடித் தெரு' புகழ் அஞ்சலி நாயகி. ''நாவலைப் படமாக எடுப்பவர்களை சிறுபான்மைக் கூட்டம், யதார்த்தம் தெரியாதவர்கள் எனக் கோலிவுட்டில் கிண்டல் செய்வார்கள். ஆனால், அவர்களின் கேலியைப் பொய்யாக்கும்படி சினிமா ரசிகனின் ரசனை மாறி வருகிறது. வியாபாரச் சிறையில் எங்களை நாங்களே அடைத்துக் கொண்டு அனைத்துச் சாவிகளையும் வெளியே போட்டவர்கள் நாங்கள். ஆகையால் கம்பி வழியாக கௌதமனைப் பொறாமையோடு பார்க்கிறேன்'' என்றார் கமல்ஹாசன். வ.கௌதமன் ஏற்கெனவே சந்தனக்காடு, ஆட்டோ சங்கர்... ஆகிய தொடர்களை மக்கள் டி.வி.க்காக இயக்கியவர். இவருக்கு கௌதமன் என்று பெயர் வைத்தது பெரியாராம். பெருமைப் படுகிறார் கௌதமன்!





கமல் பொறாமை... கௌதமன் பெருமை!

தென்காசி பக்கத்துல

“தப்பு செய்தவர்களை ஊரை விட்டே ஒதுக்கி வைக்கும் பழக்கம் இன்றளவும் தமிழகக் கிராமங்களில் பார்க்கலாம். ஆனால், தப்பே செய்யாத ஒருவனைப் பார்த்து ஊரே ஒதுங்கி நிற்கிறது. இதுதான் ‘தென்காசி பக்கத்துல’ படத்தின் உயிர்ச்சரடு” என்கிறார் இயக்குநர் ஏ.ஆண்டனி. “1970களில் கதை நடக்கிறது. அதற்கேற்ப லொக்கேஷனுக்காக நிறைய உழைத்திருக்கிறோம்” என்கிற ஆண்டனி, ‘என் தங்கச்சி படிச்சவ’, ‘நல்ல காலம் பொறந்தாச்சு’... போன்ற படங்களுக்குக் கதை வசனம் எழுதியவர், இப்படத்தின் மூலம் இயக்குநராகிறார்.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**
பொறுப்பாசிரியர் :
ஆர்.வெங்கடேஷ்
உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்
தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899
ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ராமதாஸ் பளீர்

பா.ம.க.வுக்கு வெற்றி வாய்ப்புள்ள முப்பது தொகுதிகளைத் தேர்ந்தெடுத்து அங்கே 'மைக்ரோ பிளானிங்' என்ற புதிய அணுகுமுறை மூலம் வாக்காளர்களை வளைத்துப்போட களத்தில் குதித்துவிட்டார் டாக்டர் ராமதாஸ். இந்தச் சூழலில் தி.மு.க. ஆட்சியைப் பற்றியும் பா.ம.க.வின் கூட்டணி நிலைப்பாடு குறித்தும் தெரிந்து கொள்ள அவரைச் சந்தித்தோம்...



"ராஜ தந்திரமல்ல... துரோகம்!"

அது என்ன மைக்ரோ பிளானிங்?

"ஒவ்வொரு வாக்காளரின் மனத்தை மாற்றக்கூடிய வகையில், ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் களப் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி கொடுத்து, களப்பணியாளர் ஒவ்வொருவரும் நூறு வாக்காளர்களுடன் தேர்தல் வரை நெருங்கிப் பழகி, அவர்களைப் புரிந்து கொள்வார்கள். குடும்பத்தில் ஒருவராகப் பழகுவார்கள். தேர்தலில் பா.ம.க.வுக்கோ அதன் கூட்டணி கட்சிகளுக்கோ வாக்களிக்கும் மனநிலைக்கு அந்த வாக்காளரைக் களப்பணியாளர் தயார் செய்வார். இந்த அணுகுமுறை பென்னாகரத்தில் பரிசோதித்துப் பார்த்துத் திருப்தியளித்த ஒரு முறையாகும்."

எது போன்ற பிரசாரத்தைக் களப்பணியாளர் செய்வார்?

''குடியைக் கெடுக்கும் குடியை ஒழித்துக்கட்ட வேண்டியதன் அவசியத்தை விளக்குவார். சாராயம் இல்லாத கிராமம், நகரம், உருவாக வேண்டும் என்பதைச் சொல்லுவோம். புகை, போதை வஸ்துகளால் ஏற்படும் தீமைகளைச் சொல்லி அந்தப் பழக்கங்களில் இருப்பவரை மீட்போம். இந்தப் பணிகளைப் பத்தாண்டுகளாகச் செய்து வரும் ஒரே கட்சி பா.ம.க.தான். தமிழ் நாட்டில் லாட்டரிக்குத் தடை என்கிறார்கள். ஆனால் கள்ளத்தனமாக லாட்டரி வியாபாரம் நடக்கிறது. இதை அரசும் கண்டுகொள்ளாமல் (?) இருக்கிறது. விவசாயிகளின் வாழ்க்கைக்கு அடிப்படை அவர்களது நிலங்கள்தான். ஆனால் சிறப்புப் பொருளாதார மண்டலம் தொழிற்சாலைகள், வீட்டு வசதி ஆகிய காரணங்களுக்காக நிலங்களை அடிமாட்டு விலைக்கு ஆர்ஜிதம் செய்கிறார்கள். இதற்குக் காரணம் மத்திய, மாநில அரசுகளின் தவறான கொள்கைகள்தான். எனவே, அவரவர்கள் வாழ்வு மேம்படும் வகையில் திட்டங்கள் உருவாக்க வேண்டும். மக்களை அதற்கான போராட்டத்துக்குத் தயார் செய்வோம். நீர் ஆதாரத்தையும் சுற்றுச்சூழலையும் காவு கேட்கும் மணல் கொள்ளையை எதிர்த்துக் குரல்கொடுக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துவோம்.''



முக்கிய எதிர்க்கட்சியான அ.தி.மு.க., தி.மு.க.வை விமர்சிக்கும்போது குடும்ப அரசியல், குடும்ப அதிகாரம், ஊழல் போன்றவற்றை மையமாக வைத்துப் பேசுகிறார்கள். நீங்கள் அவற்றைத் தொடுவதில்லையே...?

''தனிநபர் தாக்குதல் என்றைக்குமே செய்ததில்லை. 42 வருடகால திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் தமிழகம் வளர்ச்சியைப் பெறவில்லை; முடங்கிப் போய்விட்டது. இவர்களது ஒரே சாதனை குடும்பத்துக்கு ஒரு குடிகாரனை உருவாக்கியதுதான். தமிழக அரசின் திட்டக் கமிஷன் அறிக்கைப்படி நான்கில் ஒரு பங்கு தமிழர்கள் மாதம் 351 ரூபாய்க்குக் கீழ்தான் வருமானம் பார்க்கிறார்கள். இலவசங்கள் கொடுத்தால் அது வளர்ச்சிக்கு உதவாது.

வீட்டுக்கு ஒருவராவது அரசு அல்லது தனியார் துறையில் வேலை செய்ய வேண்டும். மக்கள் தங்கள் சுய உழைப்பில் முன்னேறியும், அவர்களது வாங்கும் சக்தியும் அதிகரித்தால்தான் உண்மையான வளர்ச்சி. இங்கே ஏழைகள் மேலும் அதிகமாகிறார்கள்; பணக்காரர்களின் எண்ணிக்கையும் கூடுகிறது. இதுவா வளர்ச்சி? இதுபோன்ற ஆக்கபூர்வமான விஷயங்களைச் சுட்டிக் காட்டிதான் 2001 - 2006 ஜெயலலிதா ஆட்சியிலும், 2006 - 2009 தி.மு.க. ஆட்சியிலும், பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகச் செயல்பட்டோம். ஆனால், அதைப் பிடிக்காத கருணாநிதி எங்களைக் கூட்டணியிலிருந்து விலக்கி விட்டார்.''

ஜெயலலிதா கூட்டங்களுக்கு மக்கள் திரண்டு வருவதால், மக்களிடம் 'ஆட்சியை மாற்றும் எண்ணம்' வந்திருப்பதாக அ.தி.மு.க.வினர் சொல்கிறார்களே!



''அ.தி.மு.க.வினர்தான் திரண்டு வருவதாக ஊடகங்கள் வாயிலாகத் தெரிந்துகொண்டேன். பொதுவாக மக்கள் இப்போது எதையும் வெளிப்படையாகப் பேசுவதில்லை. அவர்கள் மனநிலையைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. கட்சிக்கு அப்பாற்பட்ட

நடுநிலையாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் கணிக்க முடிவதில்லை. தவிர பெரும்பாலான மக்களுக்கு அன்றாட அரசியல் நிகழ்வுகள்கூட தெரிவதில்லை. இலவசத் தொலைக்காட்சியில் செய்திகளை விட சினிமாக்களையே பார்க்கிறார்கள்.''

தி.மு.க. உங்களைக் கூட்டணியில் சேர்த்துக் கொண்டதாக அறிவித்ததே...?

''அவர்கள் சொன்னார்கள். ஆனால் நாங்கள் இதுவரை ஏற்றுக்கொள்ள வில்லையே!''

ராஜ்யசபா ஸீட் கொடுக்காததுதான் விலகி நிற்பதற்குக் காரணமா?

''எங்களுக்கு 2010இல் ராஜ்யசபா ஸீட் கொடுக்கப்படும் என்று 2008இல் தி.மு.க. சொன்னது. ஆனால், 2010இல், ''இப்போது இல்லை. 2013இல் கொடுக்கிறோம் என் றார்கள். 2011 தேர்தலுக்குப் பிறகு என்ன நிலைமை என்று தெரியாத நிலையில் 2013இல் கொடுப்போம் என்பது என்ன நியாயம்? இப்போதுள்ள தி.மு.க. ஆட்சியில் 96 எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். அவர் களில் 40 பேர் வெற்றி பெற நாங்கள் தான் காரணம். மெஜாரிட்டி குறைவான நிலை வந்ததும் 'ஆட்சியில் பங்கு வேண்டாம்; வெளியிலிருந்து ஆதரவு தருகிறோம்' என்று நாங்கள்தான் முதலில் சொன்னோம். நான் இதைச் சொன்னதற்காக எங்களை காங்கிரஸ் தலைவர்கள் கடிந்துகொண்டார்கள். 'நீங்கள் வேண்டாம் என்றதால் நாங் களும் ஒதுங்க வேண்டியதாயிற்று'. இல்லையேல் கூட்டணி அமைச்ச ரவை அல்லவா வந்திருக்கும் என்றார்கள். இன்றைக்கு மேல் சபை வருவதற்கு முக்கிய கார ணம் பா.ம.க. கொடுத்த ஆதரவுதான். இவற்றை யெல்லாம் மறந்துவிட்டு, கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் நம்பிக்கைத் துரோகம் செய் தவர் கலைஞர். இதை ராஜதந்திரம் என்று சொல்கிறார்கள் சிலர். இது ராஜதந்திரம் அல்ல; ராஜ துரோகம்!''

அ.தி.மு.க. உங்களுடன் நெருங்கி வருகிறதா?

''பென்னாகரம் தேர்தல் சமயத்தில் எங்களுக்கு ஆதரவும் ராஜ்ய சபா ஸீட்டும் தருவதாகச் செய்தி அனுப்பப்பட்டது. ஆனால், நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது அ.தி.மு.க. தரப்பிலிருந்து எந்த விதமான தகவலும் இல்லை.''

தே.மு.தி.க.வுடன் கூட்டணி அமைக்கும் வாய்ப்பு உண்டா?

''இதுபோன்ற ஒரு கேள்விக்கு 'அரசி யலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது; எதிரிகளும் கிடையாது' என்றேன். பொதுவாக ஒரு எதிர்க்கட்சி மற்றொரு எதிர்க்கட்சியை விமர்சனம் செய்வது நாகரிகமாகாது. அந்த அடிப்படையில் ஆளும்கட்சியை நோக்கி எங்கள் விமர்சனங்கள் அமைகின்றன.''

தி.மு.க. கூட்டணியா; அ.தி.மு.க. கூட் டணியா?

''இப்போது நாங்கள் எந்தக் கூட்டணியிலும் இல்லை. எங்கள் தலைமையில் சமூக நீதிக் கூட் டணி அமைக்கக்கூட வாய்ப் பிருக்கிறதே. தமிழகத்தில் தேர்தல் நேரத்தில் எது வேண்டு மானாலும் நடக்கலாம். சரியான நேரத்தில் முடிவெடுக்க கட்சி எனக்கு அதிகாரம் கொடுத் திருக்கிறது. தனித்து நிற் கவும் தயங்க மாட் டோம்.''

- ப்ரியன்



கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை



அன்புடன் அழைக்கிறது

அமரர் கல்கி பிறந்த நாள் விழா!

செப்டெம்பர் 9, 2010
(வியாழக்கிழமை)

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு விருதும்
பரிசும் பெறும் இளம் கலைஞர்கள்:

செல்வி அம்ருதா முரளி,

திருமதி சாருலதா ராமானுஜம்

தலைமையுரை:

லீலா ஸாம்ஸன்

இயக்குனர், கலாக்ஷேத்திரா, சென்னை

இன்னிசைக் கச்சேரி:

அம்ருதா முரளி - பாட்டு

சாருலதா ராமானுஜம் - வயலின்

ஜே.வைத்தியநாதன் - மிருதங்கம்

என்.குருபிரசாத் - கடம்

பாரதிய வித்யாபவன் அரங்கம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004

மாலை : 6.00 மணி

அனைவரும் வருக!

ஓ பக்கங்கள்



ஞாநி


பத்தாயிரம் ஆட்டோ பர்மிட்களை வழங்கி விழா நடத்திய முதல்வர் ஆட்டோ டிரைவர்கள் அரசு வளாகங்களில் சமமான குடிமக்களாக நடத்தப் படுவதற்கான ஒற்றை வாக்கிய உத்தரவை மியூசியம் இயக்குநருக்கு அனுப்புவாரா?

இந்த வாரம் எழும்பூர் மியூசியம் அரங்கத்தில் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். இந்த அரங்கம் சென்னையிலேயே எனக்கு மிகவும் பிடித்தமான அரங்கம். அரைவட்ட வடிவில் கேலரி அமைப்பில் பார்வையாளர்கள் அமர்ந்திருக்க, அவர்கள் நடுவில் வந்து நடிக்கும் உணர்வை ஏற்படுத்துவது போன்ற மேடை அமைப்பு இருக்கும். பல வரலாற்றுச் சிறப்புகள் மிக்க அரங்கம். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இதைக் கட்டுவதற்காகச் சிறப்பு லாட்டரி குலுக்கல் நடத்திப் பணம் திரட்டிக் கட்டப்பட்டது. சிந்தாதிரிப்பேட்டை சென்னையின் கலாசார மையங்களில் ஒன்றாக இருந்த ஐம்பதுகளில், இந்த அரங்கத்தில்தான் பல சபாக்கள் நாடகங்களை நடத்தி வந்தன. தமிழ்நாட்டின் மூத்த, மறைந்த கலைஞர்கள் பலர் இதில் நடித்திருக்கிறார்கள். 1978இல் எங்கள் பரீக்ஷா நாடகக் குழுவின் முதல் நாடகம் இங்கேதான் நடந்தது. அதன்பிறகு சுமார் பத் தாண்டுகளுக்கும் மேல் எங்கள் குழு இந்த அரங்கில்தான் நாடகங்களை நிகழ்த்துவது வழக்கம். 1984ல் ஒரு நாள், இந்த அரங்கில் எங்கள் நாடகத்தின் தொடக்கத்தில்தான் ஒரு மாலை மாற்றல், ஓர் அறிவிப்பு, வந்தவர்கள் அனைவருக்கும் ஒரு கப் காபி என்ற மூன்றே அம்சங்களுடன் என் திருமணம் நடந்தது. தொண்ணூறுகளில் இந்த அரங்கத்தின் வாடகை மிக அதிகமாக்கப்பட்டதும், எங்களால் இங்கே நாடகம் நிகழ்த்த முடியாமல் போய்விட்டது. எங்கள் குழுவின் மூத்த உறுப்பினர்கள் எல்லாருக்கும் இந்த அரங்கம் எங்கள் வீடு போல சகஜமாக, மனத்துக்கு நெருக்கமாக எப்போதும் இருந்தது. ஒவ்வொரு முறை இந்த அரங்குக்குச் செல்ல நேர்ந்தாலும், எனக்குப் பழைய நினைவுகளின் இனிமையுடன் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இந்த முறை சென்றபோது முதல்முறையாக எனக்குப் பெரும் வருத்தத்தை அளித்தது மியூசியம் அரங்கம். காரணம்







ஆட்டோ டிரைவர் ரசிகர் இல்லையா?

அங்கே நடைமுறையில் இருக்கும் விசித்திரமான ஒரு விதிதான்.

அங்கே அன்று நடந்த மேற்கத்திய சேர்ந்திசை நிகழ்ச்சிக்கு நானும் என் ஒரு தோழியும் சென்றிருந்தோம். எங்களிடம் இன்னொரு டிக்கட் இருந்தது. ஆட்டோ டிரைவரான எங்கள் குடும்ப நண்பர் ஜான்சன் எங்கிருக்கிறார் என்று ஃபோனில் கேட்டதில் அவர் அருகில் இருப்பதாகச் சொன்னார். அவரைக் கூப்பிட்டதும், அவரும் வருவதாகச் சொன்னார்.

சிறிது நேரத்தில் ஜான்சனிடமிருந்து ஃபோன் வந்தது. அவரை மியூசியம் வளாகத்துக்குள்ளே இருக்கும் கட்டணப் பார்க்கிங் ஏரியாவில் ஆட்டோவை விட அனுமதி இல்லையென்று கேட் கீப்பர்கள் தடுக்கிறார்கள் என்றார். உடனே நான் அரங்கிலிருந்து வெளிக்கவர் கேட்டுக்குச் சென்றேன். பயணிகளை அழைத்து வரும் ஆட்டோவாயிருந்தால், உள்ளே பயணியை விட்டுவிட்டுத் திரும்பி வெளியே செல்லவேண்டுமென்ற விதி சரியானதுதான் என்று நானும் ஒப்புக்கொண்டேன். இதே விதி டூரிஸ்ட் வண்டிக்கும் டிராவல்ஸ் வண்டிக்கும், கால் டாக்சிக்கும் உண்டா என்றால் கிடையாதாம்.


ஜான்சன் பயணிகளை அழைத்து வரும் ஆட்டோ காரராக வரவில்லை. மியூசியம் அரங்கில் நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறார். அவரைப் போலவே நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் மற்றவர்கள் வந்த கார்களையும் மோட்டார் சைக்கிள்களையும் வளாகத்தின் உள்ளே இருக்கும் கட்டணப் பார்க்கிங் ஏரியாவில் நிறுத்தியிருக்கிறார்கள். ஜான்சனிடம் காரோ மோட்டார் சைக்கிளோ இல்லை. அவரிடம் இருப்பது ஆட்டோதான்; புத்தம்புது சொந்த ஆட்டோ! அதை மட்டும் அனுமதிக்க முடியாது என்று கேட் கீப்பர்கள் கடுமையாகச் சொன்னார்கள்.

இது நியாயமில்லை என்று அவர்களிடம் சொன்னேன். நாடகத்துக்கோ கச்சேரிக்கோ,

பார்வையாளராக ரசிகராக வரும் ஒருவர் ஆட்டோகாரராக இருந்தால் அவர் தம் வண்டியில்தான் வருவார். அதை பார்க்கிங்கில் அனுமதிக்கத்தான் வேண்டும். பயணிகளை அழைத்து வந்து விட்டுச் செல்லும் ஆட்டோகாரர்களை வெளியேறச் சொல்வது போல, டிராவல்காரரையும், கால் டாக்சியையும் கூடத்தான் சொல்ல வேண்டும் என்று வாதிட்டேன். அங்கிருந்த ஐந்து கேட் கீப்பர்களும் ஒப்புக்கொள்ளவே இல்லை.

இந்த வாரக் கேள்வி?

எம்.பி.கள் சம்பள உயர்வு மசோதா, அமெரிக்காவுக்குச் சாதகமான அணு விபத்து இழப்பீடு உச்சவரம்பு மசோதா ஆகியவற்றை நிறைவேற்றுவதில் காட்டிய ஆர்வத்தையும், அதற்காக பாரதிய ஜனதா, லாலு யாதவ், முலாயம் யாதவ்களுடன் சமரசம் செய்த சுறுசுறுப்பையும் பிரதமர் மன்மோகன்சிங் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவில் மட்டும் காட்டாதது ஏன்?



இதுதான் ரூல். நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்றார்கள். உங்கள் மேலதிகாரியின் ஃபோன் நம்பரைக் கொடுங்கள். நான் அவருடன் பேசுகிறேன் என்று கேட்டேன். உனக்கு எதுக்குடா அதையெல்லாம் தரணும் என்றார் ஒருவர்.

என் ரத்தம் கொதித்தது. மியூசியம் வளாக வாசல் கேட்டுக்குக் குறுக்கே சாலையில் படுத்தேன். மேலதிகாரியை இப்போது வரச் சொல்லுங்கள் என்று படுத்தபடியே சொன்னேன். அந்த கேட் கீப்பர்கள் வந்து என்னைக் கையைப் பிடித்து எழுப்பி உட்காரவைத்து, தகராறு செய்யாமல் போ, யாரையும் அழைக்க முடியாது, ஃபோன் நம்பரையும் தர முடியாது என்று முரட்டுத்தனமாகச் சொன்னார்கள்.

இந்த வாரச் சிந்தனைக்கு:

எந்தக் குற்றமானாலும் மரண தண்டனை தீர்வாகாது என்பதே என் கருத்து. தர்மபுரியில் பஸ்ஸை எரித்து மாணவிகள் சாவதற்குக் காரணமாயிருந்த அ.தி.மு.க.வினருக்கும் அது பொருந்தும். அதிக பட்சத் தண்டனையாக ஆயுள் தண்டனை மட்டுமே தரப்பட்டிருக்க வேண்டும்.

நண்பர் ஜான்சன் நான் சாலையில் குறுக்கே படுத்ததில் பதறிப்போய், தான் நிகழ்ச்சிக்கே வரவில்லை என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். கேட்கீப்பர்களில் இருவரின் பெயர்களை அவர்கள் சீருடையில் இருந்த பெயர் அட்டையிலிருந்து குறித்துக்கொண்டேன். மீதி இருவரில் ஒருவர் டியூட்டி மாறுகிற நேரமோ என்னவோ, சிவில் உடையில் இருந்தார். இன்னொருவர் தன் பெயர் அட்டையைக் கையால் மறைத்துக் கொண்டார்.

அன்றைய தினம் முதல்முறையாக என்னால் இசையை ரசிக்க முடியாமல் போயிற்று. இசையில் மனம் ஈடுபடவே இல்லை. ஆட்டோ டிரைவர் என்பதற்காக ஒரு பார்வையாளர் பாரபட்சமாக நடத்தப்படும் அநீதியே உறுத்திக்கொண்டிருந்தது. இப்போது மியூசியத்தின் இயக்குநருக்கு இது பற்றிக் கடிதம் எழுதியிருக்கிறேன். இதே வளாகத்தில்தான் கன்னிமாரா நூலகமும்

இந்த வாரப் பூச்செண்டு!

ஆந்திர மாநில வாரங்கல்லில் காக்கேத்திய பல்கலைக்கழகத்தின் சட்டப் படிப்பு தேர்வு எழுதும்போது பிட் அடித்த ஐந்து மாவட்ட சிவில் நீதிபதிகளைத் தயக்கமில்லாமல் பிடித்துக்கொடுத்து இடை நீக்கம் செய்ய வைத்த தேர்வுக் கண்காணிப்பாளருக்கு இ.வா.பூ.




இருக்கிறது. ஒரு ஆட்டோ டிரைவர் நூலகத்துக்கு வந்து படிக்க விரும்பினால், வளாக பார்க்கிங் ஏரியாவில் தமது ஆட்டோவை நிறுத்த முடியாது. மியூசியம் அரங்கத்துக்கு நிகழ்ச்சிப் பார்வையாளனாகத் தமது ஆட்டோவில் வரமுடியாது. ஆனால், புத்தகங்கள், இசை, நாடகம், கலைகள் போன்றவற்றில் ஆர்வமும் விருப்பமும் உள்ள பல ஆட்டோ டிரைவர்களை எனக்குத் தெரியும். காரிலும் பைக்கிலும் வருபவருக்கு ஒரு விதி, ஆட்டோவில் வருபவருக்கு இன்னொரு விதி என்பது என்ன சமூக நீதி?

பல ஆட்டோ டிரைவர்கள் தங்கள் தொழிலில் தவறுகள் செய்கிறார்கள் என்றால் அதற்காகப் பொது இடங்களில் அவர்களுக்கான சம உரிமையை மறுக்கமுடியுமா? மோசடி செய்கிற வக்கீல்கள், டாக்டர்கள், ஆடிட்டர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் கூடத்தான் இந்தச் சமூகத்தில் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் காரில் மியூசியம் வளாகத்துக்குள் போய் பார்க்கிங் செய்யலாமென்றால் ஒரு ஆட்டோ டிரைவர் மட்டும் ஆட்டோவுடன் வரக்கூடாதா?

செக்யூரிட்டி கார்டுகளாக/கேட் கீப்பர்களாக இருப்பவர்கள் பெரும்பாலும் சுயபுத்தியற்ற இயந்திரங்கள். விதிகளை விதித்தவனைவிடக் கடுமையாகப் பிரயோகித்து, சாதாரண மக்கள் மீது அதிகாரம் செலுத்துவதில் அற்ப சந்தோஷம் காணக்கூடிய வக்கிர மனநிலை இவர்களில் பலருக்கு இருக்கிறது. விதி விலக்குகள் உண்டு. விதியை அவர்கள் தளர்த்த முடியாது என்கிறபோது அவர்களுடைய மேலதிகாரியுடன் தொடர்புகொள்ள பொதுமக்களைத் தடுக்க அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. மியூசியம் போன்ற பொது இடங்களில் கேட் கீப்பர் இடத்துக்கு அருகேயே, புகார் செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய மேலதிகாரியின் ஃபோன் எண்கள் அடங்கிய அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட வேண்டும்.

இந்த வார வேண்டுகோள்

இன்னும் சில வாரங்களில் தமிழ் நாட்டின் சூப்பர் ஸ்டாரும் சூப்பர் தயாரிப்பாளரும் வழங்கும் 'எந்திரன்' படம் வெளியாக இருக்கிறது. சட்டப்படி 50 ரூபாய் டிக்கட்டை 500 ரூபாய்க்கு விற்பது குற்றம். ஆனால் நடைமுறையில் மெகா பட்ஜெட் படங்களுக்கு அப்படித்தான் நடக்கிறது. தினசரி சுமார் ஆயிரம் காட்சிகள் வீதம் முதல் மூன்று நாட்களில் மட்டும் மூவாயிரம் காட்சிகளில் மொத்தம் முப்பது லட்சம் பார்வையாளர்களிடமிருந்து இப்படி அதிகப்படியாக வசூலிக்கக்கூடிய தொகை சுமார் 120 கோடி ரூபாய்! இந்த மாபெரும் குற்றம் நடக்காமல் தடுக்க, பொது வாழ்வில் நேர்மை பற்றி அவ்வப்போது பஞ்ச் டயலாக் பேசும் நடிகர் ரஜினிகாந்த் முதல்வரிடம் பேசி காவல் துறையை முடுக்கிவிட்டு சட்டப்படியான டிக்கட் கட்டணம் மட்டுமே வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கோடிக்கணக்கான சினிமா ரசிகர்களின் சார்பில் வேண்டுகோள்



வைக்கிறேன். (யார்கிட்ட என்ன வேண்டுகோள் வைக்கறதுன்னு ஒனக்கு அறிவே கெடையாது என்று என் கணினி எலி முணுமுணுக்கிறது)

மியூசியம் இயக்குநரிடமிருந்து என்ன பதில் வரும் என்று உங்களோடு நானும் எதிர்பார்க்கிறேன். அவருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை முதலமைச்சருக்கும் அனுப்பியிருக்கிறேன். பத்தாயிரம் ஆட்டோ பர்மிட்டுகளை வழங்கி விழா நடத்திய முதலமைச்சர், ஆட்டோ டிரைவர்கள் அரசு வளாகங்களில் சமமான குடிமக்களாக நடத்தப்படுவதற்கான ஒற்றை வாக்கிய உத்தரவையும் மியூசியம் இயக்குநருக்கு அனுப்புவார் என்று எதிர்பார்க்கிறேன்.

எந்திரன் ஸ்பெஷல்

"அரிமா... அரிமாவில்... மிரண்டேன்!"




'எந்திரன் பத்தி இப்போ எதையும் சொல்லக்கூடாதே!' தயக்கத்துடன் பேசுகிறார் படத்தின் ஒளிப்பதிவாளர் ரத்னவேலு. எல்லோரும் செல்லமாக இவரை 'ராண்டி' என்று கூப்பிடுகிறார்கள். சேது, நந்தா, ஜெயம், பேரழகன், திருமலை, வாரணம் ஆயிரம்... என்று இவரது ஒளிப்பதிவு பேசப்பட்ட படங்களின் பட்டியல் நீளமானது. எல்லாமே பெரிய ஹிட்ஸ். இனி ஓவர் டு ரத்தின வேலு...

எந்திரன் வாய்ப்பு?

"வாரணம் ஆயிரம் படத்தில் ஓர்க் பண்ணிக்கொண்டிருந்த சமயம் ஐங்கரன் அலுவலகத்திலேருந்து போன். 'ஷங்கர் தம் அடுத்த படத்துக்கு நீங்கதான் கேமராமேனாக ஓர்க் பண்ணணும்னு விரும்பறார். அவரைப் பார்த்துப் பேசுங்க!' என்றார்கள். ஷங்கரைச் சந்தித்தபோது அவர் எந்திரன் கதையை முழுக்க எனக்குச் சொல்ல ஆரேழு மணி நேரம் ஆச்சு. இந்தக் கதையைப் படம் எடுப்பது சாத்தியமான்னு கேட்டார். 'மிகப் பெரிய சேலஞ்ச்தான்'ன்னு சொன்னேன்."

ஷங்கர்-ரஜினி காம்பினேஷனுக்காகப் படத்தை ஒத்துக்கிட்டீங்களா?

"அப்படிச் சொல்லமாட்டேன். எனக்கு கதை, ஸ்கிரிப்ட் பிடிக்கணும். அப்பத்தான் ஓர்க் பண்ண ஈடுபாடு வரும். ஷங்கர் சார் கதையைச் சொன்னபோது எவ்வளோ கஷ்டப்பட்டு இதுக்காக உழைச்சிருக்காருன்னு என்னால புரிஞ்சுக்க முடிஞ்சது. அவரோட படங்கள்லயே பெஸ்ட் ஸ்கிரிப்ட் இதுதான். அதுல அவர் முயற்சி பண்ணி இருக்கிற விஷயங்களை எல்லாம் தமிழ் சினிமாவுக்குப் புதுசு. அப்படி ஒரு படத்துல ஓர்க் பண்ண சான்ஸ் கிடைக்கிறது எவ்ளோ பெரிய விஷயம்? இந்தப் படத்துக்கு ரத்னவேலு இல்லாட்டி திரு ரெண்டு பேர்தான் சரியா இருப்பாங்கன்னு கே.வி. ஆனந்த் கூட ஷங்கர் கிட்டே சொல்லிருக்கார்."



வழக்கமான டபுல் ரோல் படங்களுக்கும் எந்திரனுக்கும் என்ன வித்தியாசம்?

"வழக்கமான படங்கள்னா, ஒரு ரஜினியை வெச்சு, சீன்களை எடுத்திட்டு, அப்புறம் இன்னொரு ரஜினியை வெச்சு அதே சீனை எடுப்பாங்க. ஆனா இப்போ ஒவ்வொரு சீனுக்கும் விதம்விதமா லைட்டிங் செய்ய வேண்டி இருக்கு. ஒரு நாள் முழுக்க ஒரு ரஜினியை வெச்சு சீன்களை எடுத்திட்டு, மறுநாள் மறுபடியும் அதை மாதிரி மறுபடி லைட்டிங் செஞ்சு ரோபோ

ரஜினியை வெச்சு சீன்களை எடுக்கணும். ரஜினிகிட்டே சீனைச் சொல்லிட்டா அவர் நடிச்சிடுவார். ரோபோ ரஜினி அப்படி இல்லையே! அனிமேட்ரானிக்ஸ் இஞ்சினியர்கள்கிட்டே ரோபோ ரஜினி என்ன மாதிரி மூவ்மெண்ட்ஸ் கொடுக்கணும்னு விளக்கிச் சொல்லி, அவங்க ரோபோ ரஜினியை இயக்க, அதைப் படம் பிடிக்கணும். ஒரே சீனுக்கு இரண்டு தடவை லைட்டிங் செய்யறது சலிப்பை ஏற்படுத்திடும்.''



- கேமராமேன் ரத்னவேலு

ஹாலிவுட் டெக்னிஷியன்களோட ஒர்க் பண்ணின அனுபவம்?

ஜுராசிக் பார்க் மாதிரியான படங்கள்ல அனிமேட்ரானிக்ஸ் வேலை செஞ்ச ஹாலிவுட் டெக்னிஷியன்ஸ்கூட ஒர்க் பண்ணணும்னு எல்லா விஷயங்களையும் அப் டு டேட்டா தெரிஞ்சுக்கிட்டேன். படத்தின் முதல் ஷெட்யூல் ஷூட்டிங் ஆரம்பிக்கறத்துக்கு முன்னால ஆறு மாசம் போல பிரி-புரொடக்ஷன் வேலை செஞ்சோம். கதைக்கு ஷங்கர் ஒரு ஸ்கிரிப்ட் எழுதினது மாதிரி நான் 1600 பக்கத்துல கேமரா ரிப்போர்ட் ஒண்ணு தயார் பண்ணினேன். கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் டெக்னிஷியன்களுக்கு என்னுடைய கேமரா ரிப்போர்ட் ரொம்ப உபயோகமா இருந்தது.''

ரஜினியை இளமையாவும், ஐஸ்வர்யா ராயை அழகாகவும் காட்ட என்ன யுக்தியைக் கையாண்டீங்க?

''ஆர்டிஸ்ட்கள் முக அமைப்பை நான் ரொம்ப கூர்மையா கவனிச்சு அதுக்கேற்ப லைட்டிங் செய்வேன். உயரமான ஒருத்தருக்கு நீளமான மூக்கு என்றால், அவருக்கு டாப் ஆங்கிளில் லைட்டிங் அழகைக் கெடுத்திடும். தவிர நான் ஆயிரம் விளம்பரப் படங்களுக்கு மேல் எடுத்திருக்கேன். அந்த அனுபவம் ரொம்ப கை கொடுத்தது.''

எந்திரனில் மிரட்டும் பிரம்மாண்டம் எது?

''கிளைமாக்ஸ் சீன்ல 'அரிமா அரிமா'ங்கற பாட்டுல ரெண்டு ரஜினியும் வருகிற சீன்தான் படத்துக்கே ஹைலைட்! இப்போ நினைச்சாலும் அந்தப் பிரம்மாண்டம் என்னை மிரட்டுது. அடுத்த படியா அமேசான் காட்டுல இருந்த ராட்சஷக் கொசு!''

- எஸ். சந்திரமௌலி



கல்கி



2010 செப்டெம்பர் 12
விக்ருதி ஆவணி 27
மலர் : 69
இதழ் : 7


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


ஏவல் துறையாக்காதீர்கள் காவல் துறையை!

கோகிலவாணி, ஹேமலதா, காயத்ரி என்ற பெயர்களை, தமிழ்ச் சமூகம் அதிர்ச்சியும் வருத்தமுமின்றிச் சிந்திக்க முடியாது. தர்மபுரி பஸ் எரிப்பு சம்பவத்தில் கருகிப்போன இந்த மாணவிகளின் மரணத்துக்குக் காரணமான மூன்று குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை, உச்சநீதிமன்றம் உறுதி செய்த விதம் கவனத்துக்குரியது.

குற்றம் இழைத்தவர்களின் கொடூரத்தைக் கண்டனம் செய்ததுடன், அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றதன் மூலம் காவல் துறை இழைத்த அக்கிரமத்தையும் சாடியிருக்கிறது இந்தத் தீர்ப்பு. ஆனால், காவல் துறையினருக்கு என்ன தண்டனை...? சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்கள் ஏன் தங்கள் பொறுப்பில் தவறினார்கள்?

காவல்துறை என்பது அரசியலுக்கு அப்பாற்பட்ட அரசு ஆயுதம் என்கிற நிலை மாறிப்போய்விட்டது. போலீஸார் ஆட்சியாளர்களின் கைப்பாவையாக இயங்குவதே 'மரபு' என்று இன்று ஆகியிருக்கிறது. அந்த அளவுக்கு ஆளுங்கட்சியினர் தலையீடும் ஆட்சியாளர்கள் கொடுக்கும் நெருக்கடியும் காவல்துறையை வெறும் ஏவல் துறையாக மாற்றிவிட்டிருக்கின்றன. அதனால்தான் ஆட்சியில் இருக்கும் முதல்வருக்கு எதிராக ஒரு தீர்ப்பு (பிளெசன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்கு)





வெளியானதைச் சகியாமல் கட்சிக்காரர்கள் வன்முறையில் இறங்கும்போது, தாங்கள் அதைத் தடுத்து நிறுத்துவதா வேண்டாமா? என்கிற யோசனையும் அச்சமும் போலீஸுக்கு ஏற்பட்டிருக்கிறது. 'மாணவிகள் நிரம்பிய ஒரு பேருந்து எரிக்கப்படக்கூடாது' என்கிற சராசரி மனிதநேயம்கூட தோற்றிருக்கிறது! அரசியல் ரீதியான ஓர் அக்கிரமம் வென்றிருக்கிறது. காவல் துறை கைகட்டி வேடிக்கை பார்த்திருக்கிறது!

காவல் துறையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள ஆவன செய்யும் அரசியல் தலைவர்கள், கூடவே தங்கள் தொண்டர்களின் உணர்ச்சிகளையும் தூண்டுகிறார்கள். கொள்கைகளை முன் வைத்து அரசியல் நடத்துவதற்குப் பதிலாக, தனிநபர் ஆராதனையை ஊக்குவிப்பதும் எதிர்க்கட்சியினர் மீது தனிநபர் தாக்குதலைத் தாராதரமின்றித் தொடுப்பதும் தொண்டர்களை மிதமிஞ்சித் தூண்டுகின்றன. தர்மபுரி சம்பவத்தில் அதுதான் நடந்திருக்கிறது. தங்கள் தலைவி சட்டத்தின் பார்வைக்கு அப்பாற்பட்டவர் என்ற கண்மூடித்தனம்தான் வன்முறைக்கு அடித்தளம். அப்படியொரு உணர்வைத் தொண்டர்கள் மனத்தில் ஊன்றும் விதமாகத் தலைவர்கள் நடந்துகொள்கிறார்கள்.

ஜெயலலிதா மட்டுமின்றி, இன்று தமிழகத்தின் - ஏன், இந்தியாவின் அனைத்து அரசியல் தலைவர்களும் இந்தத் தீர்ப்பையொட்டி தங்களை ஆத்மசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளட்டும். ஆளுமை அரசியல், தனி நபர் வழிபாடு போன்றவற்றுக்கு முடிவுகட்டட்டும். சீரிய ஜனநாயக மரபுகளைப் பின்பற்றட்டும். மாறாக, இந்தத் தீர்ப்பையே தேர்தல் பிரசார ஆயுதமாக மாற்றினால், அது உயிரிழந்த மூன்று இளம் பெண்களுக்கு இழைக்கப்படும் அவமரியாதையாகிப் போகும்; மேலும் பல புதிய குற்றவாளிகளை உருவாக்கவே அச்செயல் வித்திடும்.

●

கிரேஸியைக் கேளுங்கள் டி.வி.டி.!

கல்கி வாசகர்கள் பங்கேற்று வெற்றி பெறச் செய்த 'கிரேஸியைக் கேளுங்கள்' கேள்வி பதில் பகுதி இப்போது டி.வி.டி.யில்! 128 கேள்விகளைத் தேர்ந்தெடுத்து மாது பாலாஜி, நீலு, மாலா மோகன், சங்கீதா ஆகியோர் கிரேஸியிடம் கேட்க, அவற்றுக்கு அவருடைய பதில்களை ஒளிப்பதிவு செய்து 'கிரேஸியைக் கேளுங்கள்' என்றே ஒரு டி.வி.டி.யைத் தயாரித்துள்ளது சுவாதி சாஃப்ட் சொல்யூஷன்ஸ் நிறுவனம். கார்டூனிஸ்ட் மதன், கர்னாடக இசைக்கலைஞர் டி.எம்.கிருஷ்ணா, கல்கி ஆசிரியர் சீதா ரவி ஆகியோர் கலந்து கொள்ள அதன் வெளியீட்டு விழா கிரேஸியின் சாக்லேட் கிருஷ்ணா நாடகத்துடன் கோலாகலமாக சமீபத்தில் நடைபெற்றது.

* டி.வி.டி. வெளியீட்டு விழா நிகழ்ச்சியில்...



"**சி**னிமாக்கள், கச்சேரிகளைத்தான் டி.வி.டி.யாக வெளியிடுவதுதான் வழக்கம். இந்த ஐடியா எப்படி வந்தது?'' என்று ஸ்வாதி சாஃப்ட் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் தலைவரான சுதாகரிடம் கேட்டபோது, 'ஏற்கெனவே டைரக்டர் பாலசந்தர், சோ, மௌலி, எஸ்.வி.சேகர், ஒய்.ஜி.மகேந்திரா, வரிசையில் கிரேஸி மோகனின் நாடகங்களையும் நாங்கள் டி.வி.டி.யாக வெளியிட்டிருக்கிறோம். அந்த ஆர்வத்தில் கிரேஸி மோகனின் கல்கி கேள்வி பதில்கள் டி.வி.டி.யாகக் கொண்டுவந்தால் என்ன? என்ற எண்ணம் தோன்றியது. கிரேஸி மோகன் உடனே அனுமதி கொடுத்தார். மடமடவென்று இரண்டு நாட்களில் ஷூட் பண்ணி விட்டோம்'' என்றார்.

"**கு**டும்பத்தில் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து பார்த்து ரசிக்கிற மாதிரியான பொழுதுபோக்கு இப்போ வெகுவாகக் குறைந்துவிட்டது. எனவே, நல்ல தமிழ் நாடகங்களைப் பிரத்யேகமாக நடிக்கச் செய்து, சிறப்பாக ஒளிப்பதிவு செய்து பொருத்தமான பின்னணி இசையுடன் டி.வி.டி.களாகக் கொண்டு வரத் திட்டமிட்டோம். அதில் வர்த்தக நுட்பத்திலும் வெற்றி பெற்றிருக்கிறோம். தமிழ் மேடை நாடகங்கள் மட்டுமில்லாமல் யோகா, வேதங்கள், பரத நாட்டியம், குச்சுப்புடி மற்றும் கர்நாடக இசையை முறைப்படி கற்றுக் கொள்ள உதவும் டி.வி.டி.களை வெளியிட்டிருக்கிறோம்'' என்று கூறும் சுதாகர் ஒரு இஞ்சினியர். அமெரிக்காவில் பணியாற்றிவிட்டு, இந்தியா திரும்பி ஒரு சாஃப்ட்வேர் நிறுவனத்தையும் நடத்திவருகிறார். அமரர் கல்கியின் சிவகாமியின் சபதம் புதினத்தை ஆடியோ புத்தகமாக வெளியிட்டதும் இவர்தான்.

- எஸ். சந்திரமௌலி

நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்

மகிழ்ச்சியை உருவாக்கிக் கொள்ளும்
மேஷராசிக்காரர்களே! மனசங்கடம்
நீங்கும். திருமண காரியம் இனிதே நிறை
வேறும். குழந்தை பாக்கியம் கிட்டும்.
உடல் ஆரோக்கியம் சீர்படும். புதிய
சொத்து வாங்க வாய்ப்பு வரும். கொடுக்கல்
வாங்கல் சிக்கல் தீரும். வழக்கு வெற்றி
பெறும்; கல்வி வளம் பெருகும்.
புத்துணர்ச்சி கூடும் வாரம்

ரிஷபம்

ரிஷிபோல வைராக்கியம் பெற்ற
ரிஷப ராசிக்காரர்களே! கூட்டாளி பிரிய
நேரிடும். தூர தேசத்து மனிதர்களின்
அனுகூலம் கிடைக்கும். யாருக்கும்
ஜாமின் போடக் கூடாது. படிப்பில்
அக்கறை வேண்டும். உடல் நிலையில்
கவனம் தேவை. வேலைப்பளு அதிகரிக்
கும். பூர்வீகச் சொத்து வரும்.
பரபரப்பான வாரம்

மிதுனம்

மித்ரர்களால் மதிக்கப்படும் மிதுன
ராசிக்காரர்களே! மகான் அனுகூலம் வாய்க்
கும். பிள்ளை வழி சுபநிகழ்ச்சி கைகூடும்.
உறவினரால் நன்மை வரும். சிலருக்கு
வீடு மாற்றம் ஏற்படலாம். பகைவர்
தொல்லை நீங்கும். வாக்குவன்மை
ஓங்கும். நிலுவைகள் வந்து சேரும்.
**புதுப்புது தகவல்களால் தெம்பு கூடும்
வாரம்**

கடகம்

கடமை தவறாத கடக ராசிக் காரர்களே!
உடன் பிறப்புகளால் அனுகூலம் ஏற்படும்.
மனப் பிரமை தீரும். உல்லாசப் பயணம்
செல்வீர்கள். சுபகாரிய பேச்சுவார்த்தை
பலன் அளிக்கும். செலவுகள் கட்டுக்குள்
இருக்கும். வேலையில் ஊதிய உயர்வு
ஏற்படும். புதிய வேலை வாய்ப்புகள் வரும்.
குலதெய்வ வழிபாடு நிறைவேறும்
வாரம்

சிம்மம்

சிந்தையில் பண்பட்ட சிம்ம ராசிக்
காரர்களே! குழந்தைகள் இடம் மாறிப்
போவார்கள். பூர்வீகச் சொத்து பாகப்
பிரிவினை பேச்சுவார்த்தை துவங்கும்.
பணக் கஷ்டம் இருக்காது. மகான்கள் தரிச
னம் வாய்க்கும். கூட்டாளி விலக நேரிடும்.
புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும்.
இல்லறத்தில் இனிமைக் கூடும்.
தெய்வீகமான வாரம்

கன்னி

கலங்காமல் காரியமாற்றும் கன்னி
ராசிக்காரர்களே! மறைமுக எதிர்ப்பு
அதிகரிக்கும். கடன் பிரச்னையும் உடல்
நலக் குறைவும் லேசாகத் தலைதூக்கும்.
பாகப் பிரிவினை துவங்கும் காலம். வர
வேண்டிய நிலுவைகள் வந்து சேரும். புதிய
தொழில் முயற்சி பலன் அளிக்கும். வழக்கு
முடிவுக்கு வரும்.
மனவலிமையை சோதிக்கும் வாரம்

துலாம்

துணிச்சல்மிகு துலாம் ராசிக்காரர்களே! பூமி மூலம் ஆதாயம் கிட்டும். புதிய தொழில் துவங்க ஏற்ற தருணம். பணப் பிரச்னைத் தீரும். விலகிய உறவுகள் வந்து சேரும். வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். தந்தைவழிச் சொத்து வந்தடையும். திருமண காரியம் கைகூடும்.

இழந்தவைகளைப் பெறும் வாரம்

விருச்சிகம்

விரும்பும் வாழ்வை அமைத்துக் கொள்ளும் விருச்சிக ராசிக்காரர்களே! பேச்சில் கொஞ்சம் எச்சரிக்கைத் தேவை. பயணங்களில் கூடுதல் கவனம் வேண்டும். கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போவது நலம். நண்பர்கள் விலக நேரிடும். வழக்கு தாமதம் ஆகும். சகோதரரால் நன்மை விளையும். படிப்பில் கூடுதல் அக்கறை வேண்டும்.

சவாலான வாரம்

தனுசு

தடைகளைத் தாண்டும் தனுசு ராசிக்காரர்களே! கணவன் - மனைவி பிரச்னைத் தீரும். வெளியூர்களிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். புதிய சொத்து வாங்கும் யோகம் வரும் நேரம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். செலவுகள் கட்டுப்பாட்டில் இருக்கும். சுபகாரிய பேச்சு வார்த்தை பலனளிக்கும்.

எண்ணங்கள் நிறைவேறும் வாரம்

மகரம்

மதிநுட்பம் வாய்ந்த மகர ராசிக்காரர்களே! திருமண காரியம் நிறைவேறும். தூரப் பயணம் சாத்தியமாகும். உறவினர் - நண்பர்களிடையே இருந்து வந்த இடைவெளி விலகும். பண வசதி பெருகும். வியாபாரம் வெற்றியை நோக்கிப் போகும். குழந்தைகளால் நல்ல தகவல் வரும். வழக்குகள் வெற்றி பெறும்.

சங்கடம் தீரும் வாரம்

கும்பம்

குறை காணா மனத்துக்குச் சொந்தக்காரரான கும்ப ராசிக்காரர்களே! பூர்விகச் சொத்துப் பிரிவினை ஆகும். படிப்பில் படிப்படியான முன்னேற்றம் வரும். வாகனங்களில் செல்லும்போது கொஞ்சம் உஷாராக இருக்க வேண்டும். ஒரு சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படலாம். கூட்டுத் தொழில் வேண்டாம். தொழில் போட்டி அதிகரிக்கும்.

மனக் குழப்பம் நீங்கும் வாரம்

மீனம்

மனம்தளரா மீன ராசிக்காரர்களே! தொழிலில் இடமாற்றம் இருக்கும். சிலர் பழைய வீட்டை விற்று புதுவீடு வாங்குவீர்கள். மனச்சுமை பணச்சுமை இரண்டும் நீங்கும். வியாபாரத்தில் வருவாய் கூடும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். நீண்டகால வழக்கு வெற்றிபெறும். மனப் பதற்றம் விலகி சாந்தம் நிலவும்.

மகிழ்ச்சி பொங்கும் வாரம்

05.09.2010 முதல் 11.09.2010 வரை

தஞ்சை பரத்வாஜ்



எந்திரன்
the ROBOT

கைமாறிய கதை!

● 'ரஜினி - ஷங்கர் - ரஹ்மான் காம்பினேஷனில் வரலாறு காணாத மெகா பட்ஜெட் படம்' என்றுதான் எந்திரன் பூஜை நேரத்தில் கோலிவுட்டில் பேசிக் கொண்டார்கள். அந்தச் சமயத்தில் படம் சிக்கலில் மாட்டிக்கொண்டு கை மாறிவிடும் என்று கிசுகிசு எழுதி இருந்தால், படிப்பவர்கள் சிரித்திருப்பார்கள். ஆனால் அடுத்த சில மாதங்களில் அது நிஜமாகவே நடந்தது.

● ஐங்கரன் இன்டெர்நேஷனல் நிறுவனத்திடம் இருந்து எந்திரன் படத்தயாரிப்பு சன் நெட் ஒர்க் கைக்கு மாறியது எப்படி? 'ஐயோ சாமி! ஆளைவிட்டால் போதும்!' என்று ஐங்கரன் அலறியதுதான் காரணமாம். ஐங்கரனின் தாய் நிறுவனம் ஈராஸ். அகில உலக அளவில் ஏற்பட்ட நிதி உருகல் காரணமாகக் கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்தது ஈராஸ். அதுதான் ஐங்கரனின் கஷ்ட காலத்துக்குப் பிள்ளையார் சுழி. பட்டக் காலிலே படும் என்பதுபோல சில லோக்கல் நிகழ்வுகளும் ஐங்கரனைக் குழியில் தள்ளி விட்டன.

● வசூல்ராஜாவுக்குப் பிறகு இயக்குநர் சரண், கமலை வைத்து எடுக்கவிருந்த படத்தை ஐங்கரன் வாங்கிக்கொள்வதாக இருந்தது. 'என் படம் பற்றி என்னைக் கேட்காமல் ஐங்கரனுடன் எப்படி பிஸினஸ் பேசலாம்' என்று கமல் கோபித்துக் கொண்டு, அந்தப் ப்ராஜக்டிலிருந்து வெளியேறியதும், கமலுக்குக் கொடுத்த அட்வான்ஸைத் திருப்பிக் கேட்டு சரண் போலீஸ் கமிஷனரிடம் புகார் கொடுத்ததும் தனிக்கதை. அடுத்து சாய்மீரா - ஐங்கரன் கூட்டுத் தயாரிப்பான கமலின் மர்மயோகி கிடப்பில் போடப்பட்டுவிட்டது அனைவரும் அறிந்ததே!

● நிதி நெருக்கடி நிலைமையை மனத்தில் கொண்டு எந்திரன் படத்துக்கு ஏற்கெனவே ஒத்துக்கொண்ட நூற்று முப்பது கோடி பட்ஜெட்டே டூ மச்! இதுவரை அமெரிக்கா, பெரு என்று இரண்டு பாடல் காட்சிகளுக்காக மட்டுமே சுமார் முப்பது கோடியை விழுங்கிவிட்டு நிற்கும் எந்திரனின் எமப் பசிக்கு இனி மேலும் சோறுபோட எங்களால் ஆகாது; பட்ஜெட்டை வெட்டுங்கள் என்ற ஐங்கரனின் கோரிக்கை ஷங்கர் தரப்பில் எடுபடவில்லை. மேலும், கோவாவில் எடுக்கப்பட்ட சில காட்சிகளுக்காக மூன்று கோடி செலவில் மூன்று புத்தம் புதிய கார்களை வாங்கி, அவற்றைத் தீப்பிழம்பில் வெடிக்கச் செய்ததில் ஐங்கரனுக்கு ஏகக் கடுப்பாம். 'ஏன், டம்மி காரை வெடிக்கச் செய்தால்

எந்திரன்



ஸ்பெஷல்

கேமரா படம் பிடிக்காதா?' என்று கமெண்ட் அடித்து ஷங்கரைச் சீண்டினார்களாம்.

● 'இது ஒரு சயன்ஸ் ஃபிக்ஷன் கதை. சிவாஜியை விட இன்னும் ரிச்சான செட்களில் பாடல்கள் எடுக்க வேண்டும்; கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் வேலையும் ரொம்ப அதிகமாக இருக்கும். ஆகவே சொன்ன பட்ஜெட்டைவிட எகிற வாய்ப்புகள் அதிகம். நிலைமை அப்படி இருக்க பட்ஜெட்டை வெட்டுவது சாத்தியமே இல்லை' என்று ஷங்கர் தெளிவாகச் சொல்லிவிட்டார். 'அப்படியானால், ஆளை விடுங்கள்' என்று கைகளைத் தூக்கிவிட்டது ஐங்கரன்.

● ஒரு பக்கம் எந்திரனுக்குப் புது தயாரிப்பாளர் தேடும் படலம் ஆரம்பமானது. இன்னொரு பக்கம் கலைஞர்-மாறன் சகோதரர்கள் சமரசப் படலம் முடிந்த கையோடு புதுத் தெம்புடன் தாங்கள் யார் என்று காட்ட மாறன் சகோதரர்கள் தயாரானார்கள். ஷங்கரும், ரஜினியும் கலந்தாலோசித்து சன் நெட் ஒர்க்கை அணுக முடிவெடுத்தார்கள். கலாநிதி மாறன் - ரஜினி - ஷங்கர் என்ற முத்தரப்பு சந்திப்பு நடந்தது. கலாநிதி மாறன் கதையைக் கூடக் கேட்கவில்லை. சன் பிக்சர்ஸ் எந்திரன் தயாரிப்பில் பெருமை கொள்கிறது என்று அறிவித்தார். சன் பிக்சர்ஸ் நிறுவனம், முதல் பிரதி அடிப்படையில் 165 கோடி ரூபாய்க்கு எந்திரன் படத்தை விலை பேசியுள்ளது. ஆனால் 200 கோடியில் படத்தை முடித்துவிடலாம் என்பது இரு தரப்பின் எதிர்பார்ப்பு.

● என்னதான் ரஜினி - ஷங்கர் - ரஹ்மான் படம் என்றாலும், 200 கோடிகளைக் கொட்டிப் படம் எடுத்தால் என்ன லாபம் கிடைக்கும் என்று கோடம்பாக்கத்தில் சிலர் ரகசியமாக வம்பு பேசினார்கள். ஆனால் ரஜினி, ஐஸ், ரஹ்மான், வைரமுத்து என்று பெரிய நட்சத்திரப் படை திரட்டிக்கொண்டு மலேசியா போய் சன் பிக்சர்ஸ் நடத்தின இசை வெளியீட்டு விழாவைப் பார்த்துவிட்டு 'யப்பா! அவங்க ரேஞ்சே வேற!' என வாயடைத்துப் போய்விட்டார்கள்.

- அர்ஜுன்



சைக்கிள்

பா.சேதுமாதவன்

எதிர்க்காற்றில் சைக்கிள் ஓட்டுவது ரொம்பவே சிரமமாகத்தான் இருக்கிறது. படுக்க வைத்த ஆங்கில 'V' எழுத்து போல உடம்பை முன்னால் வளைத்துப் பல்லைக் கடித்துக் கொண்டு பெடலை அழுத்த, சைக்கிள் வேகமெடுக்கிறது. முந்திச் சென்ற மோட்டார் சைக்கிளைப் பார்த்ததும், ''அதில் உள்ளதைப் போல் தன் சைக்கிளுக்கும் ஒரு 'என்ஜின்' பொருத்தப் பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்று மனத்துக்குள் அந்தக் காட்சியை உருவகப்படுத்திக் கொள்கிறான். உடனே, மந்திரம் போட்டது போல சைக்கிளின் வேகம் அதிகரிக்கிறது. பழைய திரைப்படங்களில் 'பேக் புரொஜெக்ஷன்' முறையில் காட்டுவது போல மரங்கள், கட்டடங்கள் எல்லாம் பின்னோக்கி ஓடுகின்றன. அந்த அதிவேக சைக்கிளைச் சாலையில் செல்வோர் அதிசயமாகப் பார்க்கின்றனர்.

''டேய் வினோத்! மணி ஏழாச்சு... இன்னும் என்ன தூக்கம்? எந்திரிடா!'' வினோத்தின் சைக்கிள் கனவைக் கலைத்தாள் அவன் அம்மா பூங்கோதை.

புது சைக்கிள் கிடைத்ததிலிருந்து அவனுக்குச் சதா அதன் நினைப்புதான். கை எந்த வேலையைச் செய்து கொண்டிருந்தாலும்; அம்மாவின் மனசு மட்டும் பக்கத்து அறையில் உறங்கிக் கொண்டிருக்கும் தன் கைக் குழந்தையையே நினைத்துக் கொண்டிருக்குமே, அதுபோல வினோத்தும் சைக்கிளைப் பற்றிய நினைப்பையே சுமந்து கொண்டு திரிந்தான். பின்னே, எவ்வளவு வருடங்களாக அவன் அடைகாத்து வந்த 'கனவு' முட்டை இப்போது குஞ்சு பொரித்திருக்கிறது!

''போனஸ் பணத்துல உனக்கு நிச்சயம் வாங்கித் தர்றேன்...''

''லோன் பணம் வந்ததும் உடனே உனக்கு சைக்கிள்தான்...''

''அரியர்ஸ் பணம் கெடச்சதும் அன்னிக்கே நாம சைக்கிள் கடைக்குப் போறோம்...''

ஒரு தனியார் நிறுவனத்தில் கடைநிலை ஊழியராக வேலை செய்யும் வினோத்தின் தந்தை சண்முகம் ஒவ்வொரு முறையும் இப்படித்தான் சீரியலாக வாக்குறுதி கொடுப்பார். ஆனால் பாவம், ஏதாவது ஒரு செலவு அழையா விருந்தாளியாய் வந்து அந்த வாக்குறுதியை அரசியல்வாதிகளின் வாக்குறுதி போல ஆக்கிவிடும். இந்த வருடம் தான் அப்பாவால் நிறைவேற்ற முடியாததை அரசாங்கமே நிறைவேற்றி விட்டது.

புது சைக்கிளைப் பராமரிப்பதில் அவன் காட்டிய அக்கறையைப் பார்த்து அவன் பெற்றோருக்கு ரொம்பவே ஆச்சரியம். சென்ற வருடம் இறந்த அவர்கள் வீட்டு வளர்ப்பு நாய் டைகரின் மேல் அவன் காட்டிய பிரியத்துக்கு இணையான பிரியத்தை இந்த ஜடப்பொருள் மேல் காட்டினான்.

காலையில் சைக்கிளைத் துடைத்து, எண்ணெய் ஊற்றி, காற்றைப் பரிசோதித்து அதைப் பள்ளி செல்வதற்குத் தயார் நிலையில் வைப்பதற்குக் கணிசமான நேரத்தைச் செலவிட்டான். அவன் அனுமதி இல்லாமல் யாராவது அவன் சைக்கிளைத் தொட்டால்கூட அவனுக்குக் கோபம் வரும். ஏன், அவன் செல்லத் தங்கை வினோதினி எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும், அவன் சைக்கிளில் அவளுக்கு ஓட்டக் கற்றுக் கொடுக்க மறுத்து விட்டான். அப்பாவின் பழைய சைக்கிளில்தான் அவள் கற்றுக் கொண்டாள்.

கனவு!



அந்த சைக்கிளை மிதித்துக் கொண்டு வினோத் பள்ளிக்குச் செல்வதைப் பார்க்கும் போது, புதிதாகச் சிறகுகள் முளைத்த சிறு பறவை வானத்தில் உற்சாகமாகப் பறப்பதைப் போல இருக்கும்.

விடுமுறை நாட்களில் சைக்கிளை எடுக்கக் கூடாது என்பது அவன் அப்பாவின் கட்டளை. அதையும் மீறி, அவர் வீட்டில் இல்லாத நேரங்களில் தெரு முனை நாடார் கடையில் பச்சை மிளகாய் வாங்கி வர, பக்கத்துத் தெரு நண்பனிடம் நோட்டு இரவல் வாங்கி வர - இப்படி ஏதாவது சின்ன வேலை வைத்துக் கொண்டு சைக்கிளில் ஏறி சிட்டாகப் பறந்து விடுவான்.

ஒரு நாள் மாலை. வரவேற்பறையில் அமர்ந்து மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்த அவன் கவனத்தை வெளியில் கேட்ட பேச்சுக் குரல் கலைத்தது. தாழ்வாரத்தில் அவன் அப்பாவும், அவர்

நண்பர் பழனியும் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

பழனி, எப்போதாவதுதான் வீட்டுக்கு வருவார். ஒவ்வொரு முறையும் அவன் படிப்பைப் பற்றி சாதாரணமாக விசாரிப்பதோடு நிறுத்த மாட்டார். சென்ற தேர்வில் எடுத்த ரேங்க், மதிப்பெண்கள் என்று விலாவாரியாக விசாரிப்பார். எனவே அவர் வீட்டுக்கு வரும் போதெல்லாம் அவர் கண்ணில் படாமல் உள்ளறைக்குச் சென்று படிப்பது போல பாசாங்கு செய்வது வினோத்தின் வழக்கம். ஆனால் இன்று நேருக்கு நேர் அவரைப் பார்க்கும்படி ஆகிவிட்டது.



பழனி தன் பேச்சை முடிக்கும்போது வினோத் வீட்டுக்குள் சென்றிருந்தான். அவர் பேச்சொலியில் உள்ளே கேட்ட விசும்பல் ஒலி அமுங்கிவிட்டது!

வழக்கத்துக்கு மாறாக ''எப்படித் தம்பி படிக்கற?'' என்ற ஒற்றை வாக்கியத்தோடு அவர் விசாரிப்பை நிறுத்திக் கொண்டது அவனுக்கு ஆச்சரியமாகவும் ஆறுதலாகவும் இருந்தது. ''நல்லாப் படிக்கறேன் அங்கிள்!'' என்று அவனும் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு, அந்த இடத்தை விட்டு நகர நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

பழனியின் பார்வை அவன் சைக்கிளின் மேல் விழுந்தது. சைக்கிளைத் தொட்டுத் தடவி மணியை அடித்துப் பின் சக்கரத்தைச் சுற்றிவிட்டுப் பார்த்தார். ''கவர்மெண்ட்டு இலவசமா கொடுத்தாலும் நல்ல தரமாத்தான் கொடுத்திருக்காங்க! உங்க பையனும் புதுசு மாதிரியே வெச்சிருக்கானே!'' என்று அவன் அப்பாவிடம் சிலாகித்தார். அவன் பக்கம் திரும்பி ''நீ இதுலதான் தினமும் ஸ்கூலுக்குப் போறியா?'' என்று கேட்டார். ''ஆமாம்!'' என்பது போல வினோத் தலையசைத்தான்.

''இவனுக்கு இந்த சைக்கிள் மேல கொள்ளை ஆசை. இவன் ஸ்கூலுக்குப் போக வரவும் ரொம்ப வசதியாத்தான் இருக்கு. ஆனா, எனக்கு வேற வழி தெரியலை. உனக்குத்தான் என் நிலைமை நல்லாத் தெரியுமே...'' என்றார் அவன் அப்பா. அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பழனி வேறு அவனை அனுதாபமாய் பார்த்தார். அதோடு, ''எதற்கும் கவலைப்படாதே!'' என்பது போல அவன் தோளை மெள்ளத் தட்டினார். அவன் அப்பா தன் பார்வையைத் தவிர்ப்பதாக வினோத்துக்குத் தோன்றியது. தொண்டையைச் செருமிக் கொண்டே பழனி, ''சரி சண்முகம்! நாளைக்கு ஆயிரம் ரூபாய் கொண்டு வந்து கொடுத்துவிட்டு சைக்கிள எடுத்துட்டுப் போறேன். வினோத்துதான் பாவம் ஏமாந்து போயிடுவான்! எப்படியாச்சும் அவனுக்குச் சீக்கிரம் ஒரு பழைய சைக்கிளாவது வாங்கிக் கொடுத்துடு!'' பழனி தன் பேச்சை முடிக்கும்போது வினோத் வீட்டுக்குள் சென்றிருந்தான். அவர் பேச்சொலியில் உள்ளே கேட்ட விசும்பல் ஒலி அமுங்கிவிட்டது!

வெண்ணிலா கபடிக்குழு வெற்றியின் வீச்சுக்குப் பிறகு இயக்குநர் சுசீந்திரன் இயக்கத்தில் வந்திருக்கும் படம். அப்பாவைக் கொன்றவனைப் பழிவாங்கும் கதையைச் சொல்லிய விதத்தில் சுவாரஸ்யப் படுத்தி இருக்கிறார்.

எதையும் டேக் இட் ஈஸியாக எடுத்துக் கொள்ளும் இந்தக் கால இளைஞனாக கார்த்தி தன் பாத்திரத்தில் கனக் கச்சிதம். கல்யாண வீட்டில் காஜலிடம் காதலை ஓப்பன் பண்ணுவதில் ஆரம்பிக்கிற அவரது அதகளம் காஜல் அப்பாவிடமே போய், "லவ் மேரேஜை அரேஞ்சுடு மேரேஜாக்கத்தான் உங்களிடம் பெண் கேட்க வந்தேன் அங்கிள்" என்பது வரை நீள்கிறது. ஆனால் கார்த்தி அப்பாவின் விபத்துக்குப் பிறகு கதை தலைகீழாக மாறி டெராராகும்போது ஆவேச மகனாக அவதாரமெடுக்கிறார்.

காஜல் அகர்வால் விஷுவல் பொயட். பாட்டுக்கும் காதலுக்கு மட்டுமே வந்து போவதுதான் பரிதாபம். தயாரிப்பாளர் ஜெயப்பிரகாஷ் அன்பான அப்பா பாத்திரத்தில் அடடா போட வைக்கிறார். கொலை செய்யும் டிரக் அடிக்ட் காலேஜ் மாணவர்களில் பெரிய கண் பையனும், பரட்டைத் தலை பையனும், பாடிலேங்குவேஜில் பளிச் பளிச். பாடல்களிலும் பின்னணியிலும் யுவனின் இருப்பு தெரிகிறது. பாஸ்கர் சக்தியின் வசனங்கள் மின்னல் கீற்றுகள்.

ஒளிப்பதிவாளர் மதி கேமரா காதலா கக் குளிர்கிறது; சண்டையில் கனலாகச் சுடுகிறது.

கலெக்ஷன் மேனேஜரிடம் பேசும் மேட்டர், கலெக்ஷனுக்காகப் போகும் இடத்தில் நடக்கும் காட்சிகள், அப்பா இறந்ததும் சாவு பாட்டு... போன்றவை படத்துக்கு மைனஸ்.

விறுவிறுப்புக்குக் குறை வைக்காத திரைக்கதையில் ஜாலியான ஒரு படத்தைச் சட்டென ஆக்ஷனுக்கு மாற்றி அதில் ஆடியன்ஸை அழைத்து வந்து ஜெயித்து இருந்தாலும், வெண்ணிலா கபடிக் குழு சுசீந்திரனிடம் மசாலாக் கதையை ரசிகர்கள் விரும்பவில்லை.

நான் மகான் அல்ல - மோசம் அல்ல.

- மகிமைராஜன்



எம்.ஜி.ஆர்.க்குத் தன் அபிமான கவிஞரான வாலியை ஒருமுறை சீண்டிப் பார்க்க வேண்டுமென ஆசை. ''உலகம் சுற்றும் வாலிபன் படத்துல உங்க பாட்டும் இல்லே. உங்க பேரும் இல்லே!''னு சொல்லியிருக்கார். ''என் பாட்டு இல்லாட்டியும் என்னோட பேரு இல்லாம இந்தப் படம் வெளிவராது!''னு கவிஞர் சொல்லவும், ஏதும் புரியாம, ''அது எப்படின்னு?'' கேட்டிருக்கார் எம்.ஜி.ஆர். படத்தோட பேரு 'உலகம் சுற்றும் வாலிபன். அதுலயே எம் பேரு இருக்கு. அதுல எம் பேரை நீக்கிட்டீங்கனா 'உலகம் சுற்றும் பன்'னு ஆயிடும். பரவாயில்லையா?'னு மடக்கியிருக்கார். ''சும்மா ஒரு விளையாட்டுக்குச் சொன்னேன் கவிஞரே!''ன்னு கட்டியணைச்சாராம் எம்.ஜி.ஆர். இந்தத் தகவலை, மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா தலைமையிலான திருச்சி கலைப்பேரவை அரங்கேற்றிய கவிஞர் வாலிக்கான பாராட்டு விழாவில் சொன்னார் பட்டிமன்றப் பேச்சாளர் பேராசிரியர் கு. ஞானசம்பந்தன்.

காவிரிக் கரையில் பிறந்த (ஸ்ரீரங்கம்) காவியக் கவிஞர் வாலிக்கு காவிரிக் கரையில் நடந்த பாராட்டு விழாவின் தொகுப்பு இதோ...


திருச்சி சிவா:

''நம்முடைய தமிழ்ச் சமுதாயத்துக்கு எத்தனையோ பாடல்களைத் தந்த கவிஞருக்கு, அவரது சொந்த மண்ணில் நாம் எல்லோரும் திரண்டு வந்து நடத்தும் பாராட்டு விழா இது. அண்மையில் மாநிலங்களவையில் தமிழக மீனவர்களின் துயரங்கள் குறித்து நான் பேசும்போது, கவிஞர் வாலியின் 'ஒரு நாள் போவார்; ஒரு நாள் வருவார் ஒவ்வொரு நாளும் துயரம்!' என்ற பாடல் வரிகளைத்தான் சுட்டிக் காட்டிப் பேசி எடுத்துரைத்தேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.



இயக்குநர் சமுத்திரக்கனி:

'அண்ணி' தொலைக்காட்சி சீரியல்ல, ஒரு நிஜ கவிஞர் கவிஞராகவே நடிக்கணும். இயக்குநர் கே.பி. சார்ட்ட, வாலியை அதுல நடிக்க வைக்கலாம்னு சொன்னேன். அதுக்கு கவிஞர், பாலு டைரக்ட் பண்ணா நான் நடிக்கறேன்னு சொல்லிட்டார். சீரியல் டைரக்டர் நானாக இருந்தாலும், கவிஞர் வர்ற சீன்களை கே.பி. சார்தான் டைரக்ட் செஞ்சார். மறுநாள் கே.பி.சார்க்கு காய்ச்சல். அவர் ஸ்பாட்டுக்கு வரலை. கவிஞர் வாலி வந்துட்டார். எனக்கு என்ன செய்றதுன்னு தெரியல. இருந்தாலும் சூட்டிங் ஆரம்பிச்சுட்டோம். முதல் நாள் வாலி சாரைக் கவனிச்சிருந்தேன். அதனால அப்பப்ப அவர்ட்ட போயி, ''சார்... நீங்க வெத்தலை போட்ட பிறகு மெதுவா சீன் எடுத்துக்கலாம்னு'' அப்பப்ப அவருக்கு ரிலாக்ஸ் தந்தேன். ரெண்டு நாள் சூட்டிங் நல்லாவே போய்ட்டிருந்திச்சு. உடம்பு சுகமாகி மூணாவது நாள் கே.பி. சார் சூட்டிங் வந்தார். ''பாலு நீ வேணா ரெஸ்ட் எடுத்துக்கோ. இந்தப் பையன் வெத்தலை போட்டுக்க எனக்கு டயம் தந்துடுறான். அவனே என்னைய டைரக்ட் பண்ணட்டும்''னு சொன்னார்.





வெத்தலைக்கு மடங்கிய வாலி!

கவிஞர் பழநிபாரதி:

“என் போன்ற இளம் பாடலாசிரியர்களை வாய்ப்புகள் நேர்கின்றபோதெல்லாம், பாராட்டி வாழ்த்துச் சொல்லி வளர்த்து விடத் தயங்காதவர் கவிஞர் வாலி. சினிமாவில் இந்தத் துறையில் ஐம்பத்து நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலைத்து இயங்கி வருபவர். இதுவே பெரும் சாதனை!”



திருச்சி பிஷப் கல்லூரி மைதானத்தில் நடந்த இந்நிகழ்ச்சி, தொடங்குவதற்கு முன்னதாக லக்ஷ்மண் ஸ்ருதி இசைக்குழு, கவிஞர் வாலியின் பாடல்களை மட்டும் பாடி அனைவரையும் உற்சாகப்படுத்தினர்.

வடிவேலு உருக்கமாகப் பாடிக் காட்டிய 'கரைமேல் பிறக்க வைத்தான்; எங்களை கண்ணீரில் மிதக்க வைத்தான்' பாடலும், 'பவளக் கொடியிலே முத்துக்கள் பூத்தால் புன்னகை என்றே பேராகும்!'என்கிற பாடலும் பார்வையாளர்களைப் பெரிதும் ஈர்த்தன. 'பவளக்கொடியிலே' பாட்டினை ஒன்ஸ்மோர் கேட்டு மீண்டும் பாட வைத்து ரசித்தார் கவிஞர் வாலி.



கவிஞர் வாலி ஏற்புரை:

“கவிஞர்கள் முதலில் நல்ல ரசிகர்களாக இருக்க வேண்டும். பிறரை மனம் திறந்து பாராட்ட வேண்டும். இயக்குநர் சமுத்திரக்கனி கூறிய சம்பவம் நெசமாகவே நடந்த ஒன்று. கோலக்காரர்கள் இந்த வெத்தலையை வைத்து என்னென்னமோ பண்ணுவாங்க. இந்தப் பையன் (சமுத்திரக்கனி) வெத்தலை போடுற என்னோட பழக்கத்தை வெச்சு, என்னையே மடக்கிட்டான்னு பாலுகிட்டே சொன்னேன். இதுபோல மனசுல பட்டதை உள்ளதை உள்ள படிச் சொல்லிட்டா, வாழ்க்கையில உயரலாம். என்னோட பால்ய காலத்துல ஸ்ரீரங்கத்து மண்ணுல எனக்குத் துணையா நின்னவன் என் நண்பன் சீ.ரா.மாரிமுத்து. நான் சென்னை வந்தும், எனக்கு அவனோட உதவி நெறைய. அதுபோல நடிகை சச்சுவோட அம்மா, என்னைத் தன் மகன் போல பாவிச்சு எனக்குப் பசியாத்துனதை என்னால எப்பவும் மறக்க முடியாது!”

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

படங்கள்: எஸ். அண்ணாதுரை

ராஜ் டி.வி. மாற்றிக் கொள்ளுமா?

ராஜ் டிவியில் ஆடிமாதம் முழுவதும் அம்மன் படங்களை ஒளிபரப்பப் போகிறோம் எனத் திரும்பத் திரும்ப விளம்பரப்படுத்தினர். இதை அறிந்து ஆண் பெண் பக்தர்கள் மிகவும் மகிழ்ச்சியில் இருந்தனர். பார்க்க ஆவலுடன் காத்திருந்தனர். ஆனால் நடந்தது என்ன தெரியுமா?

தமிழில் எத்தனையோ நல்ல ஆன்மிக படங்கள் இருக்க அவற்றையெல்லாம் ஒளிபரப்பாமல், ஓரங்கட்டிவிட்டு, அபத்தமான தெலுங்கு டப்பிங் (மந்திரம் - செக்ஸ் - கோமாளித்தனம் - அசட்டுத்தனம்) அம்மன் படங்களைத் தினமும் பிற்பகல் ஒளிபரப்பி, பக்தர்களையும் பெண்களையும் கையெடுத்துக் கும்பிடச் செய்வதற்குப் பதில், தலையில் அடித்துக் கொள்ளச் செய்துவிட்டனர். எதை ஒளிபரப்பினாலும் பார்ப்பார்கள் என்ற சிறுபிள்ளைத்தனமான எண்ணத்தை ராஜ் டி.வி. இந்தக் கடிதத்தைப் படித்த பிறகாவது மாற்றிக்கொள்ள முன் வருமா?!

- ராஜி ராதா, கோரமங்களா



உப்புமாவை அறையி

ஜெயா டி.வி.யின் 'திரும்பிப் பார்க்கிறேன்' நிகழ்ச்சி திரைப்படக் கலைஞர்கள் தாங்கள் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறார்கள்.

நான் ரசித்த பற்பல துளிகளில் சில துளிகள்...

ஏ.வி.எம். சரவணன்:

நடிகர் அசோகன் எங்கள் நண்பர் - 'உயர்ந்த மனிதன்' படத்தில் கதாநாயகனின் டாக்டர் நண்பராக அவர் நடித்தார். அவருக்கு நடிகர் திலகம் சிவாஜி நடிக்க சொல்லிக் கொடுத்தார்.

❋ அசோகன் தனிமையில் என்னிடம், "அரசியலில் அவருக்கு நான் எதிரி. சிவாஜி எனக்கு நடிப்பு சொல்லிக் கொடுக்கிறேன் என்று என்னைக் கவிழ்த்து விடுவாரோ" என்றார்.

நான், "அட போய்யா, சிவாஜியிடம் கதையைச் சொன்னதும், அந்த டாக்டர் கேரக்டரை நான் செய்கிறேன். கதாநாயகனாக வேறு யாராவது நடிக்கட்டும்" என்றார். "இல்லை நீங்கள் கதாநாயகனாகத்தான் நடிக்க வேண்டும். அந்த டாக்டர் கேரக்டரை அசோகன் நடிக்கட்டும்" என்றேன். அவரும் சம்மதித்தார். "அந்த டாக்டர் கேரக்டர் சிறப்பாக வரவேண்டும் என்பதால்தான் அவர் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் தருகிறார்! அந்த உயர்ந்த மனிதனைச் சந்தேகப்படுகிறாயே" என்றேன்.

❋ 'அன்பே வா' படப்பிடிப்பில் இருந்த போது சிறிது நேரம் ஓய்வு கிடைத்தது. அப்போது நான் வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த உப்புமாவைச் சாப்பிட ஆரம்பித்தேன். இதைக் கவனித்த எம்.ஜி.ஆர். என்னிடம், "ஏதாவது சாப்பிடுவது என்றால் உங்கள் அறையில் போய் சாப்பிட வேண்டும். இங்கு சாப்பிடுவதென்றால் எல்லோருக்கும் அது உண்ணக் கிடைக்குமாறு செய்து எல்லோருடனும் சேர்ந்து சாப்பிட வேண்டுமென்றார்" அன்றிலிருந்து இன்று வரை அதைக் கடைபிடித்து வருகிறேன்.

ஜமுனாராணி: குயிலுக்குச் சவால் விடும்

டி.வி.யில் உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி எதுவாயினும்... 'சேனல் சா



சுதந்திர தின நிகழ்ச்சியாக 'மெகா டிவி'யில் ஒளிபரப்பான அமுதகானம் 1000 நிகழ்ச்சியை ரசித்தேன். எம்.எஸ்.வி. தலைமையில் பலர் பாடினார்கள். எம்.எஸ்.வி.யும், ராமமூர்த்தியும் மெல்லிசை மன்னர்கள். எம்.எஸ்.வி.யை மட்டும் தனிமைப்படுத்தி அவர் ஒருவரே சாதனையாளர் என்கிற முறையில் வாரா வாரம் நிகழ்ச்சி அமைந்து வருகிறது. பல பாடல்களில் ராமமூர்த்தி (சீனியர்) பங்களிப்பை இவர்கள் ஏன் மறந்து விட்டார்கள். அதேபோல டி.எம்.எஸ்., சுசிலா போன்றவர்கள் பாடப்பாட (கைநடுக்கத்துடன் டி.எம்.எஸ்.) பார்க்க வேதனையாக உள்ளது.

- ஈரோடு அனுராதா, வடபழனி

சாப்பிடுங்கள்!

குரலுக்குச் சொந்தக்காரர் இவர். அந்தக் காலத்தில் ஆண் பாடகர் அருகில் நின்றுதான் பாடகி பாட வேண்டும். இதை வரப்போகும் கணவர் விரும்பாமல் கலைப் பயணத்துக்குத் தடை போட்டு விடுவாரோ,குடும்பத்தில் குழப்பம் ஏற்படுமோ என்று அஞ்சி, நான் திருமணமே செய்து கொள்ளவில்லை.

எல்.ஆர்.ஈஸ்வரி: பக்திப் பாடல் பாட நான் ஒரு கோயிலுக்கு ஒத்துக்கொண்டு, நிகழ்ச்சி ஆரம்பிக்கும் நேரத்தில் என் தாய் இறந்துவிட்ட செய்தி கேட்டு வருந்திய நான், எவரிடமும் சொல்லாமல் எல்லா பக்திப் பாடல்களையும் பாடிவிட்டு - கடைசியில் ரசிகர்களிடம் ''நான் இப்பொழுது பாடிய பக்திப் பாடல்கள் அனைத்தும் சற்று முன் இறந்துவிட்ட என் தாய்க்கு நான் செலுத்திய அஞ்சலி'' என்றேன்.


- வி.பாலசுப்ரமணியன், தஞ்சாவூர்

முழுமை இல்லை!!!

ஜெயா டி.வி.யில் 'அருள்தரும் ஆலயங்கள்' ஒளிபரப்பாகிறது. அக்கறையாக நிகழ்ச்சி நடத்தப்படுவதாகத் தோற்றமளித்தாலும் உண்மையில் அவை அரைகுறையாகவே உள்ளன. உதாரணமாக ஆகஸ்ட் 21ம் தேதியன்று காட்டப்பட்ட அலகாபாத் சார்ந்த தொகுப்பில்... திரிவேணி சங்கமத்தைக் காட்டினார்கள். ஆனால், அந்த இடத்தின் சிறப்பான வேணிதானம் நிகழ்ச்சியைக் காட்டவேயில்லை. சொன்னதோடு சரி! திரும்பும்போது காஞ்சி சார்ந்த சங்கரமடத்தை மேம்போக்காகக் காட்டிவிட்டு, இஷ்டப்பட்டால் பார்க்கலாம் எனக் கூறிவிட்டு வேணிமாதவர் கோயிலுக்குச் சென்று விட்டனர். நிகழ்ச்சி சார்ந்த விளக்கங்கள் நன்றாகக் கூறப்பட்டாலும்; காட்சிகளைக் காட்டுவதில் மேலும் அர்ப்பணிப்பு தேவை.

- ராஜேஸ்வரி ராதாகிருஷ்ணன், பெங்களூரு

று குறிப்பிட்டு எழுதுங்க. kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம்.




எந்திரன் படத்தை முதன்முதலில் 'ஐங்கரன்' நிறுவனம் தயாரித்து, முதல் ஷெட்யூலுக்கு முப்பது கோடி செலவழித்ததும், பணப் பிரச்னையால் பிறகு சுணக்கம் காட்டியபோது, நிதிப் பிரச்னையால் எங்கே படம் நின்று விடுமோ என்று பயந்த ஷங்கர் சன் பிக்சர்ஸிடம் தயாரிக்கச் சொல்லிக் கொண்டதும் பழைய கதை. ஆனால், ஐங்கரனிடமிருந்து சன் பிக்சர்ஸுக்குத் தயாரிப்புப் பணி மாறினாலும், ஐங்கரன் செலவழித்த முப்பது கோடியை இன்னும் சன் பிக்சர்ஸ் தரவில்லை என்பது லேட்டஸ்ட் தகவல். படம் கைமாறியபோதே எந்திரன் படத்தை விற்றுவிட்டுதான் ஐங்கரனுக்கு முப்பது கோடி தரப்படும். அதற்கு வட்டி எதுவும் கிடையாது என்று சன் பிக்ஸர்ஸ் தரப்பில் கறாராகச் சொல்லப்பட்டது என்று காது கடித்தார் முக்கிய விநியோகஸ்தர் ஒருவர்.

இப்போது எந்திரன் படம் ஏரியாக்களில் 250 கோடிக்கு பிஸினஸ் ஆனதாக கோலிவுட் வட்டாரம் கிசுகிசுக்கிறது. 'ஐங்கரன்' உரிமையாளர்கள் பெருமூச்சு

ரஜினிக்கு சம்பளம் 20 கோடி!

விடுவதால் கோடம்பாக்கம் அனலடிக்கிறது. இதுவரை தமிழ் சினிமா உலகமே கண்டிராத அளவில் தயாரிப்பாளருக்கு வாரிக் குவித்துவிட்டது எந்திரன். ரஜினியும், ஏ.ஆர்.ரஹ்மானும் துணையிருக்கத் தனது விளம்பரப் பலத்தால் முதல் ஒரு வாரத்திலேயே விநியோகஸ்தர்கள் வசூலை அள்ளிவிடுவார்கள் என்று சொல்கிறது சன். ''விற்பனை உரிமை கொடுக்க கொஞ்சம் தாமதம் செய்ததற்குக் காரணம் படத் தயாரிப்பு வேலைகள் தாமதப்பட்டதுதான். அனிமேட்ரானிஸ் என்ற கலையில் லேட்டஸ்ட் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இதற்கான வேலைகள் ஹாங்காங்கில் நடக்கின்றன. ரீரிகார்டிங்கும் நடந்துகொண்டு இருக்கிறது. படத்தை முழுவதுமாகப் பார்க்காமல் பல விநியோகஸ்தர்கள் துணிந்து முதலீடு செய்து விட்டார்கள்'' என்கிறார் மதுரையைச் சேர்ந்த விநியோகஸ்தர் ஒருவர். ''மதுரைப்








இதுவரை
எந்திரன் படத்தை
வாங்கிய
விநியோகஸ்தர்களில்
பெரும்பாலோர்
ஆளுங்கட்சியின்
பினாமிகளாம்!

பகுதி பதிமூன்று கோடி; கோவை 15 கோடி, திருச்சி 10 கோடி, சேலம் 10 கோடி, நெல்லை 6 கோடி, வேலூர் 35 கோடி என்று சினிமா மாவட்டங்களை வாங்கியிருக் கிறார்கள் விநியோகஸ்தர்கள். தெலுங்கு முழு உரிமையும் 37 கோடிக்கும், ஹிந்தி 15 கோடிக்கும் விற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். மலேஷிய, சிங்கப்பூர் உட்பட உலக ஏரியாவும் 16 கோடிக்கு போயிருக்கிறதாம். கர்நாடகா மற்றும் கேரளா 15 கோடிக்கு போயிருக்கிறது.



இன்னமும் ஐடியூன்கள் சாடிலைட் உரிமை ஆகியவையும் வருவாயைக் குவிக்கக் காத்துக் கொண்டிருக்கின்றன. சென்னை நகர உரிமையைப் பெற பலத்தப் போட்டி.


ஆனால், இதை சன் பிக்ஸர்ஸே வைத்துக் கொள்ளுமாம். நகரில் முப்பது தியேட்டர்களில் ரிலீஸ் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சாட்டிலைட் உரிமையும் மல்டி சேனல் உரிமையயும் 'சன்'னிடம்தான் இருக்கும். இதன் காரணமாக 'பிரமோ'வுக்காக கொடுக் கப்படும் ஸீன் பிட்டுகள், பாட்டு ஸீன்கள் தவிர வேறு எதையும் மற்ற சேனல்கள் உபயோகப்படுத்த முடியாது'' என்று சொல்கிறார் ஒரு விநியோக மீடியேட்டர். 'சிவாஜி' 92 கோடிக்குத்தான் விற்றதாம்.

படத்தின் விற்பனை உரிமை இப்படி அள்ளிக் கொட்ட, இசை உரிமை விற்பனையும் தம் பங்குக்குப் பண மழையாகக் கொட்டுகிறது. ஹிந்தி, தமிழ், தெலுங்கு இசை உரிமை ஏழு கோடிக்கு விற்றதாம். தமிழ், தெலுங்கு பாடல் சி.டிக்கள் முதலில் சுணக்கமாக இருந்து பின்னர் பிக்-அப் செய்து இதுவரை நான்கு பதிப்புகள் வெளியாகி விட்டன. இதெல்லாம் சரி! எந்திரன் தயாரிப்புச் செலவு எவ்வளவாம்? 70 கோடி என்கிறது ஒரு தகவல்; இல்லையில்லை 100 கோடியாக்கும் என் கிறார்கள் சன் வட் டாரங்கள். ரஜினியின் சம்பளம் மொத்தச் செல வில் இருபது சதவிகிதம் என்கிறார்கள். அதாவது இருபது கோடி. இதுவரை வாங்கிய விநியோகஸ் தர்கள் பெரும்பாலும் ஆளும் கட்சி பிரமுகர் களின் பினாமிகள் என்பது கூடுதல் தகவல். தமிழ் திரைப்பட வர லாற்றிலேயே இல்லாத அளவுக்கு 500க்கும் மேற்பட்ட பிரிண்ட்டுகள் போட இருக்கிறார்கள்.

மலேஷியாவில் பாடல்கள் வெளி யிடும்போது 'சன்' நிர்வாகி சக்ஸேனா செப்டம்பர் 24 ரிலீஸ் என்றார். ஆனால் அக்டோபர் மாத இறுதிக்குத் தள்ளிப் போகுமாம். 'எந்திரன்' விற்பனை குறித்து படுகுஷியில் உள்ள ரஜினி அடுத்து சத்யா மூவிஸ் நிறுவனத்துக்காக 'பாட்சா' பாகம் இரண்டில் நடிக்க இருக்கிறாராம்.

- ஸ்ரீநி

அருள்வாக்கு




ஓர் எஜமானன் கட்டளை இடுவது போல் 'சத்தியம் பேசு, தர்மமாக நட' என்று வேதம் ஆக்ஞைப் பிறப்பிக்கும். இதற்குப் 'பிரபு ஸம்மிதை' என்று பெயர். இதையே நண்பன் எடுத்துச் சொல்கிற மாதிரி புராணங்கள் கதா ரூபத்தில் விளக்கும். இதற்கு 'ஸுஹ்ருத் ஸம்மிதை' எனப் பெயர். கதையானாலும் புராணம் செய்த ரிஷிகளும் தர்மத்தை ரொம்பவும் வெளிப்படையாகவே வலியுறுத்திக் கொண்டு போவார்கள் – 'ஸுஹ்ருத்' அல்லது நீதிமானான நண்பன் பேசுகிற பாணியில். இதைவிட ஹிதமாகவும் மதுரமாகவும் தர்மத்தைச் சர்க்கரையில் தோய்த்த மாத்திரை மாதிரிக் கதையில் தோய்த்துச் சொல்கிறவன் கவி. நம் நாக்குக்குச் சர்க்கரை ருசிதான் தெரியும்; மருந்துச் சரக்கு இருப்பதே தெரியாது. வயிற்றுக்குள் போய்த்தான் அது

காந்தா ஸம்மிதை!

வேலை செய்யும். இம்மாதிரி காவிய ரஸத்தை நாம் அநுபவிக்கிறபோது நமக்குத் தெரியாமலே நமக்குள் தர்மங்கள் ஊறுகிற விதத்தில் கவி பேசுவான். காவியத்தை 'காந்தா ஸம்மிதை' என்பார்கள் – அதாவது அது ப்ரிய பத்தினியின் வாக்கு மாதிரி என்று அர்த்தம்.

உயர்ந்த கவி, மகத்தான தர்மங்களையும் தத்துவங்களையும் நவரஸத்தில் தோய்த்து மிகவும் ரஞ்ஜகமாகக் கொடுத்துவிடுகிறான். இலக்கிய உலகத்தில் இருப்பவர்கள் இதையே ஸவதர்மமாகக் கொள்ள வேண்டும் – வெறும் ரஞ்ஜகமாக மட்டுமல்லாமல் அதற்குள் தர்மமான பலனும் இருக்கிற மாதிரி எழுதவேண்டும். படிக்கிறவனை அப்போதைக்குச் சந்தோஷப்படுத்துவதோடு நில்லாமல், அவனை உயர்த்துகிற விதத்தில் எழுத வேண்டும்.

– **ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.**



வண்ணநிலவன்

அன்று வெகு நேரம் அழுதுகொண்டே இருந்தாள் மனோகரி. மனத்திலிருந்த பாரமெல்லாம் இறங்கியதைப் போலிருந்தது அவளுக்கு. அன்று விடுமுறையாக இருந்தாலும் சமையலெல்லாம் காலையிலேயே வழக்கம் போல் முடித்திருந்தாள். அழுது முடித்தபிறகு மனம் தெளிவாகிவிட்டது போலிருந்தது. சோப்புப் போட்டு முகத்தைக் கழுவி பொட்டு வைத்துக் கொண்டு, கார்த்திகாவை எழுப்பிச் சாப்பாடு கொடுத்தாள். வருணும் சிறிது நேரத்தில் வந்துவிட்டான். அவனுக்கும் சாப்பாடு எடுத்து வைத்தாள்.


உள்ளும் புறமும்



மனோகரி மாதிரி ஒரு பெண் இவ்வளவு பழமையாகவும் இருக்கக் கூடாது, சுசீலா மாதிரி இவ்வளவு புதுமைப் பெண்ணாகவும் இருக்கக்கூடாது என்று கிருஷ்ணபாரதிக்குத் தோன்றியது. அம்மா சொல்கிறமாதிரி, சுசீலாவை வீட்டுக்கு வர வேண்டாம் என்று சொல்வது அவ்வளவு நாகரிகமாகப் படவில்லை. இதைப் பக்குவமாக மனோகரிக்கு உணர்த்த வேண்டும் என்றே அவன் விரும்பினான். சுசீலாவிடமே இதைப் பேசிச் சரிக்கட்டினால் என்ன என்று தோன்றியது. சுசீலாவே மனோகரியிடம் இதை எல்லாம் மனம் விட்டுப் பேசினால் மனோகரியின் மனம் மாறி விடும் என்று நம்பினான். ஆனால், அதை எப்படிச் செயல்படுத்துவது என்பது தான் புரியவில்லை.

மனோகரி ஒரு கற்பனையான எதிரியுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறாள். சுசீலாவும் இன்னொரு கற்பனையான உலகத்தைக் கற்பிதம் செய்து கொண்டுதான்

வாழ்ந்துகொண்டிருக்கிறாள். இரண்டு பெண்களுக்கு நடுவே, தான் அவஸ் தைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று நினைத்தான். சுசீலா கற்பனை செய்து வைத்துள்ள அந்த உலகம் திருமண மானால் தானாகவே கழன்று விழுந்து விடும். யதார்த்த உலகத்துக்கும், அவன் கற்பனை செய்து வைத்திருக்கிற பெண் ணியக் கொள்கைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை அவளுடைய திருமண வாழ்வு உணர்த்திவிடும். அவளு டைய திருமணம் காலப்போக்கில் நடை பெற வேண்டிய ஒன்று. ஆனால், மனோ கரி சிக்கிக் கொண்டிருக்கிற கற்பனை உலகம் ரொம்பத் துக்ககரமானது. இதிலி ருந்து அவளை விடுபடச் செய்ய வேண் டும். பார்த்தா சொல்லுகிற மாதிரி, இதற் குக் கொஞ்சம் முரட்டு வைத்தியம்தான்



தேவை. மென்மையான அணுகுமுறை எல்லாம் சரிப்பட்டு வராது.

அந்த முரட்டு வைத்தியம் என்பது சுசிலாவும் மனோகரியும் சந்திக்க வேண்டும். மனோகரியின் கற்பிதங்களை சுசிலாவே உடைத்துவிட்டால் பிரச்னை ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்று கிருஷ்ண பாரதி நினைத்தான். இதற்கு சுசீலா ஒத்துழைப்புத் தருவாளா? ஒத்துக் கொள்வாள் என்றே தோன்றியது. ஏதோ தெளிவு பிறந்த மாதிரி இருந்தது. சாப்பிட்டான். சுசீலாவுக்கு அன்று அலுவலகம் இருந்தது அவனுக்குத் தெரியும். அவளை அலுவலகத்துக்கே சென்று சந்திப்பது என்று முடிவு செய்தான். பைக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.



சுசீலா, சக்தி என்ற பெண் கவிஞரின் கவிதைத் தொகுப்பைப் படித்துக் கொண்டிருந்தாள். ஆனால், தொகுப்பில் மனம் ஈடுபடவில்லை. அன்று காலை அலுவலகத்துக்கு வந்ததுமே ஜி.எம். அவளைக் கூப்பிட்டார். பொதுவாக ஜி.எம். யாரையும் அழைக்க மாட்டார். ஆனால், அவரே அழைக்கிறார் என்றால் ஏதாவது முக்கியமான விஷயமிருக்க வேண்டும். அவளிடம் எந்த வேலையும் பாக்கியில்லை. இரண்டே இரண்டு மொழிபெயர்ப்புகள்தான் வார ஆரம்பத்தில் வந்தன. அவற்றை உடனுக்குடன் செய்து முடித்து மேலே அனுப்பி வைத்துவிட்டாள். கடந்த மூன்று நாட்களாக வேலை எதுவுமில்லை. பின் ஏன் ஜி.எம். கூப்பிடுகிறார் என்று யோசித்தாள். எதைப் பற்றியுமே பயப்பட மாட்டாள். ஆனால், ஜி.எம். என்றதும் மனம் இலேசாகப் படபடத்தது.

முகத்தை ஹேண்ட்பேக்கிலிருந்த கைக்குட்டையால் துடைத்துக்கொண்டாள். தண்ணீர் குடித்தாள். பயம் தணிந்துவிட்டது போலிருந்தது. பக்கத்து ஸீட்டிலிருந்த ரகுவிடம் சொல்லிவிட்டு நடந்தாள். 'மோகன கிருஷ்ணன்' என்று எழுதியிருந்த அறைக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனதும், மோகன கிருஷ்ணன் குனிந்துகொண்டே ''உட்கார்'' என்றார்.

சுசீலா உட்காரவில்லை. நின்றுகொண்டே, ''பரவாயில்லே சார்...'' என்றாள்.

''அட, உட்காருன்னா...'' என்று எதிரே இருந்த இருக்கையைக் காட்டினார். சுசீலா மெதுவாக உட்கார்ந்தாள். ஏதோ ஒரு பெர்பியூம் மணம் இதமாக இருந்தது. அவளிடம் ஒரு ஃபேக்ஸ் மெஸேஜை எடுத்துக் கொடுத்தார். அந்தப் பேப்பரின் வழுவழுப்பும், அந்த இனிமையான மணமும் மனதுக்கு ரம்மியமாக இருந்தது.

''உனக்குப் பெங்களூர் ஆஃபீஸுக்கு ட்ரான்ஸ்பர் ஆகியிருக்கு சுசீலா...'' என்றார் மோகனகிருஷ்ணன். சிறிது நேரத்துக்கு முன் அந்த அறையில் பரவியிருந்த நறுமணமும், அந்த ஃபேக்ஸ் தாளின் வழுவழுப்பும் அவள் மனத்தில் கவித்திருந்த ரம்மியமெல்லாம் இப்போது காணாமல் போய்விட்டது. ஃபேக்ஸ் செய்தியைப் படித்துவிட்டு மெதுவாக மோகனகிருஷ்ணனைப் பார்த்தாள்.

"மனோகரி அக்கா இப்படி இருக்கிறது ஆச்சரியமாத்தா இருக்கு... அ·ஃப்கோர்

''பெங்களூர் ஆஃபீஸ்லே தமிழ் செக்ஷன்லே ஆள் இல்லே... பெங்களூர் போறதிலே உனக்கு ஆட்சேபணை ஒண்ணும் இல்லையே...?''

சுசீலா எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தாள். பெங்களூரு செல்வது தனக்கு நல்லதா, கெட்டதா என்பதை யோசிக்கக் கூட அவளால் முடியவில்லை. கண்களில் கண்ணீர் திரையிட்டது.

''இதை மாத்த முடியாதா சார்...?'' என்று ஹீனஸ்வரத்தில் கேட்டாள்.

''நீ ஜாயின் பண்ணி மூணு வருஷம் ஆயிட்டுது. நானும் மெட்ராஸ் ஆஃபீஸுக்கு வந்து மூணு வருஷம் ஆயிட்டுது. உன்னையாவது பெங்களூருக்கு ட்ரான்ஸ்பர் பண்ணியிருக்காங்க... என்னைக் கல்கத்தாவுக்குத் தூக்கியடிக்கப் போறாங்களோ, டெல்லியிலே போடறாங்களோ... ஹெட் ஆஃபீஸ்லே ருந்து வந்தாச்சுன்னா அதுக்கு



...ங்க வளர்ந்த சூழ்நிலை அப்படி. என்ன பண்றது..."

அப்பீல் ஏது...? போட்டா போட்டது தான்...வேணா நீ ஒண்ணு பண்ணலாம்... அங்கே போய் ஜாயின் பண்ணிட்டு, வயசான அப்பா தனியா இருக்கார், அதனாலே எனக்குச் சென்னையே தேவலைன்னு கேட்டுப் பாரு... பலிச்சாலும் பலிக்கும்...''

சிறிது நேரம் அமைதியாக இருந்தாள். பிறகு அவரிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டாள். ''ஆல் த பெஸ்ட்...'' என்று வாழ்த்தினார் ஜி.எம். அவள் தன் ஸீட்டில் வந்து உட்கார்ந்ததும், ரகு என்னவென்று விசாரித்தான். ஒவ்வொருவராக வந்து விசாரித்தனர். எல்லோரிடமும் ஒரே பதிலைச் சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டது.

எல்லோரும் சென்ற பிறகு அப்பாவுக்கு ஃபோன் போட்டுச் சொன்னாள். ''அப்பா, சரி, வீட்டுக்கு வந்தப்புறம் பேசிக்கலாம்...'' என்று சொன்னார். எதையாவது படிக்கலாம் என்று தோன்றியது. சமீபத்தில் வெளி வந்திருந்த 'சக்தி'யின் கவிதைகளை சில தினங்களுக்கு முன்புதான் வாங்கியிருந்தாள். அதை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். ஆனால், கவிதைகளில் லயிக்க முடியவில்லை. யந்திரம் மாதிரி விரல்கள் பக்கங்களைப் புரட்டின. அப்போதுதான் ரிஸப்ஷனிலிருந்து கிருஷ்ணபாரதி வந்திருப்பதாக அழைப்பு வந்தது. இலேசான ஆச்சரியத்துடன் ரிஸப்ஷனுக்கு வந்தாள். அவளைப் பார்த்ததும் கிருஷ்ணபாரதி சிரித்தான். அவளுடைய இயல்பான கலகலப்பு தொற்றிக்கொண்டது.

''என்ன, வழி தப்பி வந்துட்டீங்களா?'' என்று கேட்டுக்கொண்டே அவனுக்கு எதிரே அமர்ந்தாள்.

''இந்தப் பக்கம் வந்தேன். அதான் பாத்துட்டுப் போலாம்னு...'' என்று சமாளித்தான் கிருஷ்ணபாரதி.

''வந்தவரைக்கும் சந்தோஷம்... கேண்டீன்லே போய் ஏதாவது சாப்பிடலாமா...?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணும் வேண்



டாம்... சாப்பிடற மூடு இல்லை...'' என்றான்.

''காபி, டீ சாப்பிடறதுக்கு என்ன மூடு வேண்டிக் கெடக்கு?''

''அதுக்கில்லே... வயிறு சரியில்லை...'' என்று மழுப்பினான்.

''சரி... விட்டுடறேன்... என்ன திடீர் விஸிட்...?''

''வேற ஒண்ணுமில்லே... ஒரு விஷயத்துல உன்னோட ஹெல்ப் கொஞ்சம் வேணும்.... உன்கிட்டே கொஞ்ச நேரம் பேசலாம் இல்லே...''

''தாராளமாப் பேசலாம்.... ஃப்ரீயாத்தான் இருக்கேன்... என்ன இது, ஹெல்ப் அது இதுன்னு பெரிசாப் பீடிகை போடுறீங்க...''

கிருஷ்ணபாரதிக்கு விஷயத்தை எங்கே ஆரம்பிப்பது என்று சிறிது தயக்கமாக இருந்தது. பிறகு மெள்ளச் சமாளித்துக் கொண்டு ஆதியோடு அந்தமாக மனோகரி விஷயத்தைச் சொல்லி முடித்தான். சலனமில்லாமல் எல்லாவற்றையும் சுசீலா கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் சொல்லி முடித்தபிறகு நீண்ட மௌனம் நிலவியது.

''மனோகரி அக்கா இப்படி இருக்கிறது ஆச்சரியமாத்தான் இருக்கு... அப்கோர்ஸ் அவங்க வளர்ந்த சூழ்நிலை அப்படி. என்ன பண்றது... ஆனா நீங்க சொல்றாப்பிலே நானே வந்து அவங்ககிட்டே பேசினா ஒருவேளை அவங்க கோபம் ரொம்ப அதிகமாயிடிச்சின்னா...?''

''என்ன கத்துவா...? உன்னையேகூட சத்தம் போடுவா...''

''என்கிட்டே கோபப்பட்டா நான் தப்பா எடுத்துக்க மாட்டேன். அவங்க நெலைமை எனக்குப் புரியுது. ஆனா, உங்க ரெண்டு பேர் மத்தியிலே மேலும் விரிசல் அதிகமாயிடுமே... அதுதான் எனக்குக் கவலை... இன்னொரு விஷயம். எனக்குப் பெங்களூருக்கு ட்ரான்ஸ்பர் ஆயிருக்கு. அதனாலே நான் முன்னே மாதிரி அடிக்கடி உங்களைப் பார்க்க வீட்டுக்கு வர மாட்டேன்...''

''பெங்களூருக்கு ட்ரான்ஸ்பரா?''

''ஆமா... அதனாலே, இது காலப் போக்கிலே தானாகவே சரியாயிடும்னு தோணுது...''

''அப்படி ஆனாலும் ஆகும்... ஆனாலும், நீ எனக்காக மனோகரிகிட்டே ஒரு தடவை பேசு...''

''கண்டிப்பா பேசறேன். உங்க குடும்ப வாழ்க்கையிலே எனக்கு அக்கறை இருக்கு... என்னாலே உங்க ரெண்டு பேருக்குள்ளே நல்ல உறவு ஏற்படும்னா கண்டிப்பா இன்னைக்கே வந்து பேசறேன்'' என்றாள் சுசீலா.

(தொடரும்)

அமரர் கல்கி

ஜீவ யாத்திரை!



பீரங்கி வெடித்ததில் உண்டான புகை மண்டலம் நீங்கியதும் மீரா கண் விழித்துப் பார்த்தாள்.

எதிரே மகாராணா நிற்பது தெரிந்தது.

''யார்? மகாராணாவா? திரும்பி வந்தாகி விட்டதா? அப்படியானால், கோயிலை இடிக்கும்படி கட்டளையிட்டது உண்மையிலேயே மகாராணா தானா?'' என்று மீரா எண்ணமிட்டாள்.

கோயில் படியின் மீதிருந்தபடியே மகாராணாவை நோக்கி, ''ஸ்வாமி! ஆலயத்தை இடிக்கும்படி தாங்கள் கட்டளை இட்டீர்களா?'' என்று கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் மகாராணா மௌனம் சாதித்தது மீராவுக்கு வியப்பையும் வேதனையையும் அளித்தது.

கல்யாணம் ஆன புதிதில் மகாராணா தன்னிடம் காட்டிய அன்பையும், அருமையையும் நினைவுகூர்ந்தாள். அன்றொரு நாள் இதே பூரண சந்திரன் சாட்சியாக அக மகிழ்ந்து, முகமலர்ந்து, ''கண்ணன் கோயில் கட்டுவோம். சித்தூரைப் பிருந்தாவனம் ஆக்குவோம்'' என்று கூறிய அதே ராணா, இன்று கோயிலை இடிக்க உத்தரவிட்டது ஏன்?

ஒரு கணம் மூடிய கண்களோடு மீரா சிந்தனை செய்துவிட்டு, ''பிரபு! கிரிதாரி! உன் சித்தம் தெரிந்தது! என் கண் திறந்தது! இதோ வருகிறேன், ஐயனே!'' என்றாள். பின்னர் மகாராணாவை ஏறிட்டுப் பார்த்து இந்த மொழிகளைக் கூறினாள்:

''மகாராணா! மன்னியுங்கள்! என் தவறை இன்று உணர்ந்தேன். வீர ராஜபுத்திர மன்னராகிய தங்களுக்கு நான் தகுந்த பத்தினி அல்ல... அரண்மனை வாழ்வும், அரசு போகமும் எனக்கு உகந்தவையல்ல... அறுசுவை உண்டி அருந்தவும், ஆடை ஆபரணங்கள் பூணவும், அரியாசனத்தில் வீற்றிருக்கவும் நான் பிறந்தவள் அல்ல... மகாராணா! இங்கு வெடித்த பீரங்கிச் சத்தத்தில், என் பிரபுவின் குரல் ஒலியைக் கேட்டேன். என் இறைவன் என்னை அழைக்கிறான். நான் போகிறேன், ஸ்வாமி! நான் போகிறேன். ஆயர் குடிசையில் வளர்ந்த தீனபந்துவைத் தேடிப் போகிறேன். கானகத்தில் மாடு மேய்த்த கருணாமூர்த்தியைத் தேடிப் போகிறேன். பரந்தாமன் பாதம் பட்ட பிருந்தாவனத்துக்குப் போகிறேன்.''

இவ்விதம் சொல்லிக் கொண்டே மீரா, ஆலயத்தின் படிகளின் வழியாகக் கீழே இறங்கி வந்தாள். ராணா நின்ற இடத்தை நெருங்கி வணங்கி நமஸ்கரித்தாள். மீராவின் பேச்சிலும் தோற்றத்திலும் காணப்பட்ட தெய்விக சக்தியானது ராணாவை ஒன்றும் செய்ய முடியாதவனாய்ச் செயலிழந்து நிற்கச் செய்தது. மற்றவர்களும் ஸ்தம்பித்து நின்றார்கள்.

கோயில் அர்ச்சகப் பிள்ளை கொண்டு வந்து கொடுத்த தம்புராவை அன்புடன் வாங்கிக் கொண்டு மீரா தன் ஜீவ யாத்திரையைத் தொடங்கினாள்.

மறைந்த கூண்டிலிருந்து விடுதலை பிறந்த பறவை, நீலவானிலே ஆனந்தமாகப் பாடிக் கொண்டு பறந்து சென்றது.

– மீரா யாத்திரையிலிருந்து

கல்வெட்டுகள்

தூக்கம் இழந்த பொம்மைகள்

இரவுகளில்
தரையில் விரிக்கப்பட்ட மெத்தையில்
பொம்மைகள் புடைசூழத் தூங்குவாள்
எங்கள் வீட்டு இளவரசி

பொம்மைகளுடனான
அவளின் உலகத்தில்
அனுமதியில்லை யாருக்கும்

பொம்மைகளுக்கு
அம்மாவைப் போல் ஊட்டி விடுவாள்;
ஆசிரியையாக
பாடம் சொல்லித் தருவாள்;
பாட்டியாகக் கதை சொல்வாள்;
தூங்க மறுக்கும் பொம்மைகளை
அப்பாவாக மிரட்டி உருட்டியும்
தூங்கப் பண்ணுவாள்

விழிப்பு வரும் நடு இரவுகளில்
இளவரசியைத் தேடினால்
மெத்தையிலிருந்து உருண்டுபோய்
வெறும் தரையில் விழுந்து
தூங்கிக் கொண்டிருப்பாள்
தேவதைக் கனவுகளுடன்...

இவளின் வரவை எதிர்பார்த்து
மெத்தையில் உருண்டுகொண்டிருக்கும்
அவளின் பொம்மைகள்
கொட்டக்கொட்ட விழித்தபடி!

- சோ.சுப்புராஜ்

எனக்குள் அலையும் மீன்

இரண்டு பக்கமும்
பற்களிலிருக்கும் சீப்பு போல
தோன்றவே செய்கிறது
உடல் நீத்த சிறு மீனின் எலும்புக்கூடு.
இரு உள்ளங்கைகளிடையே வைத்து
மூடுகிறேன்
அது உடலாகிறது
எனக்குள் அலைந்து
நானே மீனாகிறேன்.

- ப.தியாகு

நினைத்தோமா?

நடக்காததைப் பற்றியே
நாமிருவரும்
பேசிக்கொள்வதாக
வருத்தத்தோடு சொல்கிறாய்...
காலங்கள்
காய் நகர்த்தும் ஆட்டத்தில்
இப்படிக்கூடப்
பேசிக் கொண்டிருப்போமென
யார்தான் நினைத்தது...?

- சிவபாரதி

**வாசகர்களே! உங்க க்யூட் கவிதைகளைச்
சீக்கிரமா 'கவிதை கஃபே'ன்னு குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.**

இழந்த காலம்

ஏர் சுமக்கும்
தோள்களின் விடியல்

நடவுப்பாட்டு
ஒலிக்கும் பகல்

மண்வாசம்
கிளர்ந்தெழும் அந்தி

வள்ளியும்
முருகனும்
நல்லதங்காவும்
பவளக்கொடியும்
வந்து போகும்
இரவுகள்...

பார்க்க முடியவில்லை
பஞ்சம் தவிர்க்க
நகரம் வந்த நாள்முதலாய்.

- திருவைக்குமரன்

வருகை

இரைகள் தேடிச் சென்ற
பறவையின்
வருகைக்காக
மரம் இன்னமும்
உறங்காமலிருக்கிறது!

- வீ.சிவசங்கர்



பத்து ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் உலகம் மறக்காத கறுப்புத் தினங்களில் ஒன்று செப்டெம்பர் 11. சற்றும் எதிர்பார்க்காத தருணத்தில் சில நிமிடங்களில் அல் கொய்தா தீவிரவாதிகளின் தாக்குதலால் தரைமட்டமாகிப் போனது நியூயார்க் வேர்ல்ட் டிரேட் சென்டர் இரட்டைக் கோபுரங்கள். அணுகுண்டு வீசி அழிக்கப்பட்ட இடம் கிரவுண்ட் ஜிரோ (ground zero) என அழைக்கப்படும். அந்தப் பெயரிடப்பட்ட இந்த இடத்தில் இப்போது விசாரணைகள் எல்லாம் முடிந்து, அமையப் போகும் புதிய பெரிய பல மாடிக் கோபுரத்தின் பெயர் சுதந்திரக் கோபுரம். மாடல் டிஸைனை, மக்களை ஓட்டளிக்க வைத்துத் தேர்ந்தெடுத்து இருக்கின்றனர்.



✱ டெய்ஸிகான்



✱ உருவாகும் இது...

மறைந்தவர்களுக்கு நினைவு சின்னம், மியூஸியம், அழிவில் மிஞ்சிய அடையாளச் சின்னங்களுடன் பார்க்... என மெள்ள எழுந்துகொண்டிருக்கும் கட்டடத்துடன் ஒரு பிரச்னையும் சேர்ந்து எழுந்துகொண்டிருக்கிறது. தாக்கப்பட்ட கட்டடத்தின் மிக அருகில் இருந்த ஒரு தனியார் கட்டடம் நூறு மில்லியன் டாலர் செலவில் ஒரு மசூதியாகப் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. இரு மதி டெய்ஸிகான் தலைமையில் இயங்கும் குழு நன்கொடை வசூலித்து இந்த வேலையைச்

எழுந்துகொண்டிருக்கும் பிரச்னை!



செய்கிறது. இவர் அப்துல் ராஃப் என்ற இமாமின் மனைவி. ஆனால், அல் கொய்தாவின் மறைமுக உதவி என்பது பரவலாக உலவும் வதந்தி. இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டதில் இருந்தே முஸ்லிம்கள் மீது கோபமாக இருக்கும் அமெரிக்கர்கள், இதனால் கொதிப்படைந்து இருக்கிறார்கள். 'வேறு இடத்தில் அமைக்கவேண்டும், அனுமதியே கூடாது...' என, கண்டனக் கூட்டங்கள், போராட்டங்கள் வலுக்க ஆரம்பித்து இருக்கின்றன. இதைவிட அமெரிக்க மக்களுக்கு அதிர்ச்சி தந்தது, பல வாரங்களாக அமைதி காத்த அமெரிக்க அதிபர் ஒபாமா இந்த மசூதி அமைப்பதற்கு ஆதரவு தெரிவித்து இருப்பதுதான். "அமெரிக்காவில் எந்த மதத்தினரும் தங்கள் மத வழிபாட்டுத் தலங்களை அமைத்துக் கொள்ள உரிமை உள்ளது. அதைத் தடை செய்வது அவர்களுக்கு நம் சட்டம் வழங்கியிருக்கும் சுதந்திரத்தைப் பறிக்கும் செயலாகும்" என்கிறார் ஒபாமா. அல்-கொய்தா இஸ்லாம் இல்லை. அவர்களது செயலுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம்களை வெறுப்பது கண்ணியமற்றச் செயல் என்பது அவர் கட்சியின் நிலை.

ஒபாமா ஒரு கிறிஸ்துவராக இருந்தாலும் இன்னும் பெயரில் ஒட்டிக்கொண்டிருக்கும் தனது தந்தை பெயரான ஹுஸைனை நீக்கவில்லை. எந்த அமெரிக்க அதிபரும் செய்யாத இப்தார் விருந்தை வெள்ளை மாளிகையில் அளித்திருக்கிறார். அதனால் ஒபாமா முஸ்லிம்களின் செயல்களை நியாயப்படுத்துவதில் ஆச்சரியமில்லை என அவருக்கு மதச் சாயம் பூசுகிறார்கள் மசூதிக்கு எதிராகப் போராடுவோர்.




- ரமணன்



விஜயலக்ஷ்மி, திருவையாறு

அவசியம் எண்ணெய் தேய்த்துக் குளித்தே ஆக ணுமா...? அதனால் அப்படி என்னதான் பயன்?



✱ திருநாராயணன்

சித்த மருத்துவர் திருநாராயணன்:

''சித்த - ஆயுர்வேத மருத்துவங்களில் எண்ணெய் தேய்த்தலுக்கு மருத்துவ ரீதியாகப் பெரும் முக்கியத்துவம் உண்டு. ஒரு சிலருக்கு உடலில் சூடு (ஒரு வகையான பித்தம்) அதிகமாக இருக்கும். அதைத் தணிக்க, சந்தனாதி தைலத்தைப் பூசுவது நல்ல பலன் அளிக்கும். அதேபோல வாதத்தைப் போக்க கக்குத் தைலமும் கபத்தை நீக்க பூண்டும் மிளகும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட எண்ணெயும் பயன்படுத்தலாம். இவை எல்லாவற்றையும்விட நல்லெண்ணெய் கொண்டு வாரத்தில் இரண்டு நாட்கள் அல்லது ஒரு நாளாவது உச்சி முதல் உள்ளங்கால் வரை தடவிக் குளித்தால், நமது சருமத்துக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும். மேலும் நல்லெண்ணெயில் உள்ள sesamin நமது சருமத்தை இளமையாக வைக்க உதவும். சூரியனின் வெப்பம் நமது சருமத்தைத் தாக்குவதால் வரக்கூடிய தோலின் வறட்சித் தன்மை மற்றும் வயது முதிர்ந்த தன்மையை நல்லெண்ணெய் போக்கிவிடும்.''

பாஸ்கரன், பள்ளிக்கரணை

என்னோடு வேலை செய்யும் நண்பனுக்கு முப்பத்தைந்து வயது தான் ஆகிறது. அவனுக்கு சர்க்கரை நோய் இருக்கிறது. இவ்வளவு சிறிய வயதில் சர்க்கரை நோய் வருமா...! அறிகுறிகள் என்னென்ன?

நீரழிவு நோய் நிபுணர் ஜெயஸ்ரீ கோபால்:

''சர்க்கரை நோயின் அறிகுறியே, ஓர் அறிகுறியுமே இல்லாமல் இருப்பதுதான். நமது உடம்பில் சர்க்கரையின் அளவு 300க்கு மேல் தாண்டினால்தான் அடிக்கடி தாகம் எடுக்கும்; சிறுநீர் கழிப்போம். திடீரென உடல் எடை குறைவது, உடல் சோர்வு இப்படி வர ஆரம்பிக்கும். முன்பெல்லாம் நாற்பது வயது கடந்தவர்களைத்தான் சர்க்கரை நோய் பரிசோதனை செய்துகொள்ள சொல்வோம். இப்போது முப்பது வயதுக்கு மேல் உள்ளவர்கள் கட்டாயம் வருடத்துக்கு ஒரு முறையேனும், சர்க்கரை, உயர் ரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ட்ராலுக்கான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். உடல் பருமன், உடற்பயிற்சி இல்லாமை,

கசக்கும்

நடை பயிற்சி என்பதே இல்லாமல் இருப்பது... இவைதான் சர்க்கரை அளவை வெகு சுலபமாக ரத்தத்தில் ஏற்றிவிடுகிறது. வயதுக்கும் சர்க்கரைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.''

கமலா ராமு, நங்கைநல்லூர்

''என் தாயாருக்கு இரண்டு வருடங்களாக சர்க்கரை நோய் இருக்கிறது. அதனால், அவர் பழங்களைச் சாப்பிடவே பயப்படுகிறார். சர்க்கரை நோய் உள்ளவர்கள் பழங்கள் சாப்பிடவே கூடாதா?



✱ ஜெயஸ்ரீ கோபால்

''சர்க்கரை நோய் உள்ளவர்கள் பழங்களே சாப்பிடக் கூடாது என்பது சரியில்லை.

உங்கள் சந்தேகங்களை
'கல்கி கிளினிக்' என்று
குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.comக்கும்
அனுப்பலாம். உங்கள்
செல்போனில்,
kacli என்று டைப் செய்து
ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள்
கேள்வி,பெயர், ஊர்
ஆகியவற்றுடன் 562632
என்ற எண்ணுக்கும்
எஸ்.எம்.எஸ். செய்யலாம்.



சர்க்கரை?

ஆனால், வாழைப்பழம், மாம்பழம், சப்போட்டா மற்றும் பலாப்பழத்தை இவர்கள் அதிக அளவில் எடுத்துக் கொள்ளக்கூடாது. வாரத்தில் ஒரு நாள் அல்லது பத்து நாட்களுக்கு ஒருமுறை மேற்சொன்ன பழங்களைச் சாப்பிடலாம். சமீபத்தில் ஃபிரான்ஸ் நாட்டில் நடந்த ஓர் ஆய்வின்படி வாழைப் பழம் சாப்பிடுவதால், சர்க்கரை குறைகிறது என்று கண்டு பிடித்து உள்ளார்கள். பழங்களில் உள்ள anti oxidants மற்றும் pottasium உயர் ரத்த அழுத்தத்தைக் குறைக்கும் தன்மை கொண்டது. உங்கள் தாயாரைத் தாராளமாகப் பழங்களைச் சாப்பிடச் சொல்லுங்கள், சர்க்கரை நோய் மருத்துவரின் ஆலோசனையோடு.



"நம்ம தலைவர் ஏன் தன் தொகுதியிலேயே ஷூட்டிங் நடத்தறார்?"

"தலைவர் தொகுதியில எதுவுமே நடக்கலைன்னு பேர் வந்திடக்கூடாது பாருங்க... அதான்!"

- வைகை ஆறுமுகம்

"என் மருமகள் பார்த்தா பசு போல இருக்கா. பாய்ந்தா புலி போல பாய்றா!"

"எதற்கும் ஒரு கால்நடை மருத்துவர்கிட்ட காட்டுங்க."

- தேனி முருகேசன்





"என்னாங்க, ஒருத்தருக்கு உடம்பு சரியில்லைன்னா குடும்பத்துக்கே ஊசி போடுறாரு?"

"அவர் குடும்ப டாக்டராச்சே."

- சங்கீத சரவணன்

"கஜானா கணக்கர்கிட்ட மன்னருக்கும், அமைச்சருக்கும் பனிப்போர் நடக்குதுன்னு சொன்னது தப்பாப் போச்சு!"

"அடடே அப்படி என்ன செய்தார்?"

"ஹி...ஹி... இரண்டு ஸ்வட்டரும், இரண்டு கம்பளியும் உடனே வாங்கிட்டாரே!"

- காழி.ஆர்.சீதாராமன்





"வரும் சட்டசபைத் தேர்தலில் நாம் தனித்தே போட்டியிடுவது 'உறுதியான' ஒரு விஷயம்..!"

"நல்லது தலைவரே..."

"அதற்குள் யாரும் நம்மை கூட்டணிக்குக் கூப்பிடாதவரையில்...!"

- வெ.சீதாராமன்

தலைவர் தொகுதியில் ஷூட்டிங்!

"அந்த எழுத்தாளர் எதுக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்திருக்கார்?"

"அவர் எழுதிக்கிட்டிருக்கிற க்ரைம் கதையில் குற்றவாளி யார், எங்கிருக்கான்னு தெரியலையாம். கண்டுபிடிச்சுக் கொடுக்கணுமாம்!"

- ஆர்.ராஜலட்சுமி





நமது நாட்டில் பதினோரு பெரிய துறைமுகங்கள் இருக்கின்றன. டி.ஆர்.பாலு கப்பல் துறைக்கு மத்திய அமைச்சராக இருந்தபோது, சென்னையைச் சேர்ந்த தி.மு.க. கவுன்ஸிலர்கள், மாவட்டச் செயலாளர்கள் ஆகியோரை இந்தத் துறைமுகங்களின் நிர்வாக சபையில் உறுப்பினராக நியமித்தார். இப்போது வாசன் அமைச்சராக இருக்கிறார். அவரது அணியைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள், வாசன் தங்களை அந்தப் பதவிக்கு நியமிப்பாரா என்ற ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், வாசன் ஒன்றும் செய்வதாகத் தெரியவில்லை. ''நானே அந்த இலாகாவைவிட்டு வேறு லகுவான இலாகா கேட்டுக் கொண்டிருக்கிறேன். கப்பல் துறையைப் பொறுத்தமட்டில் நான் யாருக்கும் எதுவும் செய்வதாக இல்லை'' என்கிறாராம் வாசன்ஜி.

வாசன் மீது வருத்தம்!

தலைநகர் தலைமுழுக்கு!

ஜெ.வுக்கு அதிகக் கூட்டம் வருவது தி.மு.க. வட்டாரத்தில் 'கிலி'யை உண்டாக்கி இருக்கிறது. சென்னையைச் சேர்ந்த தி.மு.க. பிரமுகர்கள், ''இந்த முறை சென்னையில் இரண்டு தொகுதிகள் நமக்குக் கிடைத்தாலே அதிகம்'' என்கிறார்கள். இப்போது சென்னையில் உள்ள 14 தொகுதிகளில் ஏழு தொகுதிகள் அ.தி.மு.க மற்றும் அதன் கூட்டணி கட்சியான மார்க்ஸிஸ்ட் கட்சியிடம்

தனித்து நின்றால் தற்கொலை!

''இந்த முறை ஏதாவது ஒரு கட்சியுடன் இணைந்துதான் தேர்தலைச் சந்திக்க வேண்டும்.நல்ல கட்சியுடன்தான் கூட்டணி என்று சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. தனித்து நின்றால் தற்கொலைதான்'' என்கிறார் தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் ஒருவர். மனைவியும் மைத்துனரும் கொடுப்பதை வாங்கிக்கொண்டு ஜெயலலிதாவுடன் கூட்டணி சேர வற்புறுத்த, விஜயகாந்த் விழி பிதுங்குகிறாராம்.





கூட்டணி பலம் கோடி புண்ணியம்!

தனியாக நின்று ஆட்சிக்கு வரும் அளவுக்கு தி.மு.க.வுக்கு வாக்கு வங்கி கிடையாது. கூட்டணி பலத்தில் (அதுவும் காங்கிரஸ் இருக்க வேண்டும்)தான் கோட்டையைப் பிடிக்க வேண்டும். இந்த நிலையில் வரும் தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் - வி.சிறுத்தைக் கூட்டணி வெற்றிக் கூட்டணி என்ற சந்தேகம் காங்கிரஸ் பிரமுகர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ''மாற்றுக் கட்சிகளிலிருந்து ஆட்களை இழுப்பதால் தி.மு.க.வுக்குப் பலம் கூடுதலாகாது. மாறாக புதிய ஆட்கள் முக்கியத்துவம் காரணமாகப் பழைய கழகப் பிரமுகர்கள் உள்ளடி வேலைகளில் இறங்குவார்கள். பல நல்ல திட்டங்களை தி.மு.க அரசு கொண்டு வந்திருந்தாலும், நம்பிக்கையோடு தேர்தலைச் சந்திக்கத் தயக்கமாகத்தான் இருக்கிறது. பா.ம.க.வையும் எங்கள் அணியில் சேர்க்க கலைஞர் முயலவேண்டும்'' என்கிறார் ஒரு முக்கிய காங்கிரஸ் பிரமுகர்.



இருக்கின்றன. தி.மு.க.வுக்கு வரும் தேர்தலில் ரொம்பக் கஷ்டம்... ஏனென்றால் கட்சிக்கு அந்த அளவு 'நல்ல பெயரை' சென்னையில் சம்பாதித்து வைத்திருக்கிறார்கள் மாவட்டச் செயலாளர்கள். மேலும் கழகத்தில் கோலோச்சும் குடும்பம், வாக்காளர்களிடையே அலர்ஜியை உண்டாக்கியிருக்கிறதாம்.

பாலிடிக்ஸ் பஜார்



அல்வா கொடுக்கும் செல்வம்!

மங்களூரு தொகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் செல்வப் பெருந்தகை. இவர் பகுஜன் சமாஜ் கட்சிக்குப் போய் பின்னர் தற்போது காங்கிரஸில் இணைந்திருக்கிறார். இப்படி இவர் கட்சி தாவியும் பெருந்தன்மை(?) காரணமாக கட்சித் தாவல் சட்டப்படி இவரைப் பதவி நீக்க திருமாவளவன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், காங்கிரஸில் இணைந்தது சிறுத்தைக்கு நடுக்கத்தை உருவாக்கியிருக்கிறது.



தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இருப்பதால் அந்தத் தொகுதியை காங்கிரஸுக்காகப் பெற்று மீண்டும் செல்வம் அங்கே போட்டியிடுவாரோ என்ற நடுக்கம்தான். ''நாங்கள் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் இருக்கும் பட்சத்தில் மங்களூரு தொகுதியை யாருக்கும் விட்டுத் தர மாட்டோம்'' என்று சிறுத்தைப் பிரமுகர்கள் சொல்கிறார்கள். **- சஞ்சயன்**

தீராத விளையாட்டு விட்டலன்



வாரக்ரீ யாத்திரைக்கு அந்த அனுமதி பகலில் கிடைத்தால் அப்போதே கிளம்பிவிடுவார்கள். இரவில் அனுமதி கிடைத்தால் அடுத்த நாள் காலை தான் கிளம்புவார்கள். கிளம்புவதற்கு முன் ஒவ்வொரு திண்டியின் தலைவருமான 'மாலிக்' என அழைக்கப்படுபவருக்கு ஞானேஸ்வரர் (அதாவது அவரது சார்பில் ஒருவர்) பிரசாதம் அளித்து கௌரவப்படுத்துவார்.


ஆலந்தியிலிருந்து யாத்திரை முதலில் பூனாவை நோக்கி நகரும். அஷ்டமி அன்றே பூனாவை அடைந்துவிட்டால் இரண்டு நாட்கள் அங்கு தங்குவார்கள். நவமி அன்றுதான் அடைய முடிகிறது என்றால் ஒருநாள்தான் தங்கமுடியும். எப்படியும் ஏகாதசி அன்று காலை கிளம்பிவிட வேண்டியதுதான். அடுத்து இந்த யாத்திரை 'ஸாஸ்வட்' எனும் இடத்தை நோக்கிப் பயணம். அங்கு ஞானேஸ்வரரின் தம்பி சோபான் மகராஜ் சமாதி உள்ளது. துவாதசி அன்று அங்கிருந்து கிளம்பும்போது சோபான் மகராஜின் பால்கியும் (பல்லக்கு) அங்கிருந்து கூடுதலாகக் கிளம்பும். பிறகு வாரக்ரீ யாத்திரை அடுத்தடுத்த நாட்களில் ஒருசில இடங்களில் தங்கிவிட்டு, அங்கிருந்து பண்டரிபுரம் சென்றடையும்.

''யாத்திரையின்போது யாருக்காவது உடம்பு சரியில்லாமல் போனாலோ, ஓய்வெடுத்துக்

பாகம்-2

கொள்ள "வேண்டுமென்றாலோ என்ன செய்வது? மொத்த திண்டியும் நிற்க வேண்டியதுதானா? வரிசைக் கிரமமாகத் தான் திண்டிகள் போக வேண்டுமென்றீர்களே, அப்போது பின்னால் வரும் திண்டிகளும் நிற்க வேண்டி வருமே'' என்று கவலையை வெளிப்படுத்தினான் ஜருகண்டி.

''உடல் சுகவீனம் அடைந்தால் யாத்திரையில் ஆங்காங்கே இடம்பெறும் 'ட்ரக்கில்' ஏறிக்கொள்ளலாம். சமையல் பொருட்களையெல்லாம் இந்த ட்ரக் வாகனங்கள்தான் சுமந்துவரும். தவிர யாத்திரையில் அவசர உதவிக்காக ஆம்புலன்சும் கூடவே வரும்.''





இலை வடிவில் ஆசீர்வாதம்!

காசை வாங்கிப் போட்டுக் கொண்டவுடன் கீழே வைத்த புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். படிப்பதில் இவ்வளவு சுவாரசியம் காட்டுகிறாரே என்று வியப்பாக இருந்தது. அன்றிரவு ஆலய மண்டபத்தில் எக்கச்சக்கக் கூட்டம். ஒருவரது பெயரைக் குறிப்பிட்டு அவர் இப்போது கீர்த்தனைகள் பாடுவார் என்று அறிவித்தவுடன் நிறைய கைதட்டல்.

ஜோப்தார் எனப்படும் பாதுகாவலர் அந்த மக்கள் கூட்டத்துக்கு நடுவே வழியை ஏற்படுத்திக்கொடுக்க, 'மகராஜ்' மேடையேறி தொடர்ந்து இரண்டு மணி நேரங்களுக்கு தனது அற்புதமான குரலாலும் அபங்க ஞானத்தினாலும் மக்களைக் கட்டிப்போட்டார். உள்ளூர் மக்களின் பெரும் ஆதரவைப்பெற்ற அவர்தான் ஒரு ரூபாய்க்காக எனக்கு வேர்க்கடலை அளித்தவர்!''

'உடலைத் தேவையில்லாமல் வருத்திக்கொள்ளக் கூடாது' என்ற சிந்தனை வாரக்ரீ யாத்திரையின் அடிநாதமாக உள்ளது. யாத்திரையின்போது காலணிகள் அணியவும் தடையில்லை.

உண்மையான விட்டல பக்தர்கள் எளிமைக்கு உதாரணமாக இருப்பார்கள். இது குறித்து வாரக்ரீயில் வருடம்தோறும் கலந்து கொள்ளும் ஒருவர் எங்களிடம் பகிர்ந்து கொண்ட சம்பவம் இது.

''வாரக்ரீ' யாத்திரை முடிந்தபோது ஒரு எளிய கடையில் வேர்க்கடலை வாங்கினேன். தான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு வேர்க்கடலையைக் கொடுத்தார் கடைக்காரர். பிறகு நான் நீட்டிய

வாரக்ரீ யாத்திரையின் இறுதிக் கட்டமாக பண்டரிபுரம் வந்தவுடன் 'ஞானேஸ்வரர்' விட்டலன் ஆலயத்தை வலம் வருவார்.

அப்போது விட்டலனை தரிசிக்க ஒரு வரிசை இருக்கும் பாருங்கள், அதன் நீளம் வர்ணித்து மாளாது. கோபால்புரி வரை (ஜனாபாய்க்காக கண்ணனே மாவரைத்த இயந்திரத்தின் பிரதிமை உள்ள ஊர் - இந்தத் தொடரின் முதல் பாகத்தில் விரிவாக விளக்கப்பட்ட தலம்) சுமார் 18 கிலோமீட்டர்

நீளம் நின்றிருக்கும். பண்டரிபுரத்துக்கும் கோபால்புரிக்கும் அவ்வளவு தொலைவு இல்லையே என்று கணக்கில் சந்தேகம் எழுப்பினால், வரிசை வளைந்து வளைந்து செல்லும்.

வாரக்ரீ யாத்திரையில் ஈடுபடுபவர்களுக்கு அபங்கங்கள் தெரிந்திருக்க வேண்டுமா? தெரியாவிட்டால் குற்றமில்லை. அவர்கள் காதுகளில் மற்றவர்கள் ஒலிக்கும் விட்டல நாமாவளிகள் தொடர்ந்து கேட்கிறதே, அதுவே பேரின்பம், பெரும் புண்ணியம்.

இந்திராணி நதிக் கரையில் அமைந்துள்ளது ஆலந்தி. அதில் அமைந்த குகை ஒன்றில் ஞானேஸ்வரர் சமாதிநிலையை அடைந்தார்.

அந்த இடத்தில்தான் நாங்கள் இருந்தோம். மகான்களின் சமாதிக்கருகே லிங்கம் ஒன்று நிறுவப்படுவது வழக்கம். ஓர் ஆலயமாகவே அதைச் சுற்றி எழுப்பப்பட்டிருந்தது.

சமாதியினருகே ஒரு விருட்சம். அதிலிருந்து விழும் ஒவ்வொரு இலையையும் பக்தர்கள் பணிவோடு கையில் எடுத்து புளங்காங்கிதம் பட்டுக்கொண்டிருந்தனர். அது ஞானேஸ்வரரின் ஆசி எனக் கருதுகிறார்கள்.

அந்தப் பகுதியை அடைந்ததும் ராமநாதன் உட்கார்ந்து கொண்டார். கண்களை மூடித் தியானிக்கத் தொடங்கினார். இதைக் கண்ட நானும் ஜருகண்டியும் கூட கண்களை மூடித் தியானம் செய்யத் தொடங்கினோம். மெள்ள மெள்ள மனத்தில் ஓர் அமைதி பரவியது.

சிறிது நேரத்துக்குப் பின்னர் கண்களைத் திறந்தோம். தியான மண்டபத்தைத் தாண்டி வேறொரு பகுதிக்கு வந்து அமர்ந்துகொண்ட ராமநாதன், ''மிகவும் இளம் வயதிலேயே உடலை நீத்தவர் ஞானேஸ்வரர். ஆனால்



அபங்க அமுதம்

யோகீ பாவன மனாசா
ஸாஹீ அபராத ஜனாசா
விச்வ ராகே ஜாலே வன்ஹீ
ஸந்தீ ஸுகே வ்ஹாவே பாணீ
சப்த சஸ்த்ரே ஜாலே க்லேச
ஸந்தீ மாணாவா உபதேச
விச்வபட ப்ரஹ்ம தோரா
தாடீ உகடா ஞானேச்வரா

- முக்தாபாய்

'சமநிலையான மனம் கொண்ட யோகியானவர் மக்களின் தவறுகளைச் சகித்துக் கொள்ள வேண்டும். உலகினரின் கோபம் நெருப்பைப் போல தகித்தாலும் யோகிகள் தமது இயற்கையான சுபாவம் என்ற நீரினால் அதை அணைத்துத் தன்னிலை மாறாமல் இருக்க வேண்டும். வருத்தத்தைத் தரும் மக்களின் ஆயுதம் போன்ற அவதூறுகளையும் கூட ஒருவிதத்தில் உபதேசமாக எண்ணவேண்டும். உலகம் என்கிற இந்த ஆடை பிரம்மம் என்கிற நூலினால் குறுக்கும் நெடுக்குமாக நெய்யப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து ஞானேஸ்வரா கதவைத் திற.'

அதற்குள் தன் படைப்புகளாலும் பாண்டு ரங்கனின் பிரியத்தினாலும் பக்தி உலகில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார். பகவத்கீதையை மராத்தியில் அளித்தவர் அவர். 'ஞானேஸ்வரி' என்று மக்களால் அழைக்கப்படும் இதை மராத்தி இலக்கியத்தின் மணிமகுடம் என்று சொல்லலாம். இது செழுமையானது, அதே சமயம் எளிமையானது. இப்போது விடோபாவின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொள்வோம்'' என்றார் ராமநாதன்.

''விடோபா என்பது ஞானேஸ்வரரின் மறுபெயரா?'' என்று கேட்டான் ஜருகண்டி.

இதற்குள் எங்களைச் சுற்றி மேலும் சிலரும் உட்காரத் தொடங்கினர். எல்லோரும் ஆர்வத்துடன் ராமநாதனின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களில் சிலர்தான் தமிழர்களாக இருக்கக் கூடும். மற்றவர்களைக் கவர 'ஞானேஸ்வரர், விடோபா' என்ற பெயர்களை அவர் உச்சரித்ததே போதுமானதாக இருந்தது.

''இல்லை. ஞானேஸ்வரர் தந்தையின் பெயர் விடோபா. அவரது சரிதமும் வியப்பானது'' என்று தொடங்கினார்.

விடோபா, பாலபருவத்தைத் தாண்டி திருமணப் பருவத்துக்கான வயதை அடைந்தார். சிறந்த கல்விமானாகவும் விளங்கிய விடோபாவுக்குத் தங்கள் மகளை மணம் செய்யப் பலரும் தயாராக இருந்தனர். 'இவர்களில் யாரை மகனுக்கு மணம் முடிக்கலாம்?' என்று விடோபாவின் பெற்றோர் யோசிக்க, விடோபாவின் சிந்தனை வேறாக இருந்தது.

'முதலில் தேசம் முழுவதும் பக்திப் பயணம் சென்று வருவேன். பிறகுதான் திருமணம்' என்று பிடிவாதம் பிடித்தார். பெற்றோருக்கு வேறு வழியில்லாமல் போனது.

தலயாத்திரை கிளம்பிய விடோபா



அலங்காவதி எனும் நகரை அடைந்தார். சீதோபந்து என்பவர் வீட்டில் ஒருநாள் தங்கினார். அந்தக் காலத்தில் இப்படி நடைபக்திப் பயணம் செல்பவர்களுக்குத் தம் வீட்டில் இளைப்பாற இடம் கொடுப்பதும் உணவு படைப்பதும் இயல்பான ஒன்றாகவே இருந்தது. ஓர் இரவு சீதோபந்துவின் வீட்டில் தங்கினார் விடோபா. மறுநாள் நன்றி கூறி விட்டு விடோபா கிளம்ப எண்ணும்போது சீதோபந்து அவர் சற்றும் எதிர்பார்க்காத ஓர் வேண்டுகோளை முன்வைத்தார். ''நேற்று இரவு கனவில் இறைவன் வந்தார். உன் மகள் ருக்மாபாயை விடோபாவுக்கு மணம் முடித்து வை என்று கூறினார். எனவே நீங்கள் என் மகளைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும்'' என்றார்.



வங்கியா..

ஜி. ராமச்சந்திரன், திருவனந்தபுரம்.

சென்ற 'பைனான்ஸ் பில்'லில், உயர் கல்வி கற்கும் மாணவர்களின் கல்விக் கடனின் முதலாண்டு வட்டியை மத்திய அரசே ஏற்கும் என்றும், இதற்கான நிபந்தனை பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2.40 லட்சத்துக்குள் இருக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டு இருந்தது. இது தொடர்பாக வங்கிகளை அணுகினால் அவர்களிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. இதைப் பற்றிக் கூடுதல் விவரங்கள் யாரிடம் கிடைக்கும்? அல்லது இது வெறும் அறிவிப்போடு நின்றுவிட்டதா?

கல்விக்கடன் வாங்கிப் பயிலும் மாணவர்கள் கல்வி பயிலும் காலத்தின்போது வங்கிகளிடமிருந்து வாங்கிய அந்தக் கடனுக்கான வட்டியைச் செலுத்தவேண்டியதில்லை. அந்த வட்டியை மத்திய அரசின் மானியமாக மத்திய அரசே வங்கிகளுக்கு அளித்துவிடும். இந்தத் திட்டம் 2009-10 நிதியாண்டில் அளிக்கப்பட்ட கடன்களில் இருந்தே நடைமுறைக்கு வந்துவிட்டது. இது குறித்த அரசின் அறிவிப்புக்கும், மானியத்தை அரசிடம் இருந்து பெறுவதற்கான நடைமுறைகளைச் செயல்முறைப்படுத்துவதற்கும் இடைப்பட்ட காலத்திற்குண்டான வட்டியை வங்கிகள் மாணவர் கணக்கில் சேர்த்திருந்தால் (டெபிட் செய்துள்ளதால்) மாணவர்கள் முறைப்படி அவர்களுடைய தகுதிக்கான சான்றிதழ்களைக் கொடுத்து அவ்வாறு டெபிட் செய்யப்பட்ட வட்டியை கிரெடிட் செய்யச்சொல்லிப் பெற்றுக்கொள்ளலாம். விரிவான விவரங்களுக்கு http://www.education.nic.in/eduloancanara.pdf என்ற மத்திய அரசின் இணையதளத்தைப் பார்க்கவும்.

உங்கள் கேள்விகளை 'மூலதன மந்திரம்' என்று குறிப்பிட்டு அனுப்பவு
KAFIN என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு, கேள்வி, பெயர், !

பங்குச் சந்தையா..?

வி. அபிராமி, மும்பை.

என் ஃப்ளாட்டுக்கு மேல் இருக்கும் அடுத்த மாடிக்கு இன்னும் அரசின் அப்ரூவல் இல்லை. ரெகுலரைசேஷன் ஸ்கீமில் அப்ரூவலுக்கு பில்டர் விண்ணப்பித்திருக்கிறார். ஆனால், அன்-அப்ரூவ்டு ஃபிளாட்டுக்கு, தனியார் வங்கி ஒன்று வீட்டுக் கடன் கொடுத்திருக்கிறது. இது எப்படிச் சாத்தியம்? அன் - அப்ரூவ்டு ஃப்ளாட்டுகளுக்கு வங்கிகள் கடன் கொடுக்கத் தொடங்கிவிட்டார்களா?

அன்-அப்ரூவ்ட் ஃப்ளாட்டுகளுக்கு வங்கிகள் கடன் தருவது கிடையாது. வேறு ஏதாவது சட்டப்படி செல்லுபடியாகும் சொத்தை ஈடாக வைத்துக் கொண்டு (mortgage loanபோல்) கூட அந்த அன் அப்ரூவ்ட் ஃப்ளாட்டை வாங்குவதற்காக அந்தத் தனியார் வங்கி கடன் கொடுத்திருக்கலாம். கடன் விஷயத்தில் பல நடைமுறை மாறுதல்கள் இருப்பதால் முழு விவரம் தெரியாமல் யூகம் செய்து கொள்வது தவறாகும்.

பிராங்கிளின் ஜோசப், சென்னிமலை

வங்கிகளில் முதலீடு செய்தால், 6 - 5 சதவிகிதம்வரை ஆண்டு ஒன்).க்கு வட்டி கிடைக்கிறது. மியூச்சுவல் ஃபண்டில் முதலீடு செய்தால், பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் என்ன வகையான ரிட்டர்ன் கிடைக்கும்? ஏதாவது தோராயமான கணக்கு இருக்கிறதா?



டி.பாலசுந்தரம்

தோராயக் கணக்குக் கிடையாது. எதிர்பார்ப்பு என்று வேண்டுமென்றால் சொல்லலாம். வங்கிகளில் முதலீடு செய்தால் கிடைக்கும் 6 - 6.5 சதவிகிதத்தைப் போல இரண்டு மடங்கு நல்ல தரமான மியூச்சுவல் ஃபண்டில் முதலீடு செய்வதன் மூலமும், மூன்று மடங்கு நல்ல தரமான பங்குகளில் முதலீடு செய்வதன் மூலமும் நல்ல வருமானம் பெற எண்ணி முதலீடுகளில் ஈடுபடலாம். சில சமயம் அபரிமிதமான வருமானம் (ரிட்டர்ன்) கிடைத்தாலும் நாட்பட அந்த அபரிமிதமான வருமானம் குறைந்து மேலே குறிப்பிட்ட அளவுக்குச் சென்றுவிட அதிக வாய்ப்புள்ளது. வங்கி முதலீட்டில் 6 - 6.5 சதவிகிதம் வருடா வருடம் நிச்சயமாய்க் கிடைக்கும். மற்ற இரண்டிலும் சில ஆண்டுகள் அதிகமாகவும், சில ஆண்டுகள் குறைவாகவும் (ஏன் சில சமயம் முதலீடு செய்த தொகையின் அளவே குறைந்து போயும்) நீண்டகால அடிப்படையில் சராசரியாக மேற்சொன்ன முறையே இரண்டு மற்றும் மூன்று மடங்கு ரிட்டர்ன்களும் நீங்கள் முதலீடு செய்யும் திட்டம் - பங்குகளின் தன்மைக்குத் தகுந்தாற்போல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, உங்கள் ரிஸ்க் எடுக்கும் திறன், குறுகிய கால மற்றும் நீண்டகால பணத்தேவை என்பதைக் கருத்தில்கொண்டே மற்ற இரண்டில் முதலீடு செய்ய வேண்டும்.

:alki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில்
ுகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.

இரும்பில் முளைத்த இதயம்!

''எந்திரன் வெளியாவதற்கு முன்பு பேசுவதைவிட திரைப்படம் வெளிவந்த பின்பு பேசுவதற்குதான் நிறைய விஷயங்கள் இருக்கின்றன'' என்கிறார் எந்திரன் படத்துக்காக மூன்று முக்கியமான வேலைகளைச் செய்துமுடித்திருக்கும் மதன்கார்க்கி. அவை முதல் முறையாக இரண்டு திரைப் பாடல்களை எழுதியது; தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியது; மறைந்த எழுத்தாளர் சுஜாதா விட்டுச் சென்ற வசனப் பகுதிகளை எழுதி ஈடு செய்தது. அந்த அனுபவத்தைச் சொல்கிறார் மதன் கார்க்கி.




மதன் கார்க்கி

வைரமுத்துவின் மகன் என்பதால்தானே இந்த வாய்ப்பு?

''நிச்சயமாகக் கிடையாது. நான் மே 2008-ல் முதன்முறையாக ஒரு இனிய நாளில் ஷங்கர் சாருக்கு ஒரு எஸ்.எம்.எஸ். அனுப்பினேன். நான் டாக்டர் மதன் கார்க்கி, அண்ணா பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானியாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறேன். ரோபோடிக்ஸ் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகள் மீது அதீத ஆர்வமும், ஆராய்ச்சியும் செய்தவன்... என்ற முறையில் மட்டுமே அந்த எஸ்.எம்.எஸ் இருந்தது. எந்த இடத்திலுமே நான் வைரமுத்துவின் மகன் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளவே இல்லை. பிற்பாடு ஷங்கர் அவர்களை நேரில் சந்தித்த பின்தான் நான் வைரமுத்துவின் மகன் என்பதே அவருக்குத் தெரியும். என் திறமையின் மீது நம்பிக்கை வைத்துக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு இது.''

எந்திரனுக்காக பாட்டு எழுதிய அனுபவம் எப்படி இருந்தது?

''ரொம்ப ரொம்ப ரசிக்கத்தக்க அனுபவம் அது. ஒரு இயந்திரத்துக்குக் காதல் பிறந்தால் எப்படி இருக்கும், அதன் மொழிப் பிரயோகம் எப்படி இருக்கும் என்றெல்லாம் என் கற்பனையை ஓடவிட்டு, இரண்டு பாடல்களை எழுதியிருக்கிறேன். இது உலகத்திலேயே முதல்முறையாக இப்படிப்பட்டப் புதுமையான கரு கொண்டு உருவாக்கப்பட்ட படம். இதில் எல்லாமே புதுசு. அதனால் நான் இதற்குக் கொடுத்திருக்கும் வார்த்தைகளும் தமிழ் சினிமாவுக்கே ரொம்பப் புதுசு.''



நீங்கள் மிகவும் ரசிக்கும் வரிகள்?

'' 'இரும்பிலே ஒரு இதயம் முளைக்குதோ', 'முதல் முறை காதல் அழைக்குதோ, 'கூகுல்கள் காணாத தேடல்கள் என்னோடு', 'காலங்கள் காணா காதல் பெண்பூவே உன்னோடு', 'என் நீலப் பல்லாலே உன்னோட சிரிப்பேன்' இந்த வரிகளில் எல்லாம், தற்கால தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவான கூகுல், blue tooth என எல்லாமே கலந்து வரும்.''

அப்பா, உங்களது பாடல் வரிகளைக்

கேட்டுவிட்டு என்ன சொன்னார்?

''மலேசியாவில் நடந்த விழாவுக்குப் பிறகுதான் நான் எழுதிய பாடல்களை ஹோட்டல் அறையில் கேட்டிருக்கிறார். ரொம்ப நல்லா இருக்கு என்று பாராட்டினார்.''

மற்றவர்களின் ஃபீட்பேக் எப்படி இருந்தது?

''ஷங்கர் சார், பாடல்களின் ஒவ்வொரு வரியிலேயும் ஒரு பஞ்ச் வெச்சிருக்கே என்று பாராட்டினார். சூப்பர் ஸ்டார் ரஜினி ரொம்ப யூத்ஃபுல்லா எழுதியிருக்கே, இளைஞர்களின் தேசியகீதமா இந்தப் பாடல்கள் வலம் வரும் என்றார். ஏ.ஆர்.ரஹ்மான், அடுத்த படத்துக்குப் பாடல் எழுதக் கூப்பிட்டா வருவீங்களா?'' என்றார்.

எந்திரன் ஸ்கூப் நியூஸ் ஒண்ணு சொல்லுங்க?

''இது ரஜினி சாரின் படம் என்பதைவிட ஷங்கர் சாரின் படம். படத்தில் ஓர் இடத்தில்கூட பஞ்ச் வசனங்கள் கிடையாது. இதுவரை ரஜினி சார் ஏற்றிராத ஒரு முற்றிலும் புதிய கதாபாத்திரத்தில் வெளுத்துக் கட்டி இருக்கிறார். ஹாலிவுட்டைக் காப்பி அடிக்காத ஆனா ஹாலிவுட்டின் பிரமாண்டத்தை ஒட்டி எடுக்கப் பட்டிருக்கும் படம் எந்திரன்.''





அப்பாவைப் போலவே அழுத்தம் திருத்தமாகப் பேசும் மதன் கார்க்கி, இன்னும் ஐந்தாறு படங்களில் பாடல்களும் ஒரு படத்துக்கு வசனமும் எழுதிக்கொண்டிருக்கிறார்.

- நளினி சம்பத்குமார்

பாக்கெட்டில் பைக் சாவி!

எங்கள் அலுவலகத்தில் மொத்தம் ஐந்து பேர். எங்கள் மிலிட்டரி கேண்டீன் மூலம் டி.வி.எஸ் மொபெட் வாங்கி வந்தோம். ஒன்றாகவே பூஜை போட்டோம். (அனைவருமே ஒரே காலனி வாசிகள்).

மறுநாள் புது வண்டியை எடுத்துக் கொண்டு ஆஃபீசுக்குப் புறப்பட்டேன். வழியில் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் பால் பாயிண்ட் பேனா வாங்கப் போய்விட்டு வெளியே வந்து, பார்த்தால், என் வண்டியைக் காணோம். அங்கு வேறு ஒரு புதிய டி.வி.எஸ் நின்றுகொண்டிருந்தது. செக்யூரிட்டி ஆஃபீஸில் சொல்லிவிட்டு ஆஃபிஸ் போய்விட்டேன். சில மணி நேரங்களுக்குப் பின் செக்யூரிட்டி ஆஃபிசர் என்னை வரச் சொன்னார். அங்கு என் சக ஊழியர் ஒருவர் என் வண்டியுடன் நின்று கொண்டிருந்தார். நடந்தது இதுதான். இடையில் நான் வண்டியை நிறுத்தியபோது, சாவியை வண்டியிலேயே விட்டுவிட்டேன். எனக்குப் பின்னால் வந்த நண்பர் தவறுதலாக என் வண்டியை எடுத்துப் போய்விட்டார். ஆஃபீஸ் போன பின் அவருடைய வண்டி சாவி பாக்கெட்டில் இருப்பதை அறிந்து, ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் போய் பார்த்திருக்கிறார். அவருடைய வண்டி இருப்பதைத் தெரிந்து கொண்டார். என்னுடைய வண்டியில் பூஜை செய்யும்போது 'ஓம்' என்று தமிழில் சந்தனத்தில் எழுதியிருப்பது அவருக்கு மேலும் சந்தேகத்தைக் கிளப்ப, செக்யூரிட்டி ஆஃபிசரிடம் நடந்ததைக் கூறி உள்ளார். இன்று இருவர் சந்தித்தாலும் இந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்து சிரிப்போம்.

- எஸ். சோமசுந்தரம், குளித்தலை

புல்லட் புக்கிங்!

'புல்லட்' ஓட்ட வேண்டும் என்பது சிறுவயதிலிருந்தே என் நீண்ட நாள் கனவு. ஆனால், சைக்கிள் மட்டுமே ஓரளவு ஓட்டத் தெரிந்து வைத்திருந்தேன். வேலைக்குப் போய் சம்பாதிக்கத் தொடங்கியதும் நண்பர்களிடத்தில் 'புல்லட்' வாங்கப் போறேன் என்று காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு சொல்லிவிட்டேன்.

அண்ணாசாலையில் இருக்கும் ஒரு பிரபல மோட்டார் சைக்கிள் ஏஜென்ஸியில் புக் செய்துவிட்டு ஏதேச்சையாக நண்பன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். நண்பனின் மாமா 'புல்லட்' வண்டி எக்கச்சக்க 'எக்ஸ்ட்ரா - ஃபிட்டிங்ஸ்' உடன் ஆறு அடி நீளத்துக்குக் கனகம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

இவ்வளவு பெரிய வண்டியை எப்படி ஓட்டுவது என்று விதிர் விதிர்த்து, புக்கிங்கைக் கான்சல் செய்து விடலாம் என்று முடிவெடுத்தேன். நண்பனின் மாமா என்னை அழைத்து, ''பார்வைக்குத்தான் பயமாக இருக்கும்! ஓட்டுவது



மிக எளிது'' - என்று அட்வைஸ் செய்தார். புல்லட் வாங்கிக் கற்றுக்கொண்டு ஓட்டத் தொடங்கினேன்.

இருபத்தாறு வருடங்கள் ஓடிவிட்டன. புல்லட்டைத் தவிர வேறு டூவீலர் ஓட்டி யது கிடையாது. கற்றுக் கொண்டபோது, கீழே விழுந்தும், 'சைலன்சர்' காலில் பட்டுக் கொப்புளம் ஆகி அந்தப் புண் ஆற மாதக் கணக்கானது வேறு கதை.

- எஸ். பாலு, சென்னை

டூ வீலருக்கு டிரைவர்!

அப்போது நான் சேலத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மாட்டு வண்டி ஒன்று மோதியதில் பலத்த அடி. அன்றிலிருந்து சைக்கிள் என்றாலே அலர்ஜி. எங்கே எவ்வளவு தூரம் சென்றாலும் நடந்துதான்! இதனால், நட ராஜா என்று பலருடைய கிண்டலுக்கும் கேலிக்கும் ஆளானேன். இலகுவாக ஓட் டக்கூடிய டூவீலர்கள் வந்தபிறகும்கூட நடராஜா சர்வீஸ்தான். சொந்த ஊரான அரூரிலிருந்த பக்கத்துக் கிராமத்துக்கு மனைவியின் வேலை மாறுதலாகிச் சென்றதில் அங்கேயே தங்க வேண்டிய நிலை. எனக்கு அரூரில் சினிமா தியேட் டரில் மேனேஜர் வேலை. கிராமத்திலி ருந்து பஸ் வசதி சரியாக இல்லாததால் டூவீலரிலாவது வேலைக்குச் சென்றாக வேண்டிய கட்டாயம். பகலில் யாராவது ஒருவரை ஓட்டச் சொல்லிப் பின்னால் உட்கார்ந்துகொண்டு வேலைக்குச் செல் வேன். 'டூவீலருக்குக்கூட டிரைவர் வைத்திருக்கும் ஒரே ஆள் நீதான்' என்ற நண்பர்களின் கிண்டலுக்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் 'திருந்தி' நானே வண்டி ஓட்ட ஆரம்பித்தேன். இரவு வேலைக்குப் போகும்போது மட்டும் நானே வண்டியைக் கஷ்டப்பட்டு ஓட்டி னேன். ஆள் நடமாட்டமில்லாத இரவு நேரச் சாலை கொஞ்சம் வசதியாகவும் இருந்தது. ஆனால், இன்றோ என்னையும் டூ வீலரையும் பிரிக்க முடியாதவாறு ஆகிவிட்டது.

- அரூர் மு.மதிவாணன்



உங்க பைக் அனுபவத்தை
'மை பைக்' என்று குறிப்பிட்டு எழுதி அனுப்புங்க.
kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். செல்ஃபோனில் KACON
என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு,
உங்கள் அனுபவம், பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற
எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.


அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப்
போட்டியில்
பிரசுரத்துக்குத்
தேர்வான
சிறுகதைகள்
4
போதிமரம்*

மங்களத்தின் 'சுப்ரபாதத்'துடன் தான் (வழக்கம் போல்) காலை விடிந்தது. மச மச என்றிருந்தது. உடல் அசதி. தலை விண் விண்ணென்று வலித்தது. இருந்தும் மெதுவே எழுந்தேன். என்ன செய்வது?

''தலைகாணி உறை எல்லாம் மஞ்ச மஞ்சளாய்க் கறை. கோட்டுவாய் வழியத் தூங்கி இருக்கீங்க. குளிக்கப் போகும்போது நனைத்துப் போட்டு விடுங்கள். வாடை அடிக்கிறது'' என்று போகிற போக்கில் கத்திவிட்டுப் போனாள்.

பாவம்... அவளைச் சொல்லிக் குற்றமில்லை. காலையில் எழுந்து போய் நான் பால் வாங்கி வந்திருக்கலாம். பம்ப் அடித்து இரண்டு குடம் தண்ணீர் கொண்டு வைத்து இருக்கலாம். ரிடையர் ஆன பின்பு இதெல்லாம் செய்வேன் என்று அவள் எதிர்பார்த்திருப்பாள். 'என்னால் முடியவில்லை. தலையைச் சுற்றி வருகிறது, மந்தமாக இருக்கிறது' என்று சொல்லிவிட்டால் பதறிவிடுவாள்.

ஆனால் என் வருத்தம் என்னவென்றால்: அவள் கத்த வேண்டியது அவள் மகனிடம். மேல் மாடியில் மனைவியுடன் குறட்டை விட்டுத் தூங்குகிறானே அவனிடம்.

''பாஸ்கர் பால் வாங்கி வா''

''பானு அவன் ஷூவை பாலீஷ் போட்டு வை.''

''பாஸ்கர், அப்பா ரிடையர் ஆகி விட்டார். வீட்டுச் செலவுக்குப் பணம் கொடு. வேலைக்காரியைக் கூட நிறுத்தி விட்டேன்.'

''பானு, காலையில் சீக்கிரம் எழுந்து அத்தைக்கு உதவி செய்'' இப்படியெல்லாம் மங்களம் சொல்ல வேண்டும். மங்களம் சொல்லவில்லை. அவளால் சொல்லவும் முடியாது.

தவமாய் தவமிருந்து பெற்ற பிள்ளை அவன். மலடி, மலடி என்று உலகம் பேசத் தொடங்கியபோது, உதய சூரியனாய் உதித்த செல்வம். அவனைக் கடிந்து பேச அவளுக்கு மனமே வராது.

'பானுவைத்தான் திருமணம் செய்து கொள்வேன். ஏழை. நாம்தான் செலவு செய்து திருமணம் செய்து கொள்ள வேண்டும்' என்று கேட்டபோது மறுக்காமல் தலையை ஆட்டினாள்.

கை நிறையச் சம்பாதிக்கும் மகன். கஷ்டங்கள் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கையில் மண் விழுந்தது. ''அம்மா நானும் பானுவும் பாரிஸ் போய் வருகிறோம்.'' பாரிஸ் கார்னரையே பத்து முறைதான் பார்த்திருக்கிறாள் அவள்.

''அம்மா மலேசியாவுக்கு ஆஃபீஸ் வேலையாகப் போகிறேன். பானுவையும் கூட்டிக் கொண்டு போகிறேன்.''

ஆக மொத்தம் வீட்டுச் செலவுக்குக் காலணா பெயரவில்லை. இந்த அழகில் நான் வேறு ஓய்வு பெற்று விட்டேன் என்றால் அவளுக்கு எரிச்சல் வராதா? இட்லி சாப்பிட்டு விட்டுக் கிளம்பினேன்.

பழைய மூர்மார்க்கெட் பக்கம் ஐந்தாறு பழைய புஸ்தகக் கடைகள் உண்டு. அப்பப்பா எங்கிருந்துதான் அந்த எமகாதகன்களுக்கு புஸ்தகங்கள் கிடைக்குமோ தெரியாது. அப்படி வைரச் சுரங்கம்! அள்ளி வரலாம். நான் பழைய, பழகிய கஸ்டமர் என்பதால் சல்லிசாகத் தருவார்கள். வுட் ஹவுஸ், ஜெரோம் கே ஜெரோம், தேவன், கல்கி, துமிலன், நாடோடி, கடுகு என்று ஹாஸ்ய மன்னர்களைத் தேடித் தேடிக் கொண்டு வருவேன். வாழ்க்கையில்தான் சிரிக்க முடியவில்லை. கற்பனையுலகிலாவது சிரித்து மகிழலாமே என்ற நப்பாசைதான்.

பாவம், வேறு வேலை தேடித் திரிகிறேன் என்று மங்களம் நினைக்கிறாள். வேறு வேலை தேடத்தான் போகிறேன். ஆனால் சில மாதங்களுக்குப் பிறகுதான். நாலைந்து மாதமாகக் காது வலி பாடாய்ப் படுத்துகிறது. என்னவென்று தெரிய

அகிலா கிருஷ்ணன்

வில்லை. பூண்டு போட்டுக் காய்ச்சிய எண்ணெய், கற்பூரம் போட்டுக் காய்ச்சிய எண்ணெய் என்று எல்லா வக்கணையும் செய்தாகி விட்டது. பலன் இல்லை. மங்களத்திடம் சொன்னால், வேறு வினையே வேண்டாம். பதறி விடுவாள். டாக்டரிடம் போக வேண்டுமென்று அடம் பிடிப்பாள். காலி பர்சை வைத்துக் கொண்டு எங்கே போவது?

நினைத்த புத்தகங்கள் எல்லாம் கிடைத்தன. அங்கேயே ஒரு பங்க் கடை வாசல் பெஞ்சில் உட்கார்ந்தேன். அசதியாக இருந்தது. வெய்யிலோ வெய்யில்.

''ஒரு நிம்பூஸ் கொடுங்க.''

எனக்கு நிம்பூஸ் கொடுத்த பங்க் கடைக்காரர், ''பாய், கொஞ்சம் கடையைப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் போய் சரக்கு எடுத்துக்கிட்டு சாப்பிட்டுவிட்டு வந்து விடுகிறேன்'' என்றார். அப்போதுதான் கவனித்தேன். எதிர்த்த பெஞ்சில் ஒரு முஸ்லிம் பெரியவர் உட்கார்ந்திருந்தார். அமைதியான முகம். வெள்ளை வெளேரென்ற உடை. பக்கத்தில் காது சுத்தம் செய்யும் கருவிகள். அவருடைய தோற்றத்துக்கும் அந்த உபகரணங்களுக்கும் சம்பந்தமே இல்லை. சட்டென்று தோன்றியது. என் காதுகளை இவரிடம் சுத்தம் செய்து கொண்டால் என்ன?

அப்போது தான் ஸ்டேஷனில் எலெக்ட்ரிக் ட்ரெயினில் வந்திருந்த கும்பலொன்று அவரிடம் காது சுத்தப்படுத்திக் கொள்ள வந்தது. அவர் வேலையைச் சுவாரஸ்யத்துடன் கவனித்தேன். ஒரு கை தேர்ந்த கலைஞனின் நளினத்தோடும் கவனத்தோடும் ஆர்வத்தோடும் அவர் தன் வேலையில் ஆழ்ந்திருந்தார்.

பணம் கொடுத்துவிட்டுப் போகும்போது அந்தக் கும்பலில் இருந்த ஒரு பெரியவர், ''பாய், எஸ்பிளனேடில் ஒரு பையனிடம் போன தடவை காது சுத்தப்படுத்திக் கொண்டேன். ஒரு பெரிய மெழுகு உருண்டையே காதில் இருந்து எடுத்துத் தந்தான்'' என்றபடி சென்றார்.

பாய் ஹோ, ஹோ என்று சிரித்தார். பதில் எதுவும் சொல்லவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. '' 'பட்ஸ்' எல்லாம் வந்துவிட்ட பிறகும் இவ்வளவு பேர் காது சுத்தப்படுத்திக் கொள்ள வருகிறார்களா? இரண்டாவது அவ்வளவு பெரிய குரும்பி காதுக்குள் இருப்பது சாத்தியமா?''

பெரியவர் சற்று யோசித்தார். ''சரி உங்கள் இரண்டாவது கேள்விக்குப் பதில் சொன்னால் தான் முதல் கேள்விக்கான பதில் புரியும். இந்த ஏமாற்றுப் பையன்கள் என்ன செய்வார்கள் என்றால் புறங்கை முழுவதும் மெழுகைத் தடவிக் கொண்டு வந்து விடுவார்கள். காதில் அழுக்கெடுத்துப் புறங்கையில் தடவிக் கொண்டே கையிலிருக்கும் மெழுகையும் சேர்த்து வழித்து உருட்டி, ''பாருங்கள் உங்கள் காதுகளில் எவ்வளவு அழுக்கு?!'' என்று காட்டுவார்கள். ஆச்சரியமாக இருக்கும்.

பட்ஸ் எல்லாம் பிரபலமாகிவிட்டன என்கிறீர்கள். வாஸ்தவம்தான். ஆனால் இங்கு வருபவர்களில் முக்கால்வாசிப் பேருக்குக் காதில் அழுக்கே இல்லை. இது ஒரு வித மனோ அழுத்தத்தின் வெளிப்பாடு. Compulsive Obsession Syndrome. சில பேர் காதுகளைக் குடைந்து கொண்டு, சில மனிதர்கள் தலையைச் சொறிந்து கொண்டே இருப்பார்கள். சிலர் காரணமில்லாமல் அடிக்கடி மூக்கை உறிஞ்சுவார்கள். ஏதோ ஒரு விதத்தில் அவர்கள் மனத்தில் உறுத்தல் இருக்கிறது. இந்தச் செய்கைகள் எல்லாம் Safety Value

போல. ஒரு விதத்தில் நல்லதுதான்'' என் விழிகள் பிதுங்கின. அவரை வியப்புடன் நோக்கினேன். அவர் திரும்பவும் பலமாகச் சிரித்தார்.

''என்ன காது சுத்தம் செய்யுற பாய் இவ்வளவு பெரிய வார்த்தைகள் பேசுதே என்று பார்க்கிறீர்களா? விபரமாகச் சொல்கிறேன். இப்போ வெயில் கொளுத்துகிறது. இங்கேயே உட்காருங்க கொஞ்ச நேரம். எனக்குப் பக்கத்திலே சீதம்மா மெஸ்ஸிலிருந்து தயிர் சோறும் ஊறுகாயும் வரும். சுத்தபத்தமான மெஸ். உங்களுக்கும் சேர்த்துச் சொல்கிறேன்'' என்றவர் என் கையிலிருந்த புத்தகங்களை வாங்கி கடை ஓரத்தில் வைத்தார்.

''அட நம்ப செட்தானா நீங்க? ஆமா, இ.ரா.க. விட்டுட்டீங்களே.''

''இல்லை, இல்லை. என் வீட்டுப் புத்தக அலமாரி முழுவதும் சீதாப் பாட்டியும் அப்புசாமியும்தான் சண்டைப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்'' என்றேன் சிரிப்புடன்.

மங்களத்துக்கு செல்லடித்தேன். ''இங்கு கொஞ்சம் வேலை இருக்கிறது. நீ சாப்பிடு. கவலைப் படாதே.''

பாய் முகத்தில் சந்தோஷம். ''நல்ல வேலை செய்தீங்க. சில பேர், வீட்டுக்கு வெளியில் போனால் வீட்டுப் பொம்பளைங்களைப் பற்றி நினைக்கவே மாட்டாங்க. பாவம். அதுங்க நமக்காகச் சாப்பிடாமக் கவலைப் பட்டுகிட்டுக் கிடக்கும்.''

சாப்பிட்டோம். பிறகு சாவகாசமாகப் பேசத் தொடங்கினோம்.

''எங்க தாத்தா எழுபத்தைந்து எம்பது வருஷத்துக்கு முன்னாடி இங்கே காது சுத்தம் செய்துகிட்டு இருந்தவர்.''

''ஆக இந்த எண்பது வருஷங்களாக இதுதான் உங்கள் ஆஸ்தான தொழில் பீடம் போலிருக்கிறது!''

பாய் திரும்பவும் கல கல வென்று சிரித்தார். ''ஆமாம். தாத்தா படுகெட்டிக்காரர். மெட்ராஸ் எவ்வாக்குவேஷன் சமயம் ஊரே காலியாகிக் கொண்டிருக்கும் போது அடிமாட்டு விலையில் இந்தக் கடையையும் சைதாப்பேட்டையில் ஒரு நல்ல வீட்டையும் வாங்கிப் போட்டு விட்டார்.''

என் விழிகள் பிதுங்கின. ''இந்தக் கடை உங்களுடையதா?''

''ஆமாம்... தாத்தா கெட்டிக்காரர். பொறுப்பானவர். ஆனால் பையனைப் பொறுப்



அலங்கோலப் படுத்துகிறார்.

திறமைகளைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ளும் சாதுர்யமான நடிப்பில் கல்லூரி நிறுவனர் சம்பத். அவரது தம்பி வதன்... ஜொலிக்கிறார்கள். சிங்கமுத்து, நெல்லை சிவா காமெடியில் தியேட்டர் அதிர்கிறது.

ஸ்ரீராம்விஜய் இசையில் பாடல்கள் பனிச் ரகம் இல்லை. பாடல் காட்சிகளின் ஒளிப்பதிவில் ரசிக்கும்படி பிரேம்சங்கர் கேமரா ஈர்க்கிறது. நடனத்தில் ஆர்வமுள்ளோர் படத்தை ரசிக்கலாம்.


- மகிமைராஜன்

பானவனாக வளர்க்கவில்லை. ஆமாம்... என் வாப்பா சரியில்லை. தான் பொறுப்பானவனாக இருந்தாப் போதாது... பிள்ளையைப் பொறுப்பானவனா வளர்ப்பது முக்கியம் இல்லையா?''

எனக்குப் பொட்டிலறைந்தது போல் இருந்தது.

''தினமும் என்னை இங்க கூட்டிவந்து தொழில் பழக்கினார். அப்போ சென்னையிலே இவ்வளவு கூட்டமில்லை. அதிக வருமானமில்லை. எப்படியோ கடன் சுமையை வெச்சுட்டுப் போயிட்டார்.

''எது எப்படியோ, கடையை ஒத்திகை வச்சு அதாவது லீஸுக்கு விட்டு, கடனை அடைச்சுட்டேன். பீவி கெட்டிக்காரி. தைப்பா, வடகம் போடுவா, டீக்கடைக்குப் பாயா சால்னா செஞ்சு தருவா. பிள்ளைங்க சூரப் புலிங்க. டாக்டருக்கும் என்ஜினீயருக்குமா படிக்குதுங்க.''



இங்கு வருகிறவர்களில் பலபேருக்கு காதில் அழுக்கே இல்லை. இது ஒருவித மனோ அழுத்தத்தின் வெளிப்பாடு!

''என்ன?''

''பாங்க் கடன் வாங்கிப் படிக்குதுங்க. எல்லாம் சுறுசுறுப்பு. எல்லா வேலையையும் செய்யும். தங்க செலவு தங்களுடையது...''

''உங்க துணிகளை யாரு துவைப்பாங்க?'' அனிச்சையாக இந்தக் கேள்வியைக் கேட்டபின் எனக்கே வெட்கமாகிவிட்டது.

வந்ததிலிருந்து 'பளிச்' என்ற அவர் உஜாலா வெண்மை என் கண்களையே உறுத்திக் கொண்டிருந்ததின் விளைவு அது.

பாய் திரும்பவும் பெருங் குரலெடுத்துச் சிரித்தார். ''நான்தானுங்க அந்த வாஷிங் மெஷின். ஞாயிற்றுக் கிழமையானா எல்லாத் துணிகளையும் எடுத்துக் கொண்டு அடையாறு வண்ணாந்துரை போய் விடுவேன். அந்தக் கள்ளமில்லா ஜனங்களோட பேசிக் கொண்டே துவைத்தால், அவங்களே வெள்ளாவி வெச்சுத் தந்திடுவாங்க. எனக்கு மிகமிக இனிமையான நாள் அதுதான். பாவம் பீவி எவ்வளவு வேலைதான் செய்யும்?''

என் தலை சுழன்றது. திடீரென்று எதிரே நின்ற பாய் நான் வணங்கும் சாயிநாதர் மாதிரி தோன்றினார். எனக்கு உபதேசம் செய்ய இங்கு வரவழைத்தாரோ? சடாலென்று எழுந்தவன் தலை சுற்றிக் கீழே விழுந்ததுதான் தெரியும்.

கண் விழித்தபோது ஆஸ்பத்திரியில் இருந்தேன். சுற்றிலும் மங்களம், பாஸ்கர், பானு, பாய், என் கம்பெனி முதலாளி. மலங்க மலங்க விழித்தேன்.

''ஒன்றுமில்லை. காதில் ஒரு கட்டி இருந்திருக்கிறது. கவனிக்காம இருந்திருக்கீங்க. அது உடைந்துவிட்டது. சரியான சமயத்திலே இங்கு சேர்த்து விட்டேன்.''

''என்னா... தலைகாணியில் ஏதோ கறை என்று சொன்னேனே.. அது காதின் சீழ். தெய்வம் மாதிரி பாய் ஆஸ்பத்திரியில் சேர்த்து எனக்கும் ஃபோன் செய்தார்'' மங்களம் அழுதாள்.

''ஆஸ்பத்திரி செலவு முழுவதும் ஆபீஸ் பொறுப்பு'' என்றார் முதலாளி.

''கை நிறையச் சம்பளம் வாங்கும் என் பையன் கவனித்துக் கொள்வான் சார். ரொம்ப தேங்க்ஸ்'' என்றேன். பாஸ்கர் என் கரங்களை ஆசையோடு பிடித்துக் கொண்டான்.

பாஸ், ''கொடுத்து வைத்தவரையா நீங்கள்'' என்று முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''உங்க பொருட்களை எல்லாம் உங்க வீட்டம்மாவிடம் கொடுத்திருக்கிறேன்'' என்ற பாயின் குரல் கேட்டது.

திரும்பினேன். பாய் தெரியவில்லை. நான் வணக்கும் ஷீரடி பாபாவின் உருவம்தான் தெரிந்தது.

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

VBC Jewellery

HOUSE OF VUMMIDI



இணைந்து வழங்கும்

'வைர மங்கை'

-சிறப்பு சந்தா திட்டம்!*

கல்கி நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான, தரத்திலும் நம்பர் ஒன் மகளிர் மாத இதழ் மங்கையர் மலர் செப்டெம்பர் இதழில், 'வைர மங்கை' - சிறப்பு சந்தா திட்டம் (பக்கம் 187) பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. இத்திட்டத்தின்படி எந்த ஒரு நபரும் மங்கையர் மலருக்கு சந்தா கட்டி, ஐந்து முத்து மங்கைகளை அறிமுகப்படுத்தலாம். அப்படி அறிமுகப் படுத்துபவர் பவள மங்கை என்ற பட்டம் பெறுவார். பவள மங்கைக்கும் (ரூ.250/- மதிப்புள்ள) முத்து மங்கைகளுக்கும் (ரூ.100/- மதிப்புள்ள) பரிசுக் கூப்பன்கள் அந்த மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப் படும்.

ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் முப்பது முத்து மங்கைகளை அறிமுகப் படுத்துவதன் மூலம், பவள மங்கையி லிருந்து பதவி உயர்வு பெற்று மரகத மங்கை என்ற மகுடம் சூட்டப்படும்.

இவ்வாறு முப்பது சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தும் முதல் இருபது அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படம் அடுத்து வரும் மங்கையர் மலர் இதழில் வெளியாகும். கூடவே 'வைர மங்கை' பம்பர் பரிசுக் குலுக்கலில் கலந்து கொள்ள வும் அவர்கள் தகுதி பெறுவார்கள்.

'கல்கி' நிறுவனத்தின் மற்றொரு வெளியீடான நமது மங்கையர் மலர் இதழின் அன்புவட்டம் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்துக்கு, வாசகியரின் ஏகோபித்த வரவேற்பைக் கண்டு மகிழ்ச்சி அடைகி றோம். கல்கி வாசகர்களையும் இத்திட்டத் தில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கி றோம்.

நீங்களும் வைர மங்கை ஆகணுமா? அதற்கான கூப்பன் அடுத்த பக்கத்தில்...

(ஆர்)

மேலும் விவரங்களுக்கு

94443 83465 / 99400 73736

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

இத்திட்டத்தில்
மும்முரமாக இறங்கி முப்பது
முத்து மங்கைகளை அறிமுகப்படுத்தி,
ஐந்தாவது மரகத மங்கையாக உயர்ந்த
உஷா பாலசுப்ரமணியன் இதோ...



பிரியமுள்ள ஆசிரியருக்கு...

உங்கள் ஒரு வார்த்தை... ஓராயிரம் வார்த்தை! அதன் வழிகாட்டும் முறைகள் பெண்களை உற்சாகமூட்டுபவை, இதை மற்றவர்க்கும் எடுத்துச் செல்ல நினைத்தேன்... முடிப்பேன்... ஜெயிப்பேன்...

-உஷா பாலசுப்ரமணியன்

மங்கையர் மலர் - VBC இணைந்து வழங்கும் 'வைர மங்கை' சிறப்பு சந்தா திட்டம்

அன்பு அனுஷா நடராஜனுக்கு, பவள மங்கையான நான் (தற்போதைய மங்கையர் மலர் வாசகி), மங்கையர் மலரை, 5 முத்து மங்கைகளுக்கு அறிமுகப்படுத்துகிறேன். தாங்கள் கொடுத்துள்ள இந்த படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, 5 ஓராண்டு சந்தாதாரர்களின் தொகையாக, ரூ.1250/- மங்கையர் மலர் என்ற பெயரில் டி.டி/M.O மூலம் இணைத்துள்ளேன். என்னுடைய 5 முத்து மங்கை தோழிகளுக்கும், மங்கையர் மலர் இதழை அடுத்த மாதத்திலிருந்து அனுப்பி வைக்கவும். எனக்கும் என் தோழிகளுக்குமான பரிசுக் கூப்பன்களையும் அனுப்பி வைக்கவும். மேலும் பல முத்து மங்கைகளை அறிமுகப்படுத்த என்னால் இயன்றவரை முயலுகிறேன்.

பவள மங்கை

எனது பெயர் :..

முகவரி:..

....

....

சந்தா எண்: (தாங்கள் சந்தாதாரராக இருந்தால்)

....

ஃபோன்: ....

ஈமெயில்..

நான் அறிமுகப்படுத்தும் முத்து மங்கைகள்:

கல்கி

1. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

2. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

3. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

4. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

5. பெயர் : ....

முகவரி : ....

....

....

ஃபோன்:..

ஈமெயில்..

உறையின் மீது 'வைர மங்கை' என்று குறிப்பிட்டு அனுப்பவும்

இப்படிக்கு

அனுப்ப வேண்டிய முகவரி

மங்கையர் மலர் சந்தா பிரிவு, மங்கையர் மலர்,
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032

தேதி:..





NDE எஃபெக்ட்ஸ்!

திரைப்படத் துறையில் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் கலக்கத் தொடங்கிய பிறகு, அதைப் படித்துத் தேர்ச்சி பெற்று, திரைத்துறையில் கால்பதிக்க ஆசைப் படுவது இயற்கையே. இயக்குநர் ஷங்கரின் அந்நியன், சூப்பர் ஸ்டார் ரஜினியின் சிவாஜி, வரவிருக்கும் எந்திரன் ஆகிய படங்களில் நம் கற்பனைக்கே எட்டாத அதிசயங்களை எல்லாம் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் சாதித்துக் காட்டி இருக்கிறது.

உலகளவில், 'அவதார்' எல்லா சாதனைகளையும் முறியடித்து விட்டது. அதில் பெரும்பங்கு வகித்தது கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸும் விஷுவல் எஃபெக்ட்ஸும் போன்ற தொழில்நுட்பங்களே! இனி இந்திய அளவிலும் உலக அளவிலும் இதுபோன்ற கண்ணையும் கருத்தையும் கவரும் அற்புதங்களைத் திரைத்துறையில் செய்துகாட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது.

இந்தத் தேவையை ஒட்டியே என்.டி.இ. அனிமேஷன், ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் மற்றும் திரைத்துறையில் தொழில் பயிற்சி வழங்கவிருக்கிறது.

இப்பயிற்சிகள் வெறும் சாஃப்ட்வேர்களை மட்டும் சொல்லித் தரும் பயிற்சிகள் அல்ல. இதில் உங்கள் படைப்பாற்றல் மேம்படுத்தப் படும், தொழில்திறமை கூர்மைப்படுத்தப் படும், இன்றைய திரைத்துறை தேடிக்கொண்டு இருக்கும் திறமைகளைக் கொண்டவர்களாக உங்களைத் தயார்படுத்தும்.

திரைத்துறையில் சாதிக்கவேண்டும் என்ற துடிப்பும் வேகமும் உள்ள அனைவரும் இப் பயிற்சியில் சேரலாம். கம்ப்யூட்டர் அனிமேஷன் செய்யத் தெரிந்தவர்களுக்கான வாய்ப்புகள் உலகெங்கிலும் கொட்டிக்கிடக்கின்றன. உங்கள் வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிடக் கூடிய, ஏராளமான சம்பளம் பெறத்தக்க வேலை இது.

இப்பயிற்சிக்கான கால அளவு - ஓராண்டு.

திரைத்துறையின் அடிப்படைகள், அனிமேஷனின் வளர்ச்சிகள், ஸ்பெஷல் எஃபெக்ட்ஸின் முன்னேற்றங்கள் ஆகியவை என்.டி.இ.யில் சொல்லித் தரப்படுவதோடு, நேரடியாக மாணவர்களே திரைப்படத் தயாரிப்பிலும் பயிற்சி பெறுவார்கள்.

எதிர்காலத்தை மாற்றியமைத்துக்கொள்ள விரும்புகிறீர்களா? உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்:

NDE

Pacifica Tech Park, 23 Rajiv Gandhi Salai,
OMR (Near to Polaris Lab), Chennai - 603103.
Phone:+91 44 4214 8363, mobile: 9789973454 / 9789973464
Web:www.ndeworld.in

Advt

● டாக்டர் வசீகரன் (ரஜினி) ஒரு கல்லூரிப் பேராசிரியர் கம் ரொபோ தொழில்நுட்ப விஞ்ஞானி. அவர் ஒரு ரோபோவை உருவாக்குகிறார். அதன் மூலமாகத் தமது இலட்சியமாகக் கொண்ட சில விஷயங்களைச் சாதிக்க விரும்புகிறார். அவர் உருவாக்கும் எந்திரன் ரோபோ, ஒரு கட்டத்தில் விஞ்ஞானி ரஜினியின் காதலியான கல்லூரி மாணவி ஐஸ்வர்யாராய் மீது காதல் கொள்கிறது. ரஜினி எப்படி எந்திரனிடம் இருந்து தம் காதலியை மீட்டு தாம் நினைத்ததைச் சாதிக்கிறார் என்பதுதான் கதை. காலகட்டம் 2200. படத்தில் வில்லன் டானி டான்சோங்பா.

● முதல் ஷெட்யூல் ஷூட்டிங்கில் ஒரே ஒரு பாடல் காட்சிதான். அதற்காக ஷங்கர் யூனிட் பெரு நாட்டுக்குப் பேக் ஆனதாம்.

● வேலூர் வி.ஐ.டி. வளாகத்தில் ரஜினி பென்ஸ் காரில் நுழைவது போலவும், அங்கே ஐஸ்ஸைச் சந்தித்து அவர் கவனத்தைக் கவர்வது போலவும் ஒரு காட்சி படம் பிடிக்கப்பட்டது. இதில் பயன்படுத்தப்பட்ட புத்தம்புது பென்ஸ் காரின் விலை தொண்ணூறு லட்சமாம். நவீன பாணியில் கட்டப்பட்ட 'டெக்னாலஜி டவர்' பில்டிங்கிலும் சில காட்சிகள் பலத்த பாதுகாப்புக்கு இடையில் ரகசியமாகப் படமாக்கப்பட்டன. அப்போது படப்பிடிப்புக் குழுவினருக்கு ஸ்பெஷல் ட்ரீட் ஆம்பூர் பிரியாணியும், ஆம்பூர் பேடாவும்.

எந்திரன்



ஸ்பெஷல்

● பிரபுதேவா, டான்ஸ் மாஸ்டரிலிருந்து டைரக்டராக பிரமோஷன் ஆகிவிட்டாலும், ஷங்கர் படம் என்றால் அவர் கோரியோகிராஃபில் ஒரு சாங் நிச்சயம் இருக்கும்.


அந்த சாங், ஹைதராபாத் ராமோஜி ஃபிலிம் சிட்டியில் சாபுசிரிலின் பிரம்மாண்டமான செட்டில் நிஜ ரஜினி, ரோபோ ரஜினி, ஐஸ்வர்யா ராய் பங்கேற்க எடுக்கப்பட்ட பாடல் ரசிகர்களுக்கு ஒரு விஷுவல் விருந்து. காரணம், இதில் சூப்பர் ஸ்டார் நூறு விதமான தோற்றங்களில் வந்து மிரட்டுவாராம். இந்தப் பாடல் காட்சியை எடுத்து முடிக்க 22 நாள் ஆனதாம்.

ஒரு பாட்டுக்கு டான்ஸ் மாஸ்டர் பிரபுதேவா என்றால் இன்னொன்றுக்கு ராஜு சுந்தரம். மற்றொன்றுக்கு ராகவா லாரன்ஸ்.

● 'நான் சின்ன வயசிலிருந்தே படங்களில் அவரது ஸ்டைலைப் பார்த்து ரசித்திருக்கிறேன். எனக்கு அவருடன் நடிக்க ரொம்ப நாளாக ஆசை உண்டு. இப்போது எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. என் சினிமா வாழ்க்கையில் எந்திரன் மிக முக்கியமான ஒரு படமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை' - ஸ்டேட்மெண்ட்டை ஐஸ்.

● கோவாவில் இரண்டு ரஜினிகளுக்கும் இடையிலான ஒரு மெகா ஃபைட்டிங் சீன் படம் பிடிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மதுரவாயல் பகுதியில் உள்ள ராஜலட்சுமி இஞ்சினியரிங் கல்லூரி வளாகத்தில் சில காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்நியனில் வந்த 'மேட் சிக்ஸ்' சண்டை காட்சி மாதிரி இது எந்திரனின் ஹைலைட்டாக இருக்குமாம்.

● ராவணனில் ஐஸ்வர்யா ராய் சொந்தக் குரலில் பேசினாலும், எந்திரனில்



எந்திரன் கார் 90 லட்சம்!

அவருக்கு டப்பிங் குரல் கொடுக்க முடிவு செய்திருக்கிறார் ஷங்கர். அநேகமாக ஐஸ்வர்யா தனுஷ் அல்லது கனிகா டப்பிங் பேசுவார்கள்.

● சிவாஜியில், ரஜினியின் கூடவே வந்து விவேக் கலக்கியது மாதிரி எந்திரனில் காமெடி கலக்கல் பண்ணுகிறார் சந்தானம். ரஜினியைப் போலவே, சந்தானத்துக்கும் காமெடி பஞ்ச்கள் பல உண்டு.

● தமிழ், தெலுங்கு, ஹிந்தி என்று மூன்று மொழிகளில் வெளியானாலும், 'இது ஒட்டுமொத்தமாக ஒரு இந்திய சினிமா' என்கிறார் ஷங்கர். ஸ்பைடர் மேன், மம்மி போன்ற ஹாலிவுட் படங்களைப் பார்த்தபோது, அது மாதிரி இங்கேயும் ஒரு படம் எடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் உருவானதுதானாம் எந்திரன்.

● சென்னையில் படப்பிடிப்பு நடந்த நாட்களில் ரஜினி, ஷங்கர், ஐஸ், கேமராமேன் ரத்னவேலு என்று யூனிட்டின் முக்கிய மானவர்களுக்கு ரஜினி வீட்டிலிருந்துதான் சுடச்சுட லஞ்ச் வந்ததாம். தென்னிந்திய சாப்பாட்டை ரசித்து, ருசித்துச் சாப்பிட்ட ஐஸ், அவற்றின் ரெசிப்பிகளையும் விசாரித்து தெரிந்துகொண்டாராம்!

தொகுப்பு: **கௌதம் ராம்**

என் 'செல்'லமே!



எனதுயிரே... எனதுயிரே

என் செல்லில், என் கணவர் அழைத்தால் மட்டும், 'பீமா' படப் பாடல் 'எனதுயிரே' ஒலிக் கும்.

ஒருமுறை மாமியார் வீட்டிலிருந்து கிளம்பி வரும் சமயம், வாசலின் கீழ் இறங்கியதும், செல் சிணுங்க, பாடியது 'எனதுயிரே...' நடையை நிறுத்தி, செல்லை ஆன் செய்ய, அதேநேரம் மேலேயுள்ள மின்கம்பிகள் காற்றில் உரசித் தீப்பொறிகள் விழுந்தன.

பைக்கில் செல்லும் முகம் தெரியாத நபர், ''தீ விழுது... பாத்துப் போம்மா'' கூறியவாறே கடந்து சென் றதும்தான், மயிரிழையில் பிழைத்த அதிர்ஷ்டத்தை உணர்ந்தேன்.

அந்தச் சமயம், கணவர் மட்டும் அழைக்காவிடில், இந்த அனுபவத்தை எழுதும் வாய்ப்பு ஏது? என துயிரைக் காப்பாற்றியதை, கடவுளின் கருணை என் றார் கணவர். நானோ, இதைத்தான் ''கணவனே கண் கண்ட தெய்வம்'' என்று சொல்ல... மாமியார் ''செல்லால் அன்றோ உயிர் பிழைத்தாய்'' என முடித்தார். அன்றிலிருந்து செல்லில் 'எனதுயிரே' அழைக்கும்போது, மேற் சொன்ன சம்பவம்தான் நினைவில் வரும்.

- என். கோமதி, நெல்லை

பெருமாளுக்கு செல்ஃபோன்!

எங்களுடைய பிரார்த்தனை யான கல்யாண உற்சவத்தை நிறைவேற்றுவதற்காக,

வாசகர்களே! உங்க செல்லஃபோன் அனுபவத்தை எழுதுங்க
KACON என்று டைப் செய்து, ஒரு ஸ்பேஸ் விட்டு உங்கள் அனுபவம், பெய

சென்ற வருஷம் குடும்பத்துடன் திருப்பதி போயிருந்தோம். நீண்ட நாள் பிரார்த்தனை நிறைவேறப் போகிறது என்ற ஆசையும் பெருமாளின் கல்யாண உற்சவத்தை நேரிலேயே கண்ணாரக் கண்டுகளிக்கப் போகிறோம் என்ற பேராவலும் சேர்ந்து கொண்டு கூட்டத்தைக் கடந்து சீக்கிரம் போக வேண்டுமென்று எனக்கு ஒரே டென்ஷன்.

பெருமாளைத் தரிசிக்கப் போகும் போது, செல்ஃபோன் கொண்டு போகக் கூடாது என்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், ஒரு ஃபோனாவது கையில் இருக்கட்டும் என்று என்னுடைய செல்லை மட்டும் கையில் எடுத்துக்கொண்டதை அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

ஃபோன், காமிரா வைக்கும் இடத்துக்குப் போனால் அங்கும் ஏகக் கூட்டம். அம்மா சீக்கிரம் போகணும்னு துடிக்கிறாளே என்று என் பிள்ளை சிம் கார்டை எடுத்துக்கொண்டு செல்ஃபோனை தூக்கி வீசி விட்டான். எல்லோரும் அவனை ஏகத்துக்குத் திட்டினார்கள். ''எல்லோரும் சும்மா இருங்கள், பெருமாளுக்கு நம் கல்யாண உற்சவம் மட்டும் போறவில்லை. நம் செல்ஃபோன் அவருக்குத் தேவையாக இருக்கிறது'' என்றார் பாட்டி. ''ஆமாம், பாட்டி சொல்வதுதான் சரி'' என்று குழந்தைகள் சரி, பெரியவர்களும் சரி, பயந்து கொண்டு வாயை மூடிக்கொண்டு விட்டனர். நிம்மதியாகக் கல்யாண உற்சவம் பார்த்து, பெருமாளையும் தரிசித்துவிட்டு வந்தோம்.

- பாமதி நாராயணன்,
பெங்களூரு

பேய்.

பேய் அலறுவது மாதிரி ஒரு ரிங் டோனை டவுன்லோடு செய்து, அதை என் செல்ஃபோன் ரிங்டோனாக செட் செய்து வைத்திருந்தேன். நான் வேலை முடித்து வந்து படுத்தபோது நடுஇரவு. என் வெளிநாட்டு நண்பர் வழக்கமாக மிஸ்டு கால் கொடுப்பார். அன்று அவர் மிஸ்டு கால் கொடுத்தவுடன் ஆ....ஆ... என்று ஒரே அலறல். நான், என் மனைவி, மகன் எல்லோரும் பயந்து எழுந்துவிட்டோம். என் மனைவி இனிமேல் இப்படி ரிங்டோன் வைச்சிங்கன்னா செல்லை உடைச்சிடுவேன்னு சொல்லிட்டா. அப்புறம் என்ன செல்லமான என் செல்லில் வயலின் மட்டுமே ரிங்டோனாக வைத்திருக்கேன்.

- பி. பாலாஜி கணேஷ்,
கோவிலாம்பூண்டி



kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்ஃபோனில் ஊர் ஆகியவற்றோடு 562632 என்ற எண்ணுக்கு எஸ்.எம்.எஸ்.செய்யலாம்.



அருப்புக்கோட்டை நகரின் தெற்குத் தெரு. மின் வெட்டு இல்லை ஆனாலும் இருட்டு. பற்றவைத்துவிட்டு ஓடிவருவதற்குள் சர சரவென்று தங்கப் பொறியாக நகர்ந்து, பலத்த ஓசையுடன் கிளம்பி வானில் ஒளிப்பூவாய்ச் சிதறும் பட்டாசுகளுக்கு, திரிகள் தயாரிக்கும் இடம் அது. இருண்டு கிடக்கும் தெருவில் சிமிண்ட் பூசாத செங்கல் சுவர்களும் ஓட்டுக்கூரையுமாக இருக்கும் சின்னச் சின்ன வீடுகள். இது ஒரு காலத்தில் நெசவாளர் வீதியாக இருந்தது; இன்று ஒரு தறி கூடக் கிடையாது. மிகக் குறுகிய அந்தத் தெரு முனைகளில் குவியல்களாகத் திரி நூல்கள். கந்தக வாசனை. குடும்பம் முழுவதும் குனிந்த தலை நிமிராமல் பிசியாக இருக்கின்றனர். முன்பின் தெரியாதவர்கள் அனுமதிக்கப்படாத அந்தத் தெருவில் நுழைந்த நம்மைச் சந்தேகத்துடன் பார்க்கும் கண்களும் உயரும் புருவங்களும் உடன் வரும் அவர்களுடைய தலைவர்களின் நண்பரைப் பார்த்ததும் அமைதியாகின்றன.

மிகமிக ஆபத்தான இந்தப் பட்டாசுத் திரி தயாரிக்கும் தொழில், இங்கே 100 வீடுகளில் எந்த அனுமதியும் இல்லாமல் திருட்டுத்தனமாக இருட்டில் நடந்துகொண்டிருக்கிறது. ஒரு சிறிய நெருப்பு பொறி பட்டால் கூட பெரும் விபத்தாகிவிடக்கூடிய அபாயமிருப்பதால், வீடுகளில் சமையல் கிடையாது. பூஜைவிளக்குக் கூடக் கிடையாது. கார்கள் கூடப் போக முடியாத இந்தத் தெருக்களில் தீயணைக்கும் வண்டிகள் நுழைவதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது.

இந்தியாவின் பட்டாசு நகரமான சிவகாசியில் பட்டாசுத் திரிகள் தயாரிக்கப்படுவதில்லை. ஒரு சில பெரிய நிறுவனங்களில் மட்டும் இதற்குத் தனி பகுதி வைத்திருக்கிறார்கள். மற்ற ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளுக்கு இங்கிருந்துதான் திரிகள் போகின்றன. பொட்டாசியம் நைட்டிரேட், கந்தகம், கரித்தூளில் தோய்த்த கருப்பு நூலும், மெல்லிய பேப்பரும் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதை மூன்று மீட்டர் நீளத்துக்கு வெட்டி, டேப்பாக வரும் பேப்பரை அழகாக அதன்மீது சுற்றிய பின் ஆண்கள் அதைப் பெண் தொழிலாளிகளிடம் தருகிறார்கள். அதை அவர்கள் தம் வெற்றுத் தொடையில் திரித்து அளவான திரியாக்கி

அடுக்குகிறார்கள்.

இந்த வெடி மருந்துப் பொருட்கள் இப்படி வெற்று உடலில் படுவது ஆபத்து என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதற்காக பவுடராக அரைத்த கரியைப் பூசிக்கொள்கிறார்கள். அது இன்னும் எவ்வளவு பெரிய ஆபத்து என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. 1500 திரி தயாரித்தால் கூலி 150 ரூபாய். வாரத்துக்கு 800 முதல் 1000 வரை ஒரு குடும்பம் சம்பாதிக்கிறது. சீஸன் நேரமாதலால் ஓவர் டைம் வேலை செய்கிறார்கள். சில நெருக்கள் தள்ளியிருக்கும் உறவினர்களுக்கும் வேலை கொடுக்கிறார்கள். ஆண்டு தோறும் பட்டாசுத் தொழிலில் நிகழும் விபத்துகள் பற்றிக் கேட்டால் இதுவரை திரி தயாரிப்பில் எதுவும் நடக்கவில்லையே என்கிறார்கள். ஆனால் தாங்கள் யாருக்காக வேலை செய்கிறோம் என்றுகூட தெரியாத இவர்களில் சிலருக்கு இது அனுமதியில்லாமல் சட்டவிரோதமாகச் செய்யப்படும் தொழில் என்பதும் தெரிந்திருக்கிறது. ''இங்கு போலீஸ், மற்ற அதிகாரிகள் வரமாட்டார்கள். எங்கள் தலைவர்கள் பார்த்துக்கொள்வார்கள்'' என்கிறார்கள். இந்தத் தொழில் இரண்டு பெரிய கட்சிகளின் உள்ளூர் தலைவர்களின் ஆசியுடன் இயங்குகிறது. தீப்பெட்டி, பட்டாசு தொழிலாளர்கள் தமிழகத்தின் மிக முக்கிய வோட்டு வங்கிகளில் ஒன்று; அதை இழக்க எந்தக் கட்சியும் தயாரில்லை.

பல ஆண்டுகளாகப் பலருக்கு வேலைவாய்ப்பு தரும், இருட்டில் திருட்டுத்தனமாக நடைபெறும் இந்தத் தொழிலுக்குத் தனியாக எல்லாவிதப் பாதுகாப்பு வசதியுடன் அரசு ஒரு 'வெடிமருந்துப் பூங்கா' இதே பகுதியில் நிறுவ முடியாதா?

- ரமணன்

கருகும் திரிகள்!



எரி எண்ணெய் சோறு

எங்கள் குடும்பப் பெண்களுக்குக் குழந்தை பிறந்து ஹாஸ்பிட்டலில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்ததும், குழந்தை பெற்ற பெண்ணை உட்கார வைத்து அவளுக்கு நேர் எதிரே ஸ்டவ்வைப் பற்ற வைத்து ஒரு சிறிய சட்டியில் ஒரு கரண்டி எண்ணெய் விட்டு அந்த எண்ணெயை மிக இலேசாக சூடு படுத்துவோம். பிறகு அதில் சில மிளகுகளைப் போட்டு வெடிக்கவிட்டுச் சுரீர் என்ற சத்தம் வந்ததும் அடுப்பை அணைத்து ஒரு கரண்டி சாதத்தை அதில் போட்டு உருண்டைகளாக உருட்டிப் பிரசவித்த பெண்ணுக்குச் சாப்பிடக் கொடுப்பார்கள்.

இப்படிச் செய்வதால் (படபடவென்று சத்தம் வருவதால்) குழந்தைக்கும், குழந்தை பெற்ற பெண்ணுக்கும் திருஷ்டி கழியுமாம்!

இது எங்கள் குடும்பத்தில் பரம்பரைப் பரம்பரையாக வரும் குடும்ப நம்பிக்கை... சென்டிமெண்ட்.

- எஸ். ராஜகுமாரி,
சென்னை

மிளகளவு உணவு

பகவான் சத்ய சாயிபாபா படம் இல்லாமல், விபூதி அணியாமல், வணங்காமல், எங்கள் குடும்ப வண்டி ஒரு நாளும் கிளம்பாது. புதியதாக வாங்கும் எந்தப் பொருட்களிலும் பகவானின் சிறிய ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் என்பது எங்கள் வீட்டின் எழுதப்படாத சட்டம். மாதாந்திர / வாராந்திர காய்ச்சும் வெண்ணெயில் ஒரு சிறிய மிளகளவு இறைவனுக்கு ஊட்டி விடுவேன். சாமான் லிஸ்டில் முதலிடம் பெறுவது பூஜைக்கான மஞ்சள் பொடி.

'க்ஷேம தண்டலம்' அதாவது அரிசி, பருப்பு, மஞ்சள் ஆகியவற்றை சிறிது பொட்டலம் கட்டி பெட்டியில் இட்டுத்தான் கிளம்புவோம். ஏதாவதொரு விசேஷமானாலும் பண்டிகையானாலும் ஒ ரவிக்கை துண்டு வாங்குகிற கடையிலேயே ஒரு சுமங்கலிக்குக் கொடுத்து ஆசி வாங்கிய பின்தான் 'பர்சேஸ்' ஆரம்பம்.

- லக்ஷ்மி ஸ்ரீனிவாச
சென்னை



டென்ஷன் குறைக்கு

செவ்வாய் ராசி!

செவ்வாயோ...வெறும் வாய் என்று சொல்லியே நிறைய பேர் செவ்வாய்க் கிழமைகளில் புதிய விஷயங்கள் எதுவும் தொடங்காமல் ஒதுக்கிவிடுவார்கள். ஆனால், எனக்கோ செவ்வாய்க் கிழமை தான் மிகவும் ராசி. அது நான் பிறந்த கிழமை என்பதால் அந்தக் கிழமை மீது தனி செண்டிமெண்ட்டுடன் கூடிய அட்டாச்மெண்ட். குறிப்பாக 6, 15, 24, 9, 18, 27 தேதிகளில் செவ்வாயும் சேர்ந்து வந்தால் கொண்டாட்டம் தான்... காரியம் ஃபுல் சக்ஸஸ்தான்! அதுமட்டுமல்ல... செவ்வாய்க்கிழமை புனித அந்தோணியார் தினம்... எனவே இன்னும் கூடுதல் ராசி!

- ஜே.சி.ஜெரினா காந்த், சென்னை



ஊஞ்சல்!

டீ சகுனம்!

என்னுடைய மகள் வீடு தருமபுரியில் இருக்கிறது. அவளைப் பார்ப்பதற்கோ அல்லது வேறு சுப நிகழ்ச்சிகளுக்கு தருமபுரி போனாலோ அங்குள்ள நகரப் பேருந்து நிலையத்தில் ஒரு கப் டீ குடித்துவிட்டுப் போனால் தான் நிம்மதி. குறிப்பிட்ட ஒரு கடையில் தான் டீ குடிப்பேன். அவசரமாகப் போக நேரிட்டு டீ குடிக்காமல் போய்விட்டால் ஏதாவது ஒரு தடங்கல் வந்துவிடும். இது கொஞ்சம் காமெடியாக இருந்தாலும் செண்ட்டி மெண்டாகத் தொடர்கிறது.

- சி. விஜயாம்பாள், கிருஷ்ணகிரி

எங்கள் வீட்டில் ஓர் அழகிய சிறிய சங்கிலி ஊஞ்சல் இருக்கிறது. எனது பேரன் பேத்திகள் அமர்ந்து ஆனந்தமாக ஆடி விளையாடிய ஊஞ் சல் அது. இன்று அவர்கள் அனை வரும் தத்தம் பெற்றோருடன் வேறு வேறு இடங்களில் வசிக்கும்போது, எப்போது அவர்கள் நினைவு வந்தா லும் 72 வயதான நான் அதில்தான் அமர்ந்து இளைப்பாறுவேன். குறிப் பாக தினசரி குளியல், இறை வணக் கம் முடிந்தவுடன், இந்த ஊஞ்சலில் ஏறி அமர்ந்து வேகமாக உந்தி விடுவேன். இறைவன் சுலோகங்களைச் சொல்லும் அதேவேளையில் ஊஞ்சல் வேகமும் வேகமாக ஆடத் தொடங்கி, பின் மெது வாக வேகம் குறைந்து நிலைக்கு வந்த தேர் போல ஆடாது நிலைத்து நின்று விடும். என் மன ஓட்டங்களும் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்து, டென்ஷன் குறைந்து இலகுவாகி விடும். ஒரு தம்ளர் காஃபி அல்லது நீர் அருந்திவிட்டு மற்ற வேலைகளைச் செய்ய முற்படுவேன்.

- ஆர்.ஜி. கொரட்டூர்



நான் சந்தித்த ஜோடிகளுக்கும் பெண் சுதந்திரத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கு. அதனால பெண் உரிமை, பெண் சுதந்திரம் பத்தி நான் என்ன நினைச்சுக்கிட்டு இருக்கேன்னு உங்களுக்குச் சொல்லிட்டா ரூட் க்ளியர் ஆயிடும். சினிமாவுக்கு வர்ற வரைக்கும் இப்படி ஒரு விஷயம் இருக்கிறதே தெரியாது. சோறாக்க அம்மா, காப்பாத்த அப்பா, பாசம் காட்ட அக்கா - தம்பி, இவங்களைத் தவிர மத்தவங்களெல்லாம் எதுக்கு? வேஸ்டா இந்தப் பூமியில? நமக்குத் தேவையில்லாததுன்னு தோணும். சொந்தக்காரங்க, தெரிஞ்சவங்க யாராவது வீட்டுக்குள்ளே நுழையும்போதே 'டாட்டா' காட்டுவேன். 'அய்யோ எவ்வளவு சமத்துன்னு' கொஞ்சுவாங்க. போறப்ப காட்ற டாட்டாவை மொதல்ல காட்டிட்டா போயிடுவாங்கன்னு நெனைச்சேன். என்னோடு சேர்ந்து வளர்ந்த தம்பிக்கு மீசை மொளச்சப் பிறகுதான் எனக்கு 'பெண் உரிமை' பிடிபட ஆரம்பிச்சது.

அவன் வெளிய சுத்திட்டு லேட்டா வந்தா 'ஏம்பா லேட்டு'ன்னு ஸ்லோமோஷன்ல கேப்பாங்க. நான் லேட்டா வந்தா ஒரு விசாரணை கமிஷனே போட்டுடுவாங்க. தம்பி வீட்டுக்குள் நுழையும்போதே... 'வாப்பா'ன்னு அம்மாச்சி எழுந்துக்கும். என்னைப் பார்த்து 'அவன் வர்றப்போ அடக்க ஒடுக்கமா உட்காரக் கூடாதா... -வசவு விழும். என்னடா இது இந்த அரும்பு மீசைக்கு எப்படி இவ்வளவு பவர் வந்தது? இவனுக்கு எதுக்கு நான் மரியாதை

ணும்? 'நீ இன்னொருத்தன் வீட்டுக்குப் பாறவ, அவன் எங்களை வைத்துக் காப் பாத்துறவன் என்பதுதான் அந்த மரியா தக்குக் காரணம்'னு பாட்டி சொன்னாள். டிக்கடி பாட்டி கொளுத்தித் தூக்கிப் பாடுற வரி எனக்குள்ளே 'டமால்'னு வடிக்கும். அது 'பெரியவங்க சொல்றத பாட்டப் புள்ளைங்கக் கேட்கணும்' என் றுதான். அந்தப் 'பொட்டப் புள்ளைங்க' ன்ற வார்த்தை என்னை ரொம்ப டுப்பேத்தியது. அப்போதான் எனக்கு ஒரு த்தகம் படிக்கக் கெடச்சது. மேற்கு வங்க பண் எழுத்தாளர், ஆஷா பூர்ணா தேவி யாட 'முதல் சபதம்' என்கிற கதை. 'அடப் ாவிங்களா பொம்பளைங்களை இப் டியா நடத்துறீங்க. நீங்க இப்படிப்பட் டவன்களா? இவ்வளவு நாளா இது தெரியாமப் போச்சே'-ன்னு இன்னொரு புது உலகம் புரிபடலாச்சு. (தயவு செய்து பெண்கள் வாழ்க்கையில் ஆஷா பூர்ணா தேவி, மகாசுவேதா தேவி இரண்டு பேரோட புத்தகங்களை ஒருமுறையாவது வாசிச்சுடுங்க) இப்பத்தான்... வீட்டுல மீன் கொழம்பு வெச்சா நமக்குத் தலையும், ஆம் பிளைக்கு (என் தம்பிக்கு) கண்டத்தை யும் ஏன் பாகுபாடா கொடுத்தாங்கன்னு யோசிக்க ஆரம்பிச்சேன். இனி விடக் கூடாது... எல்லாமே ஏட்டிக்குப் போட்டி தான். செய்யாதேன்னு சொன்னா... செய்யணும்! ஏன் எனக்கு உரிமை யில்லையா சுதந்திரமில்லையான்னு இப்படித்தான் வீம்புல ஆரம்பிச்சது என் னோட பெண் சுதந்திரம்.

பத்தம்!"

'முந்தானை முடிச்சு' படத்தோட வெற்றி எனக்குள்ளே பெரிய பலத்தைக் கொடுத்தது. நூறாவது நாள் விழா கோலாகலமா நடக்கப் போவுது! சரளா அக்காவிலிருந்து மேனேஜர் வொய்ஃப் வரை எல்லோரும் பளபளக்கும் பட்டுப் புடைவையில... நான் மட்டும் மாடர்ன் டிரஸ். எனக்கும் பட்டுப் புடைவை இருந்தாதான் வெற்றிவிழாவுக்கு வரு வேன்னு சொன்னேன். அம்மா சொன் னாங்க, ''உன்னால உன் உடம்புக்குப் பட்டுப் புடைவைத் தாளாதுடி. பெரியவங்க சொன்னா பொட்டப்புள்ளை கேட்கணும்.'' மாட்டு வாலை முறுக்கிவிட்டாப் போல ஆச்சு அந்தப் 'பொட்டப்புள்ளே' என்ற சொல்லைக் கேட்டவுடனே. புடைவை கட்டத் தெரியாத எனக்கு உடனடியா ஒரு பட்டுப்புடைவை வர வழைக்கப்பட்டது. 'கிலோ கணக்கில எதுக்குச் செய்யுறாங்க இப்படி ஒரு புடைவையை... அடச்சீ'ன்னு தோணுச்சு. யாரோ ஒரு ஆளை எப்பவும் நான் தூக்கிட்டு அலையுற மாதிரியே இருந்தது. கூட்டம்னா கூட்டம், சொல்லி மாளலே! ஒவ்வொருத்தரா பேசு றாங்க... மேடை யில பெண் உரி மையை (எனக்



"பெண்களுக்குச் சுதந்திரம் தேவையில்லை!"

மனு ஸ்மிருதி

கானதை என் விருப்பத்தை நான் நிறை வேத்திப்பேன் - இந்தப் புடைவையைக் கட்டிக்கிட்டதைப் போல) நிலை நாட்டிக. சந்தோஷத்தில நான் 'பந்தா'வா உட்கார்ந்து இருந்தேன். பாக்யராஜ் அடுத்து என்னைக் கூப்பிட்டார். மேடையில நானும் நாலு வார்த்தை பேசிட்டு, கூட்டத்தைப் பார்த்துக் கைகளை ஆட்டினேன். மனசுல மட்டு மல்ல உடம்புலேயும் பாரம் குறைஞ்ச மாதிரி இருந்தது. கீழே குனிஞ்சு பார்த் தேன். முந்தானை மட்டும் எம் மேல முன் னால இருக்கு. மத்த புடைவையெல்லாம் ரவுண்டா என்னைச் சுத்திக் கீழே கிடக்கு. கலர் மலைப் பாம்பு போல. சரளா அக்கா, 'கையைக் காட்டுனது போதும். உட் காரு'ன்னு சொன்னாங்க. நான் அழுதுட்டே 'வேணா நான் நிக்குறேன்'னு சொன்னேன். அப்போ தான் அவங்களுக்கு விஷயமே தெரிஞ்சது. கொத்தா அப்படியே அள்ளிச் சுருட்டி இடுப்புல சொருகி மேடைக்குப் பின்னாலே போயிட்டேன். எனக்குப் புடைவை விழுந்தது அசிங்கமாப் படல. திரும்பவும் அம்மா சொன்னாங்க, ''அதுக் குதான் பெரியவங்க சொன்னா பொட் டப்புள்ளை கேட்கணுங்கறது'' அதுதான் மகா அசிங்கமா இருந்தது.

சுதந்திரத்தின் பேரால, உரிமையின் பேரால நான் தேர்ந்தெடுத்த பல முடிவுகள் தோல்விகளில்தான் முடிந்தன. புடைவை அவிழ்ந்ததுக்காகச் சொல்லலே. பெண் களுக்குத் தனியா சுதந்திரம் தேவையில்லை என்பதுதான் இப்போ என்னோட கருத்து. என் கருத்தைப் போலவே.

'பித்ரு ரக்ஷதி கௌமாரே
பத்ரு ரக்ஷதி யவ்வனே
புத்ர ரக்ஷதி வார்த்தக்யே



"பெண் சுதந்திரமே ஆதாரம்!"

ஆஷா பூர்ணா தேவி

ந ஸ்திரி சுவாதந்திர்ய மர்ஹதி'-ன்னு 'மனு'வில் குறிப்பிட்டு இருக்கு. கடைசி வரியில... சுதந்திரத்துக்குப் பெண் ஆசைப் படத் தேவையில்லையென்று மனு சொல் கிறார். அது சரி! ஆம்பிள எழுதுற புக்கு எப்படியிருக்கும்? ஏன் சுதந்திரம் பெண் ணுக்குத் தேவையில்லையாம்?

(தொடரும்)

படம்: **ஞானம்**

ஊர்வசி போட்டி சில்கி சாரி!



மாதம் 3 புடவைகள் பரிசு!

வாசகர்களே!

ஊர்வசி எழுதும் 'காலை எழுந்தவுடன் சிரிப்பு!' தொடரைத் தொடர்ந்து படிங்க... தொடரையொட்டி வாரம் ஒரு கேள்வி கேட்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு கூப்பன் இடம்பெறும். விடைகள் மற்றும் உங்களின் பெயர் முகவரி ஆகியவற்றை அதிலேயே எழுதி இணைத்து மொத்தமாய் ஒவ்வொரு மாத இறுதியிலும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

சரியான விடை எழுதிய மூன்று வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாதத்துக்கான அதிர்ஷ்டசாலிகளாகப் புடைவைப் பரிசு பெறுவார்கள். **தொடரின் இறுதியில் ஒரு மெகா பரிசும் உண்டு!**

செப்டெம்பர் மாதக் கூப்பன்களை இணைத்து அனுப்ப

கடைசித் தேதி : **06.10.10**

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

பெயர் : ....

முகவரி : ....

....

....

.....................பின்கோடு:...................

தொலைபேசி : ....

இ-மெயில் : ....

செப்டெம்பர் – 12

ஊர்வசி சிபாரிசு செய்யும் 'முதல் சபதம்' என்ற கதை யாருடையது?

விடையை டிக் செய்யவும்

- [ ] மனு ஸ்மிருதி
- [ ] மகா ஸ்வேதா தேவி
- [ ] ஆஷா பூர்ணா தேவி
- [ ] சிவசங்கரி





சாபுசிரில்

ஃபர்ஸ்ட் ஜீனோ நா

எந்திரன் படத்துக்குக் கலை இயக்குநர் மன்னிக்கவும் தயாரிப்பு வடிவமைப்பாளராகத் தம் முழு கிரியேட்டிவிட்டியையும் பயன் படுத்திப் பணியாற்றி இருக்கிறார் பிரபல ஆர்ட் டைரக்டர் சாபுசிரில். மும்பையில் ஷாருக்கான் நடிக்கும் பட வேலையில் படு பிஸியான இடைவேளையில் பேசியவற்றின் தொகுப்பு இது.

கமல் போனார்; ரஜினி வந்தார்

''பத்து வருடங்களுக்கு முன்னால் டைரக்டர் ஷங்கர் என்னிடம் ஒரு ஸ்கிரிப்டோடு வந்து, எந்திரனாகப் பெயர் மாறிய ரோபோ கதையைச் சொல்லி 'ரோபோவாக கமல் நடிக்கப் போகிறார்; நீங்கள் ஆர்ட் டைரக்டராக இருக்கவேண்டும்' என்றார். ஆனால் ஷங்கர் சொன்ன பட்ஜெட்டில் அந்தப் படத்தை எடுக்கத் தயாரிப்பாளர் கிடைக்காததால் கிடப்பில் போடப்பட்டது. மூன்று வருடங்களுக்கு முன்னால் மறுபடியும் ஷங்கர் வந்து, 'பழைய ரோபோ ஸ்கிரிப்டில் ரஜினி நடிக்கிறார். அதற்கேற்ப சில மாற்றங்கள் செய்திருக்கிறேன். நீங்கள் தான் ஆர்ட் டைரக்டர்' என்றார்.

ஜீனோ டு ரோபோ

''சுஜாதா எழுதிய 'என் இனிய இயந் திரா!' டிவி. தொடருக்காகப் பேசும் இயந்திர நாய் ஜீனோவை உருவாக்கிய அனுபவம் எனக்கு உண்டு. ஜப்பான், ஜெர்மனிக்கெல் லாம் சென்று அதுபோல நிஜமான ரோபோ நாய் கிடைக்குமா என்று தேடினார்கள் கிடைக்கவில்லை. ஆனால், வெறும் ஐந்தா யிரம் ரூபாய் மட்டுமே செலவழித்து அந்த ரோபோ நாயை உருவாக்கினேன். ஜீனோ வுக்காகவே அந்தச் சீரியல் பெரிய அளவில் ஹிட் ஆனது. அதன்பிறகு ஒரு மலையாளப் படத்துக்காக ஒரு பெரிய திமிங்கலம் உருவாக்க வேண்டி இருந்தது. திரையில் பார்த்துவிட்டு, 'அது நிஜமான திமிங்கலமா?' என்று கேட்டார்கள். இந்த அனுபவங்கள்தான் எந்திரன் படத்தில் பணியாற்றும் தைரியத் தைத் தந்தது.''

சயன்ஸ் ஃபிக்ஷன்

''எந்திரன் படத்துக்காக அமெரிக்கா சென்று ஜுராஸிக்பார்க், அயர்ன் மேன் போன்ற சிறந்த படங்களை உருவாக்கி



ரோபோ செட் ரகசியம்

எந்திரன் ஸ்பெஷல்

ஸ்பெஷல் எஃபெக்ட் ஸ்டுடியோக்களுக்குச் சென்று பார்த்தேன். அமெரிக்காவில் உள்ள பஃபெல்லோ பல்கலைக் கழகத்தில் ரோபோடிக் இஞ்சினியராக இருக்கும் என் நண்பரைச் சந்தித்துப் பேசி ரோபோ டெக்னாலஜி பற்றின லேட்டஸ்ட் தகவல்களைத் தெரிந்து கொண்டேன். ஆனால் எந்திரன் படத்தில் வரும் ரோபோ வெறும் இயந்திரம் அல்ல; மனிதர்களைப் போலவே உணர்ச்சிகள் கொண்டது! டம்மியாக ரோபோக்களை உருவாக்கி டெஸ்ட் பண்ணிப் பார்த்தோம். உண்மையிலேயே ஒரு ரோபோவை உருவாக்க வேண்டுமென்றால் கோடிக் கணக்கில் செலவாகும். ஜேம்ஸ் பாண்ட் படங்களில் எல்லாம் சில உபகரணங்கள் நிஜத்தில் சாத்தியம் இல்லாமல் போனாலும், அது நிஜம்தான் என நம்பும்படியாக வடிவமைத்திருப்பார்கள். அதுபோல ரோபோவும் இருக்க வேண்டும். ஆனால் அத்தனை செலவு செய்யக்கூடாது. இந்தக் கட்டுப்பாட்டுக்குள் ரோபோவை உருவாக்கினோம். ஒரு பாட்டுக்கு ரோபோக்களின் உலகம் போல ஒரு செட் போட்டதை மறக்க முடியாது.''

நக்ஸ்ட் திமிங்கலம்; தேர்ட் 'ரோபோ'!

செட்களும் பிரமாண்டம்

''எந்திரன் படத்துக்காக முப்பத்தைந்து விதமான செட்கள் போட வேண்டி இருந்தது. இவற்றில் சிலவற்றை ஹை டெக் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கினோம். ஹெலிகாப்டர்கள், ராணுவ விமானங்கள் போன்றவற்றைக்கூட எந்திரனுக்காக உருவாக்கினேன். ஈ.சி.ஆர். ரோடில் மாயாஜாலுக்குப் பின்புறம் ஒரு பாடல் காட்சிக்காக 35 அடி உயர செட் ஒன்று போட்டோம். ஏ.சி.பி. என்கிற பளபளக்கும் அலுமினியம் காம்போசிட் பேனல்களைப் பயன்படுத்தி வேலையை ஆரம்பிக்கும் போது, ஷங்கர் திடீரென்று செட்டை 50 அடி உயரத்துக்குப் போட்டு விடுங்கள் என்று சொல்ல திணறி விட்டேன். அத்தனை உயர செட்டைக் கீழே விழாமல் நிறுத்துவதற்கு ஏற்ப செட்டின் டிசைனை மாற்றும்படியானது. குறித்த காலக் கெடுவுக்குள் அதை முடிக்க இரவு பகலாக ஆட்கள் உழைக்க வேண்டி இருந்தது. எந்திரன் படத்தைத் தவிர வேறு எந்தப் படத்துக்கும் இவ்வளவு கஷ்டப்பட்டது கிடையாது. ஷாருக்கான் எடுக்கும் 'ரா ஒன்' என்ற ரோபோ படத்துக்கும் நான் தான் ஆர்ட் டைரக்டர். ஆனால் அதைவிட இது தான் சூப்பர்.''

- மானஸா



• சாதனை கருவூலம்



• அவசரக் கருத்து



• கோடி கவலை!

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? மக்களின் கலைஞனாகவே கலைத் துறையில் தொடர விரும்புகிறேன் எனக் கூறுகிறாரே கமல்?

! மக்களின் கலைஞனாக மட்டுமே செயல்படாமல் (தசாவதாரம் போல) மக்கள் நலன் கலைஞராகவும் விளங்கினால் (அன்பே சிவம் போல) மக்கள் மனத்தில் என்றும் சரித்திர புருஷனாக நிச்சயம் நிலைத்திருப்பார்.

● கே.எஸ்.கோவர்த்தனன், சென்னை - 42

? சினிமா துறையில் வசதிகள் அதிகமுடைய பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்தி, கலைஞர்களுக்கு வீடுகட்ட உதவி செய்யக் கூடாதா? அரசுப் பணத்தில்தான் வீடு கட்டிக் கொடுக்கணுமா?

! சினிமாக்காரர்களுக்குச் செய்தால்தான் சார் பாப்புலாரிட்டி. கொஞ்சம் குத்தாட்டம், புகழ்மாலை, மறுநாள் பேப்பரில் முதல் பக்க நியூஸ் என்று அமர்க்களப்படும். இளாமருக்கு எப்பவுமே மவுசு அதிகம்!

● ஜி.மகாலிங்கம், காவல்காரபாளையம்

? சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு ராஜீவ் காந்தி பெயரைச் சூட்ட இளங்கோவனும் பெரியார் பெயரைச் சூட்ட வீரமணியும் கோரியுள்ளனரே... எது பொருந்தும்?

! யார் பெயரைச் சூட்டினாலும் (ஜி.எச்.) ஜெனரல் ஹாஸ்பிடலின் குறைபாடுகள் அவருக்கு அவப்பெயராக வந்து சேரும்! நிறைகள் பின்னுக்குத் தள்ளப்படும். அதனால் அரசு பொது மருத்துவமனை என்றழைப்பதே நல்லது.

இந்தியா எதிர்நோக்கும் சவால் எது?



● கு. அருணாசலம், தென்காசி

? 'போதும் போதும்... தமிழ்நாட்டுக்கு இனி புதிய இஞ்சினியரிங் கல்லூரிகள் வேண்டாம்' என்ற அமைச்சர் பொன்முடியின் கருத்து பற்றி...?

! ஒரு புள்ளிவிவரப்படி ஜப்பானில் பத்து லட்சம் மக்களுக்கு 624 இஞ்சினியர்கள் இருக்கிறார்கள்.

இந்தியாவிலோ பத்து லட்சம் மக்களுக்கு 34 இஞ்சினியர்களே இருக்கிறார்கள். வள நம் நாடான நமக்கு இன்னும் நிறைய இஞ்சினியர்கள் தேவை. கல்லூரிகளில் காலி இடங்களுக்குக் காரணம் கல்வி வியாபாரமாகிப் போனதுதான். கல்லூரி களே வேண்டாம் என்று சொல்வது ஆராய்ந்து பார்க்காத அவசர கருத்து.

● ச.நாராயணன், திருநெல்வேலி

? கோடீசுவர எம்.பி.க்கள்கூட சம்பள உயர்வு வேண்டும் என்று கூச்சல் போட்டு சபையை நடக்கவிடாமல் முடக்குவது அநியாயம் இல்லையா?

! டபுள் அநியாயம்.. முந்நூறு சதவிகித சம்பள உயர்வே அநியாயம்; அதற்காக நாடாளுமன்ற நேரத்தை வீணாக்குவது தேச துரோகம்!

● லீலாராம், தக்கலை ❑

? இந்தியாவுக்குப் பெருத்த சவாலாகத் தாங்கள் அடையாளம் காண்பது எதை?

! இந்திய இளைஞர்களுக்கு அரசியல் துறை மீதும் அரசியல்வாதிகள் மீதும் ஆர்வமும் ஈடுபாடும் குறைந்துவிட்டன. பிடிக்கிறதோ பிடிக்கலையோ, அரசியல் வாதிகள்தாம் நம் நாட்டை ஆளப்போகி றார்கள். அரசியல் ஈடுபாடு இருந்தால்தான் அவர்களைச் சரியாகத் தேர்வு செய்ய முடியும்; வழிகாட்டவும் முடியும்.

● எஸ்.ஜெயகாந்தன்,
புன்செய்புளியம்பட்டி

? நீண்ட கால தோழியான சுனந்தாவை சசிதரூர் திருமணம் செய்து கொண்டது குறித்து?

! வாழ்க மணமக்கள் தமது மக்களுடன்!

● எஸ்.ஏ. கேசவன், குருமலை


? புதிய புதிய பகுதிகளுடன் மிளிரும் இப்போதைய 'கல்கி'யைப் பற்றி அமரர் கல்கி என்ன எண்ணுவார்?

! பழமையோடு புதுமைக்குச் செலப் புக் கம்பளம் விரித்த சிந்தனையாளர் 'பேஷ், பலே' என்பார். கூடவே ஒவ்வொரு பகுதியிலும் இரண்டொரு திருத்தங்கள் செய்து மெருகேற்றி ஒளிரச் செய்வார்.

● பாலு, சிவகாசி

? கோட்டூர்புரத்தில் கிடுகிடுவென வளர்ந்து வரும் அசத்தலான அண்ணா நூலகத்தைப் பார்வை யிட்டீர்களா?

! பிரம்மாண்டம்! நூல் களுக்கு இப்படிப்பட்ட ஓர்



★ நலமே நிலைக்க...

தராசு

நீங்கள் கேட்டவை



● வாழ்க மக்களுடன்!



● ஓயாத கோஷ்டிகள்!

● அவசிய நாகரிகம்



அப்படிக் கருவூலத்தை ஒரு வாக்குவது வருங்காலத்துக்குச் செய்யும் பெருந்தொண்டு. கலைஞரின் சிந்தனையில் மலர்ந்த தமிழக அரசின் சாதனையாக இதை நிச்சயம் சேர்த்துக் கொள்ளலாம்.

● எம்.சம்பத்,
வேலாயுதம்பாளையம்

? காங்கிரஸ் கடல் போன்றது. கடலின் அலைகள் ஓயாது; அதேபோல காங்கிரஸின் கோஷ்டிகளும் ஓயாது,'' என சுதர்சன நாச்சியப்பன் கூறுகிறாரே?

! அக்கட்சியின் தலைவலிகளும் பிரச்னைகளும் ஓயமாட்டா என்பதை உணர்த்துகிறார்.

● இரா. சக்கரபாணி, மதுரை

? ''சுய நலத்துக்காக வேலை செய்பவர்கள் ரொம்ப சீக்கிரம் களைப்படைவார்கள்; பொது நலத்துக்காக உழைப்பவர்கள் களைப்படையவே மாட்டார்கள்'' என்று ரஜினிகாந்த் கூறியுள்ளாரே?

! அவை நாகரிகம் கருதி முதல்வரைப் பற்றி இவ்வாறு பேசியிருக்கிறார். இவ்றைய இந்தியாவில் பொதுநலத்தில் சுய நலமும் சுயநலத்தில் பொது நலமும் இரண்டறக் கலந்து போயிருக்கின்றன என்பதை ரஜினி அறிவார்.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு

? மாநில அரசுகளின் உரிமைகளை எடுத்துக் கொள்ளும் விதத்தில் மத்திய அரசு செயல்பட்டால், அதற்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை என தமிழக முதல்வரே சொல்லி விட்டாரே?

! மத்திய அரசில் இவர் கட்சியே இடம் பெற்றுள்ள போது, வேறு எப்படி இவரால் பேச முடியும்? கலைஞரின் வருத்தத்துக்கு, சொல்லாத நோட்டுக்கு உள்ள மதிப்புதான்.

❑ ரூ.150 பரிசு பெறுபவர் :
லீலா ராம், தக்கலை

★ ரூ.75 பரிசு பெறுபவர் :
மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

●மு.பெரியசாமி, விட்டுக்கட்டி ★

? நக்ஸலைட் தாக்குதல் காரணமாக ரயில்வே நிர்வாகத்துக்கு ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மமதா பானர்ஜி சொல்கிறாரே?

! பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழி!

உங்கள் கேள்விகளை 'தராசு' என்று குறிப்பிட்டு kalki@kalkiweekly.comக்கும் அனுப்பலாம். உங்கள் செல்போனில், **KAGQA** என்று டைப் செய்து ஒரு ஸ்பேஸ் விட்டு, உங்கள் கேள்வி,பெயர், ஊர் ஆகியவற்றுடன் 562632 என்ற எண்ணுக்கும் எஸ்.எம்.எஸ். செய்யலாம்.

ஆஹா ஆல்பம்



எந்திரன் மாதிரி தெரிஞ்சாலும்
எல்லோர் மனசிலும் சந்திரனா குளிரணும்
வாழ்வின் தந்திரமே இதுதான்!
—நாகராஜன், நாகர்கோவில்




பிரிக்க முடியாத வானவில்லின் கலருங்க மாதிரி
இப்படி கலந்து இருந்தா
இனி பிறக்கும் நாளெல்லாம் திருவிழாதான்!
—சிவசுந்தர், திருப்பூர்


வாசகர்களே! திருமண ஃபோட்டோ மட்டுமல்ல, நீங்கள் பெரிதும் ரசிக்கும், பொக்கிஷமாகப் பாதுகாக்கும் ஃபோட்டோ எதுவாயினும் 10 வரிகள் குறிப்புடன் 'ஜம்'முன்னு எழுதி அனுப்புங்க...






சுவாரஸ்யத்தில்





* சந்திரசேகர்



''வாழ்க்கைதான் எனக்கு வரையக் கத்துக்கொடுத்தது. உண்மை உணர்த்துகிற செய்திகளைவிட பொய்கள் நிகழ்த்தும் சின்னச் சின்னக் கலவரங்கள்தான் வாழ்க்கையைச் சுவாரஸ்யமாக வெச்சிருக்குன்னு நினைக்கிறேன்'' என்கிற ஓவியர் சந்திரசேகர் கோவையைச் சேர்ந்தவர். கோவை சித்ரகலா அகாடெமியின் இணைச் செயலாளர். இயல்பில் கம்ப்யூட்டர் படித்தவர் இப்போது கல்லூரி, கல்லூரியாகச் சென்று ஓவியம் குறித்த ஒர்க் ஷாப்களை நடத்தி வருகிறார். ''வாழ்க்கையில் எந்தத் திருப்பத்துலயாவது நம்மை அறியாமலே எதுக்காவது அடடா போடுவோம்; சஞ்சலப் படுவோம்; சந்

றேங்கள்!

தோஷத்துல ஆர்ப்பரிப்போம். அப்படிப்பட்ட மனநிலைகளை ஓவியத்தில் கொண்டு வரணும். அதுவும் காண்ட்ராஸ்ட் கலர்களில்'' என்கிறார் சந்திரசேகர். இவர் ரங்கோலி கோலங்கள் போடுவதிலும் படுகில்லாடி. மூன்று வருடங்களுக்கு முன்பு கோவையில் பொங்கல் திருநாளின்போது போட்ட கோலத்தின் அளவு 160 அடி நீளம் 200 அடி அகலம். ''இந்தக் கோலத்தினைப் போட்டு முடிக்க ஆறு டன் கோலப் பொடி செலவாச்சு'' என்கிறார். ''கின்னஸுக்கு எழுதிப் போடலையான்னு கேட்டா'', ''எதுக்கு ஸார் கின்னஸ்'' என்று வெட்கப்படுகிறார்.

மகிமைராஜன்



பளிச் பரிகாரம்



எல்.வெங்கடேசன்,

கொல்கத்தா

எனது மகன் யக்ஞப்ரபுவின் ஜாதகம் அனுப்பியுள்ளேன். அவனுக்குத் திருமணம் தாமதமாகிக் கொண்டே போகிறது. அவனுக்கு எப்பொழுது திருமணம் நடக்கும்?

உங்கள் மகன் ஜாதகத்தில் லக்னத்துக்கு 4-ம் இடத்தில் செவ்வாய், சூரியன் சேர்க்கை உள்ளது. பெண் ஜாதகத்திலும் அதேபோல் செவ்வாய், சூரியன் சேர்க்கை ஏதாவது ஒரு கட்டத்தில் இருக்க வேண்டும். அவர் தொடர்ந்து அமெரிக்காவில்தான் இருப்பார். திருமணம் இன்னும் 8 மாதங்களில் நடக்கும். கவலைப்பட வேண்டாம்.

சுந்தரம் கண்ணன், ஆண்டாள் சுந்தரம், சென்னை

எங்கள் மகளின் ஜாதகம் அனுப்பியுள்ளோம். அயல்நாட்டில் பணி புரியும் அவளுக்குத் திருமணம் எப்பொழுது நடைபெறும்?

தங்கள் மகள் வைஜெயந்திக்கு 2011 நவம்பர் - டிசம்பரில் திருமணம் நடக்கும். இது ஒரு யோக ஜாதகம். கவலைப்பட வேண்டாம்.

அக்ஷய லிங்கம், சென்னை.

என் மகனுக்கு வயது 40. இன்னும் திருமணம் நடக்கவில்லை. எப்பொழுது திருமணம் நடக்கும். ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமா?

தங்கள் மகனுக்கு கடக லக்னம். தற்போது குரு தசையில் சனி புக்தி நடைபெறுகின்றது. அவருக்கு நிச்சயம் திருமணம் நடக்கும். இன்னும் ஒரு வருடத்துக்குள் திருமணம் நடந்து விடும்.

செல்வம்,

அருப்புக்கோட்டை

என் மகனுக்கு வயது 33. திருமணம் எப்போது நடக்கும்? தோஷம் ஏதேனும் உள்ளதா? என்ன பரிகாரம் செய்ய வேண்டும்?

தங்கள் மகனுக்கு செவ்வாய்தோஷம்



உள்ளது. காலசர்ப்ப தோஷமும் உள்ளது. சிதம்பரத்தில் உள்ள தில்லைக் காளி கோயிலுக்கு அமாவாசை நாளன்று சென்று நல்லெண்ணெய் அபிஷேகம் செய்து வழிபடவும். திருமணம் நடக்கும்.

வைதேகி, சென்னை - 33

ஜோதிட ரீதியாக தங்கத்தின் விலையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட

ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



ராதிகா கணேஷ், சென்னை - 61

எனக்கு வயது 38. கடந்த 8 வருடத்தில் எனக்கு 3 முறை ஆபரேஷன் நடந்து விட்டது. இனி ஆரோக்கியம் எப்படி இருக்கும்? மீண்டும் சர்ஜரி நடக்குமா?

நடக்காது. கவலைப்பட வேண்டாம். இனிமேல் உங்கள் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தவறாமல் தினமும் காக்கைக்கு அன்னம் வைக்கவும். ஒரு முறை திருநள்ளாறு, வைத்தீஸ்வரன் கோயில் ஆகிய ஸ்தலங்களுக்குச் சென்று வாருங்கள்.

காக்கைக்கு அன்னமிடுங்கள்!

வாய்ப்பு உள்ளதா?

குரு வக்கிர கதியில் உள்ளதால் இந்த ஆண்டு நவம்பர் 11 வரை தங்கத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்படும். அதன் பிறகு ஏறிக் கொண்டே போகும். 2012-ல் வரலாறு காணாத அளவுக்குத் தங்கத்தின் விலை பன்மடங்காக உயரும். இந்த ஆண்டு தீபாவளி போனசை தங்கத்தில் முதலீடு செய்து விடுங்கள்.

மாரிமுத்து, கோவிந்தபுரம்

என் மகனுக்கு வயது 37 ஆகிறது. இன்னும் திருமணம் ஆகவில்லை. நல்ல படிப்பு, நல்ல உத்தியோகம் எல்லாம் இருந்தும் திருமணம் தாமதமாவது ஏன்?

ஏழுக்குடைய சூரியன் நவாம்சத்தில் நீச்சம் அடைந்துள்ளதால் திருமணம் தாமதமாகின்றது. தங்கள் ஊருக்கு அருகிலுள்ள சூரியனார் கோயிலுக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் சென்று வழிபடவும். தினமும் ஆதித்ய ஹ்ருதயம் படித்து வந்தால் வருகிற தை மாதம் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது.

உங்கள் கேள்விகளை ஜாதகக் குறிப்போடு 'பளிச் பரிகாரம்' என்று குறிப்பிட்டு அனுப்புங்க...
kalki@kalkiweekly.com க்கும் அனுப்பலாம்.

'கவிதை கஃபே'யில் சப்ளை செய்த ஒவ்வொரு பதார்த்தமும் அர்த்தத்தைப் புலப்படுத்தி அதிசயத்தன!

- 'இனாம்' கேசவன், குருமலை

பாலிடிக்ஸ் பஜார் ரொம்பவே சூடாய் இருந்தது. அதிலும் ''வில்லனை உருவாக்காதே'' - தே.மு.தி.க.வை. ஓரம் கட்ட 'ஜெ' எடுத்த நடவடிக்கை சரியாக இருக்கு.

- வே.முருகேசன், சென்னை

ஆண்கள் அரியணையில் அமர்ந்தாலும், அதிரடி முடிவுகள் 'அடுக்களையில்'தான் உருவாகும் என்பது ஸ்டாலின் விஷயத்திலும் உண்மைதானே?

- வி.ஜி.சத்தியநாராயணன், நங்கநல்லூர்

வேண்டாம் கூட்டுறவு மருந்துக் கடை என்ற தராசின் கருத்தை நான் மறுக்கிறேன். மக்களின் பேராதரவையும் நம்பிக்கையையும் பெற்று பல ஆண்டுகளாக சேலம் பொன்னி கூட்டுறவுச் சிறப்பங்காடியின் மருந்துக் கடையை நாங்கள் சிறப்பாக நடத்தி வருகிறோம். விற்பனை விலையில் 15 சதவிகிதம் தள்ளுபடியும் தருகிறோம். எங்களைப் போலவே எல்லாக் கூட்டுறவு மருந்துக் கடைகளும் மக்களிடம் நற்பெயர் ஈட்டும் என நம்புவோம்!

- இ.இளங்கோ, சேலம்

'அருள்வாக்கு' பகுதியில் காஞ்சி பெரியவாளின் 'மௌனமாய் இரு' என்ற உபதேசம், இக்கலிகாலத்துக்கு மட்டுமல்ல எக்காலத்துக்கும் பொருந்தும்.

- நென்மேலி ஆர்.நந்தகுமார், தி.மலை

செல் ஆனந்த் கார்ட்டூன் விளையாட்டுத் துறை விற்பன்னர்களின் சாதனைகளை விளையாட்டுக்காகக்கூட பாராட்ட மனமற்றவர்களுக்குச் சரியான பதிலடி.

- நித்யாவேங்கடேஷ், சென்னை

'கோசாலையில் தேசிய பசு' கட்டுரை படித்ததும் கோவிந்தபுரம் ஸ்ரீ விட்டல் ருக்மிணி சன்ஸ்தான் நடத்தும் கோசாலையைத் தரிசிக்க வேண்டும் என ஆசை ஏற்பட்டு விட்டது.

- என் சீத்தாலெட்சுமி, அண்ணாநகர்

'உறவுகள் தொடர்கதை' உணர்ச்சிகளின் கலவை. கதாசிரியர் பாராட்டுக்குரியவர்.

- நித்யா, ஜமீன்பல்லாவரம்

ஞாநியின் 'ஓ' பக்கங்கள் 'ஓ' போட வைக்கின்றன.

- ஆர்.தனபால், சென்னை

தூளாயிருக்கு...

சனிக்கிழமை தோறும் விட்டல்தாஸ் ஜெயகிருஷ்ண தீட்சிதரின் பஜனையை டி.வி.யில் கேட்டாலும், அவரைப் பற்றிய விவரங்கள் அறிய முடியவில்

லையே என்கிற ஆதங்கத்தை கல்கி தீர்த்து வைத்துவிட்டது.

- ஆர்.ரங்கநாதன், சென்னை - 17

கோவிந்தபுரம் ஹைலைட்ஸ், இருட்டில் உள்ளவர்களுக்குக் கிடைத்த ஃப்ளட் (flood) லைட்ஸ் போல.

- கே.ராஜகோபால், சென்னை - 24

விமர்சனம் சிறிது சிறிது என்றாலும் 'இனிது இனிது' விமர்சனம் சரியாகக் கச்சிதமாக எழுதப்பட்டிருந்தது. தூள்!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

'**அ**வரைப் போய் எப்படிச் சந்தேகப் பட்டாங்க? ரொம்பக் கஷ்டமா இருக்குதுங்க. அவர் நம்ம ஆனந்துங்க!' என்ற பாஸ்கரன் அதிபனின் குருபக்தியைக் காட்டியிருக்கிறார்.

- பா.ராம்பிரசாத், ஜமீன் பல்லாவரம்

'**அ**ரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு எனில் பொருத்தமாக இருக்கும்' என்ற கார்த்தியின் கருத்து கவனிக்க வேண்டிய கருத்து.

- எஸ்.உஷா சுதர்சன், திருச்செங்கோடு

வி.எஸ்.நரசிம்மன் கர்நாடக இசையில் மேற்கத்திய இசையைப் புகுத்தியதுடன், அடக்கத்துக்கு இருப்பிடமாய் இருக்கிறார் என்பது ஆச்சரியப்பட வைக்கிறது.

- ஜே.துரை ராஜ், சென்னை





எந்திரன் படம் வெள்ளித்திரையில் வருவதற்கு முன்பே நீங்க 'எந்திரன்' பார்க்கணுமா? அப்போ, எங்க க்ளாஸ்க்கு வாங்க, நாங்க உருவாக்கி இருக்குற எந்திரன்களைப் பாருங்க எனச் சுட்டி ஷங்கர்கள் அழைப்பு விடுக்க, அவர்கள் உருவாக்கி இருக்கும் எந்திரன்களைப் பார்த்து அசந்தே போய்விட்டோம்! சென்னையைச் சேர்ந்த Techknowledge education என்ற அமைப்பு, பள்ளிக் குழந்தைகளுக்கும், கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் எந்திரனை உருவாக்கும் தந்திரத்தைச் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

''கொஞ்சம் அறிவியல், கொஞ்சம் தொழில்நுட்பம், கொஞ்சம் கணிதம், கொஞ்சம் பொறியியல்... இவை எல்லாம் சரியான விகிதத்தில் கலந்தால் ஒரு ரோபோவைத் தயாரித்துவிடலாம். இதுவரை நாங்கள் சென்னையில் நடத்திய ரோபோடிக்ஸ் வகுப்புகளுக்கு ஏகோபித்த ஆதரவு கிடைத்திருக்கிறது. 'lego kits' சாதனங்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்து ரோபோக்களை உருவாக்கச் சொல்லிக் கொடுக்கிறோம்.

ஒரு சிறிய ரோபோடிக் கார் உருவாக்க ஐந்து முதல் பத்து நிமிடங்கள் ஆகும். ஒரு மனித ரோபோவை உருவாக்கப் பத்து மணி நேரங்கள் ஆகும். பொழுதுபோக்குவதற்காக ரோபோ வகுப்புகளில் சேர்ந்தவர்கள் தங்களது அறிவியல் திறமை, கலைத் திறமை, வடிவமைக்கும் திறமை என எல்லாமே கண்கூடாகக் கண்டிருக்கிறார்கள். 'இது நாங்கள் உருவாக்கிய ரோபோ' என்று சொல்லிக்கொள்வதில் ஒரு தனிப் பெருமிதம் அவர்களுக்கு. பெற்றோர்களுக்கும் தங்கள் பிள்ளைகள் ஒரு புதிய தொழில்நுட்பத்தை வெகு சுலபமாகக் கற்றுக்கொண்டு விட்டார்களே என்ற வியப்பு. இப்படி 'எந்திரன்' சொல்லிக்

எந்திரன்



ஸ்பெஷல்







‘ரோபோ’ படிக்கலாம் வாங்க!

கொடுக்கும் பாடங்கள் எத்தனை எத்தனையோ...'' என்கிறார்கள் இந் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள்.

ரோபோடிக்ஸ் வகுப்புகளுக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்து சென்னையில் சில பள்ளிக் கூடங்கள் எங்கள் பள்ளி மாணவர்களுக்கும் ரோபோ பாடங்கள் சொல்லித் தாருங்கள் என்று விடுத்த அழைப்பை ஏற்று இன்று கம்பீரமாக வெற்றி நடை நடந்துகொண்டிருக்கிறது 'ரோபோ' வகுப்புகள்.


- நளினி சம்பத்குமார்



சமீபத்தில் ப்ரியங்கா காந்தி தன் ஹேர் ஸ்டைலை மாற்றிக்கொண்டு இருக்கிறார். ஒரு மாதிரி பாப் செய்த முடியோடு எங்கும் வலம் வரும் ப்ரியங்கா, சமீபத்தில் தமது தந்தை ராஜீவ் காந்தியின் பிறந்த தினத்துக்கு வீர் பூமிக்கு வந்திருந்தார். புதிய ஹேர் ஸ்டைல், பாட்டி இந்திரா காந்தியை ஞாபகப்படுத்தியது! நேரடி அரசியலுக்கு அச்சாரம்?

நியூஸ் மிக்சர்

காட்பாதர் படத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். கமலின் நாயகன் முதற்கொண்டு ஏராளமான படங்களுக்கு மூலகர்த்தா, கப்போலாவின் காட்பாதர். இந்த ஆண்டு, ஆஸ்கர் வாழ்நாள் சாதனையாளர் விருது ஃபிரான்சிஸ் போர்ட் கப்போலாவுக்கு வழங்கப்பட இருக்கிறது.





முதன் முதலில் இணையத்தில் வலைப்பூவை சீரியலாக எழுதிய சினிமாக்காரர் அமிதாப். ஒவ்வொரு நாளும் புதிய செய்திகளை எழுதி வந்தவரை, நம்ம மக்கள் சும்மா விடுவார்களா? இதுதான் சாக்கு என்று அவரது வலைப்பூவில் கமெண்ட் போட்டே ஒருவர் ரப்சர் செய்திருக்கிறார். அமிதாப், ''இவர் தேவையில்லாமல் என்னைப் பற்றி எல்லா அவதூறுகளையும் என் வலைப் பூவில் எழுதுகிறார்'' என்று வருத்தப்பட்டிருக்கிறார். சமீபத்தில், தொல்லை தாங்காமல், சைபர் கிரைம் போலீஸ் புகார் கொடுக்கவேண்டி வந்து விட்டதாம்!



ராம் கோபால் வர்மாவின் அடுத்த தெலுங்கு படத்தை ஸ்ரீதேவியும் நாகார்ஜுனாவும் தொடங்கிவைத்தார்கள். ''என்னைத் திரைப்படம் எடுக்க வைத்த நாக்கும் திரைப் படங்களைப் பார்க்க வைத்த ஸ்ரீதேவியும் இன்று இருப்பது மகிழ்ச்சியானது'' என்று டிவிட்டரில் கூவினார் ராம் கோபால். ஸ்ரீதேவி அடித்த விசில் உங்களுக்கும் கேக்குதா?



சம்பளம் வேண்டாம்!



''சீரியலான படங்களுக்கு ஆர்டிஸ்டுகள் சம்பளமே வாங்கக்கூடாது. அப்போதுதான் நல்ல படங்கள் ஓடும்'' என்று பொன்முத்து உதிர்த்தவர் பிபாஷா பாசு. காஷ்மீர் பிரச்னையைப் பற்றிய லம்ஹாவில் பிபாஷா நடித்தார். படம் ஃப்ளாப். அடுத்து, கௌரவக் கொலைகளைப் பற்றிய படமான ஆக்ரோஷில் நடிக்கிறார். இப்படியெல்லாம் பேசினால் கிளாமர் இமேஜ் போய்விடுமா என்ன?

- துளசி



எவர் கிரீன் எய்ட்டீஸ்!

மலரும் நினைவுகள்

எண்பதுகளில் தென்னிந்திய திரைத்துறையில் ஜோடி சேர்ந்து கலக்கிய நட்சத்திரங்களின் சங்கமத்தை ஏற்பாடு செய்திருந்தனர் சுஹாசினி மணிரத்னமும் லிசி ப்ரியதர்ஷனும். சங்கமத்தின் மெயின் அட்ராக்ஷன் புதிதாக கட்சி ஆரம்பித்து ஆந்திராவைக் கலக்கும் சிரஞ்சீவிதான். இனி ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு மாநிலங்களில் சந்திக்க வேண்டும் என்ற சத்யப்பிரமாணத்தோடு கலைந்து சென்றிருக்கின்றனர் நட்சத்திரங்கள்.

மங்கையர் மலரின்
திருமண மலர்



திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ.500/-
30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.15/-
வண்ணத்தில் ஹைலைட் செய்ய கூடுதல் கட்டணம் ரூ.100/-

இதழுடன் சேர்த்து இணையதளத்திலும் (www.mangayarmalaronline.com) வெளியிட கூடுதல் கட்டணம் ரூ.100/- மட்டுமே!

1"x1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ.800/-
(அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ.15/-

வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க Profile விளம்பரம் ரூ.2500/-

வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.

கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை காசோலையாக, வெளியூர் டிமாண்ட் டிராஃப்டாகவோ, **மங்கையர் மலர்** என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்

47-ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-600 032.
தொலைபேசி : 4343 8866   Fax : 044 - 4343 8899
email : marketing@kalkiweekly.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 ... 44 / 09 - 11" Lice...
post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09-11 Registered as a Newspaper in Sri...

